மனீஷாபஞ்சகம்

பிரம்மஸ்ரீ தேதியூர்
சுப்பிரமணிய சாஸ்திரிகளால்
மதுரையில் செய்யப்பட்ட உபந்யாஸங்களின்
ஸங்கிரஹம்.

ஸ்ரீரங்கம் :
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1921

முகவுரை.

இச்சிறு நூலானது நமது பரமாசார்யர்களான ஸ்ரீமத்சங்கரபகவத்பாதாசார்யரவர்களால் லோகாநுக்ரஹார்த்தம் இயற்றப்பட்ட அநேக சிறு நூல்களில் ஒன்று. அவர்கள் பரம அத்புதமான அத்வைத வேதாந்த சாஸ்திரத்தை யாவரும் எளிதிலறியும்படி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிக்காட்டியுள்ள பற்பல சிறிய ரத்னங்களுள் இது விலையில்லா மாணிக்கம். இதிலுள்ள ஐந்து சுலோகங்களுக்குள் அதிரஹஸ்யமான அத்வைத தத்வங்களையெல்லாம் போதிப்பித்திருக்கிறார்கள். இத்தகைய விலை மதிக்கவொண்ணாத கிரந்தத்தை ஸம்ஸ்கிருதப்பயிற்சியில்லாதவர்களும் நன்கறியும்படி பிரம்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரிகள் மதுரையில் அவர்கள் செய்த பிரஸங்கங்களில் தமிழில் செம்மையாக உபந்யாஸம் செய்து விளக்கினார்கள். அவ்வுபந்யாஸங்களை கேட்டவர்களில் பலர் அவைகளை ஸங்கிரஹம் செய்து புத்தகரூபமாக வெளியாக்கவேணுமென்று கேட்டுக்கொண்டதின் பேரில்

இப்புத்தகம் வெளியாக்கப்பட்டது. இதை ஆஸ்திகர்களான யாவரும் வாசித்து பயன் படுவார்களென நம்புகிறோம். இன்னும் ஸ்ரீமதாசார்யபகவத்பாதாளியற்றியுள்ள அருமையான பிரகரணங்களையெல்லாம் ஒவ்வொன்றாக இம்மாதிரியே தமிழில் எளிதான நடையில் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்கள் பிரசுரம் செய்யுமாறு வேண்டுகிறோம்.

டீ. கே. பாலஸுப்பிரமணியம்.

॥ श्रीसच्चिदानन्दशिवाभिनवनृसिंहभारतीस्वामिनः ॥

॥ श्रीः ॥

॥ ओं नमः परमगुरुभ्यः ॥

மனீஷாபஞ்சகம்.

स्वप्रकाशचिदानन्दसदैकरसरूपिणे ।
नित्यशुद्धनिराभासकूटस्थायात्मने नमः ॥

𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑌦𑍈𑌕𑌰𑌸𑌰𑍂𑌪𑌿𑌣𑍇 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑌨𑌿𑌰𑌾𑌭𑌾𑌸𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃 ॥

स्वप्रकाशचिदानन्दसदैकरसरूपिणे, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑌦𑍈𑌕𑌰𑌸𑌰𑍂𑌪𑌿𑌣𑍇, ஸ்வயமாகவே பிரகாசிக்கும் தன்மையோடு கூடினதாயும், ஞானஸ்வரூபமாயும், ஆனந்தவடிவமாயும், சென்றகாலம் நிகழ்காலம், வருங்காலம் என்ற முக்காலத்திலும் அழிவில்லாமலிருக்கும் தன்மையோடு கூடின இன்பமான வடிவுள்ளதாயும்; नित्यशुद्धनिराभासकूटस्थाय, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧-

நிராஹாஸ கூடஸ்தாய, முக்காலத்திலும் தள்ளத்தகாததான நிர்மலஸ்வரூபத்தைத்தவிர வேறுபடாத பிரகாசரூபமாயும், விகாரமற்றதாயும் இருக்கிற; आत्मने, ஆத்மநே, ஸகல ஜகத்தின் உள் அந்தர்யாமியாய் விளங்கிவரும் ஆத்மஸ்வரூபத்தின் பொருட்டு; नमः, நம:, நமஸ்காரம்.

தாத்பர்யம்:— இவ்வுலகில் எவ்வித காரியத்தைச் செய்ய ஆரம்பம் செய்தாலும் நம் பெரியோர்கள் அக்காரியம் இடையூறில்லாமல் மங்களத்தோடு முடிவு பெறுமாறு, தம் இஷ்டதேவதையை வந்தனம் செய்துகொண்டே எண்ணின காரியத்தை ஆரம்பிக்கும் மரியாதை யாவருக்கும் தெரிந்த விஷபம். அப்பெரியோர்களும், समाप्तिकामो मङ्गलं आचरेत, ஸமாப்திகாமோ மங்களம் ஆசரேத, அதாவது, காரியத்தின் முடிவை இச்சிக்கிறவன் இஷ்ட தேவதையை நமஸ்கரிக்கின்றதான மங்களத்தைச் செய்யட்டும் என்ற பிரமாணத்தை நம்பித்தான் காரியத்தின் ஆரம்பத்தில் இஷ்டதேவதையை நமஸ்கரிக்கின்றார்கள். அவ்விதமே, சுத்த அத்வைதமதஸித்தாந்த ஸாரஸங்கிரகத்தை நன்றாய் விளக்கும் இந்த கிரந்தத்தை ஆரம்பித்தவரான வித்வானும் தன் இஷ்டதேவதையை முதல் சுலோகத்தால் நமஸ்கரிக்கின்றார். அதாவது இந்த கவியானவர் அத்வைதமதஸித்தாந்தத்தைக் கைக்கொண்டவராகையால், அன்னகோச, பிராணகோச, மனோகோச, விக்ஞான

கோச, ஆனந்தகோசமென்ற பஞ்சகோசங்களைக்காட்டிலும் வேறுபட்டதான தனது ஆத்மஸ்வரூபத்தில், ஸகலமான இவ்வுலகம் பழுதையில் பாம்பைப்போல் கற்பிக்கப்பட்டதென்றும், தனது ஸ்வரூபத்தைத்தவிர வேறு வஸ்து இருப்பதாகத்தோன்றாத சிறந்த வேதாந்த ஸித்தாந்த அனுபவத்தையடைந்தவ ராகையால், தனது ஸ்வரூபத்தையே நமஸ்கரித்துக் கொள்ளுகிறார். அதாவது, தனது ஸ்வஸ்வரூபத்தை அநுஸந்தானம் செய்துகொள்ளுகிறார். அதாவது, நான் ஸ்வப்ரகாசன், ஞானமயன், ஸுகமயன், அழிவில்லாதவன், இல்லை யென்ற சப்தத்தால் சொல்லத்தகாதவன், மலரஹிதன், என்னைத்தவிர வேறுபடாத பிரகாசமயன், நிர்விகாரன், இது தான் என் வாஸ்தவஸ்வரூபம், நான் தான் பிரஹ்மம், பிரஹ்மந்தான் நான், என் ஸ்வரூபத்தைத்தவிர வேறொன்றும் எக்காலத்திலும் இல்லை, என் ஸ்வரூபத்தை தெரிந்துகொள்ளாதவனுக்கு, பழுதையின ஸ்வரூபத்தை தெரிந்துகொள்ளாதவனுக்கு, அதில் பாம்பு தோன்றுவதுபோல், என்னிடத்தில் இவ்வுலகம் தோன்றுமே தவிர, என் ஸ்வரூபத்தை மேற்கண்ட பிரகாரம் தெரிந்துகொண்டவனுக்கு, பழுதையின் ஸ்வரூபத்தை தெரிந்துகொண்டவனுக்கு பாம்பு தோன்றாதது போல், இவ்வுலகம் தோன்றாது. நிர்விகாரஸ்வரூபியான நான் ஒருவன் தான் பிரகாசிப்பேன். நான் தான் பிரஹ்மம் என்று கவியின் அனுபவம்.

आनन्दघनमद्वन्द्वं निर्विकारं निरञ्जनम् ।
भजेऽहं भगवत्पादं भजतामभयप्रदम् ॥

𑌆𑌨𑌨𑍍𑌦𑌘𑌨𑌮𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌂 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌮𑍍 ।
𑌭𑌜𑍇𑌽𑌹𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌂 𑌭𑌜𑌤𑌾𑌮𑌭𑌯𑌪𑍍𑌰𑌦𑌮𑍍 ॥

आनन्दघनम्, 𑌆𑌨𑌨𑍍𑌦𑌘𑌨𑌮𑍍, ஆனந்தக்கட்டியாயும்; अद्वन्द्वम्, 𑌅𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍍, இரண்டற்றதாயும்; निर्विकारम्, 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌮𑍍, பிறப்பு, இருப்பு, வளர்ச்சி, மாறுபாடு, குறைவு, மரணம், என்னும் ஆறுவிதமான விகாரமற்றதாயும்; निरञ्जनम्, 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌮𑍍, அழுக்கில்லாததாயும்; भजताम्, 𑌭𑌜𑌤𑌾𑌮𑍍, தன்னை ஆச்ரயித்தவர்கட்கு; अभयप्रदम्, 𑌅𑌭𑌯𑌪𑍍𑌰𑌦𑌮𑍍, மிருத்யுபயத்தை நிவர்த்தி செய்கிறதாயுமிருக்கிற; भगवत्पादम्, 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍍, பகவத்பாதாள் என்ற ஒரு தேஜஸ்ஸை; अहं, 𑌅𑌹𑌂, நான்; भजे, 𑌭𑌜𑍇, பூஜிக்கிறேன்.

முன் சுலோகத்தால் தன் ஆத்மஸ்வரூபத்தைத்தவிர வேறான வஸ்து இல்லாதபடியால் ஆத்மாவையே அநுஸந்தானம் செய்துகொண்டார் கவி யென்று தாத்பர்யம் கூறப்பட்டது. ஆகிலும், கற்பனை, வியவஹாரம், உண்மையென்ற மூன்று விதமான அவஸ்தைகளில், உண்மையென்ற மூன்றாவது அவஸ்தையில், முன் சுலோகத்தில் கூறிய பிரகாரம் தனது ஆத்மஸ்வரூபத்தைத்தவிர வேறு வஸ்துவில்லாவிடினும், வி-

பவகாரம் என்ற அவஸ்தையில் ஆத்மாவைத் தவிர இரண்டாவதும் தோன்றுகிறபடியாலும், அந்த வியவகாரம் பெரும்பாலும் உலகில் விளங்கி வருகிறபடியாலும் அதை அநுஸரித்து தன்னைக்காட்டிலும் வேறு வஸ்துவை தனக்கு பூஜ்யமாய் பாவித்து, அதிலும் இக்கவியானவர் எந்த மகானுடைய 'மனீஷாபஞ்சகம்' என்ற வாக்கின் அபிப்பிராயத்தை வெளியாக்க விரும்பினவரோ அந்த மகானுன ஜகத்குருவான ஸ்ரீ சங்கரகுருவே பூஜ்யமென்ற எண்ணத்துடன் அவரை பஜித்து வருகின்றார். அதாவது, ஸகல வேதாந்தத்திலும் கூறப்படுகின்றதான ஆனந்தம்தான் சரீரத்தோடு எல்லாரும் பார்க்கும்படி வெளியாய் வந்திருக்கிறதோ என்று தோன்றக்கூடியதாயும் எவ்விதத்திலும் தன்னை த்தவிர வேறு ஜகத்தில்லை யென்ற அனுபவத்தை ஸகலருக்கும் தோன்றும்படியான மூர்த்தியாயும், பிறப்பு, இருப்பு, வளர்ச்சி, மாறுபாடு, குறைவு, மரணம் என்ற ஆறுவிதமான விகாரமும் தன்னைச்சேர்ந்ததல்ல என்ற அனுபவவடிவாயும், அஞ்ஞானமாகிற அழுக்கோ, அதினுல் கல்பிக்கப்பட்டதான புத்திரன், பணம் ஸ்திரீ, என்ற பந்தமோ இவைகளைத்தள்ளின சித்ரூபமாயும், தன்னை அண்டின சிஷ்யர்களுக்கு ஸம்ஸாரமாகிற மிருத்யுவால் உண்டாகும் பயத்தைப்போக்கடித்து தன்னைப் போல் அவர்களையும் செய்யக்கூடிய வைபவமுள்ளதாயும், ஸ்ரீபகவத்பாதாள் என்ற பெயரால் உலகம் எங்கும்

பிரசித்தி பெற்றதாயும் இருக்கிற ஸ்ரீபரமசிவனுடைய ஒரு தேஜஸ்ஸை நான் எக்காலத்திலும் நினைக்கிறேன்.

இவ்வுலகில் அநேகவிதமான அனர்த்தங்களாகிய திமிங்கிலங்களுக்கு இருப்பிடமான ஸம்ஸாரம் என்ற ஸமுத்திரத்தில் முழுகிக்கொண்டு கரையேறும் வழியை க்கண்டுபிடிக்காமல் தத்தளித்துக்கொண்டு இருக்கும் ஜீவகோடிகளின் கஷ்டத்தைப்பார்த்து, கருணைக்கிருப்பிடமான ஸாக்ஷாத்பரமசிவன் எவ்விதத்திலும் ஜீவகோடிகளை ஸம்ஸாரமாகும் ஸமுத்திரத்தினின்றும் கரையேற்றிவிட்டு, அவர்களை பரமானந்தலாபத்தை யடையும்படி செய்யவேண்டியது கருணைக்கிருப்பிடமான நமுடைய கடமையல்லவா வென்று ஆலோசித்து, ஸம்ஸார ஸமுத்திரத்தினின்றும் கரையேறும் உபாயமான தத்வஞானம் என்ற தோணியை பூலோகத்தில் ஆங்காங்கு ஸ்தாபனம் செய்ய, கேரள தேசத்தில் காலடி என்ற செழிப்பான அக்ரஹாரத்தில் சிவகுரு என்ற மகா ப்ராஹ்மணனுடைய பத்னியான ஸதி என்ற மகா பதிவிரதையினிடத்தில் மனுஷிய வடிவாக அவதரித்தார் என்பது ஸ்ரீசங்கரவிஜயம் என்ற நூலில் கூறப்படுகிறது. அவ்விதம் அவதாரம் செய்த பரமசிவனுக்கு மூன்றுவது வயது முடியுங்காலத்திற்குள் ஸகல வித்யைகளுடைய பரிஞ்ஞானமானது உண்டானதோடுங்கூட, பிதாவான சிவகுருவும் பரமசிவனைப் புத்ரனாய் அடையும்படி பாக்கியத்தைச் செய்திருந்தும்

அவ்வித புத்ரனுடைய வைபவத்தைப்பார்த்து ஆன ந்திக்க பாக்யஹீனனுய் லோகாந்தரம் சென்றூர். பகவான் தன்னைப்பார்த்தவர்களுக்கு (शंकरः, शं, ஸம், ஸுகத்தை, करोति, கரோதி, செய்கிறூர், என்றபடி) ஸுகத்தை செய்து வந்தபடியால் சங்கரன் என்ற பெயருடன் பிரகாசித்துக்கொண்டு தன்னுடைய மாதாவை பரிபாலனம் செய்து வருவதோடுகூட அந்த அக்ரஹாரத்தில் அபர சூரியனைப்போல் விளங்கி வந்தார். இவ்விதம் விளங்கி வரும் சங்கருக்கு ஐந்தாவது வயதில் சாஸ்திரப்பிரகாரம் உபநயநம் கிராமத்திலுள்ள ஞாதி ஜனங்களால் நடத்திவைக்கப்பட்டது. ஏழாவது வயது நடை பெறும்பொழுது இவ்வுலகில், தீவிரமான வைராக்கியமும், உலகம் நச்வரம் (அழிவுள்ளது) என்ற அறிவும் உண்டாய் வேதாந்த விசாரத்திற்கு அந்தரங்க உபாயமான ஸந்யாஸத்தை ஸ்வீகரித்துக் கொண்டு, ஸத்குருவினுடைய அநுக்ரஹத்தால் ஆத்மஞானத்தையடைய தீர்மானித்து, ஸந்யாஸத்திற்கு தனது மாதாவை அநுமதி தரவேண்டுமென்று பிரார்த்தித்தார். தந்திரமான ஒரு உபாயத்தால் மாதாவினுடைய அநுமதியைப் பெற்றுக்கொண்டு ஸந்யாஸாச்ரமத்தை யடைந்து சாஸ்திரப்பிரகாரம் ஸ்ரீ கோவிந்த பகவத்பாதாள் என்ற பரமகுருவினுடைய அருகில் உபதேசத்திற்காகச்சென்றூர். அவ்வித உத்தம சிஷ்யனை ஸ்ரீ சங்கரரை ஸ்ரீ கோவிந்த

பகவத்பாதாள் என்ற பரமகுருவும் ஸ்வீகரித்துக்கொண்டு நான்கு வேதங்களுடைய ஸாராம்சமான நான்கு மகா வாக்கியங்களை பிரீதியுடன் உபதேசித்து வேதவியாஸாசாரியரால் செய்யப்பட்ட பிரஹ்ம ஸூத்ரங்களுக்கு பாஷ்யம் செய்ய நீ ஒருவன்தான் வல்லவன். வியாஸருடைய அபிப்பிராயமும் உன் அபிப்பிராயமும் ஒன்று என்பதை நான் அறிந்து கொண்டவன். ஸர்வக்ஞனே நீ காசீ க்ஷேத்திரம் சென்று, நான் சொன்னப்பிரகாரம் பிரஹ்மஸூத்ரபாஷ்யத்தைச்செய்து, அதை உலகத்தில் பிரஸித்தியாகும்படி பிரகடனமும் செய்ய அநேக சிஷ்யர்களையும் ஸ்தாபநம் செய்து வா என்றும் ஆக்ஞாபித்தார். ஸ்ரீசங்கரரும் குருவினுடைய கட்டளைக்கிணங்கி, காசி க்ஷேத்திரம் சென்று பஞ்ச மஹாபாதகங்களைக் கண்டமாத்திரத்தால் போக்கடிக்கும் தன்மையுள்ள கங்கையில் தினந்தோறும் ஸ்நாநம் செய்துகொண்டு, ஸ்ரீவிசுவநாதனை தரிசனம் செய்வதோடுங்கூட வியாஸருடைய அபிப்பிராயம் எவ்விதம் என்று கண்டுபிடிக்க ஸமாதியில் ஸ்ரீ விசுவநாதனை தியாநம் செய்துகொண்டு வந்தார். இவ்விதமிருக்க ஸனந்தனர், ஆனந்தகிரி, சித்ஸுகர் என்ற மூன்று உத்தம சிஷ்யர்களும் ஸ்ரீசங்கரகுருவினுடைய பாதாரவிந்தத்தில் தத்வோபதேசத்திற்காக வந்து சேர்ந்தார்கள். அவர்களையும் சிஷ்யர்களாக அங்கீகரித்துக்கொண்டு ஸ்ரீசங்கர குருவானவர்

தன் குருவான ஸ்ரீ கோவிந்தபகவத்பாதாளால் உபதேசிக்கப்பட்ட நான்கு மஹாவாக்யங்களுடைய அர்த்தங்களை தன் சிஷ்யர்களுக்கு விபரமாய் உபதேசித்துக்கொண்டுவரும் சமயத்தில், ஒரு தினம் பகல் சுமார் 12 மணிக்கு, அதாவது மாத்யான்ஹிக காலத்தில் ஸ்நாநம், அநுஷ்டானம் இவைகளைச்செய்வதற்காக சிஷ்யர்களோடு கங்கையைக் குறித்துப் போகும் வழியில், இந்த சங்கர குருவினால் தினந்தோறும் ஸமாதியில் தியானம் பண்ணப்பட்ட ஸ்ரீவிசுவநாதனே ஸ்ரீசங்கர குருவினுடைய அத்வைதஸித்தாந்த அநுபவஸாரத்தை ஸ்ரீசங்கர குருவினுடைய வாக்கில் நின்றும் வெளிப்படுத்தி, அதனால் ஸகலஜனங்களுக்கும் மிகுந்தச்ரேயஸ்ஸைச்செய்யவேண்டுமென்ற கருணையோடுகூட ஸ்ரீசங்கர குருவினிடத்தில் மிகுந்த பூஜ்யபாவத்தை பிரசுரம் செய்யுமாறு, சண்டாளவேஷம்பூண்டு தன் உண்மையான ஸ்வரூபத்தை விளக்கிக்காட்டுகிறதான நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாகச்செய்துகொண்டு ஸ்ரீசங்கர குருவிற்கு எதிராக வந்தனர். இவ்விதம்வரும் நான்கு நாய்களோடு கூடின சண்டாளனைப்பார்த்து ஸர்வக்ஞரான சங்கர குருவும் லோகாசாரத்தைக்காப்பாற்றத் தானும் அவ்விதம் செய்யவேண்டுமென்ற பாவனையோடு, ஹே, சண்டாளா! நான் பிராஹ்மண ஸந்யாஸியல்லவா? நீ கீழ் குலத்தில் பிறந்தவனல்லவா? இவ்விதமிருக்க

நீ என் அருகில் வரக்கூடாதவன், தூர விலகிப்போ, தூரவிலகிப்போவென்று கோபத்துடன் சொன்னார். அதைக்கேட்டு அந்த சண்டாளன் பதில் கூறினதாவது:—

अन्नमयादन्नमयमथवा चैतन्यमेव चैतन्यात् ।
यतिवर दूरीकर्तुं वाञ्छसि किं ब्रूहि गच्छगच्छेति ॥

𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌾𑌦𑌨𑍍𑌨𑌮𑌯𑌮𑌥𑌵𑌾 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌾𑌤𑍍
𑌯𑌤𑌿𑌵𑌰 𑌦𑍂𑌰𑍀𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌵𑌾𑌞𑍍𑌛𑌸𑌿 𑌕𑌿𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌗𑌚𑍍𑌛-
𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑌿 ॥

यतिवर, 𑌯𑌤𑌿𑌵𑌰, ஹே ஸங்யாஸிகளுக்குள் சிரேஷ்டனே! अन्नमयात्, 𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌾𑌤𑍍, அன்னரஸத்தால் உண்டான சரீரத்தினின்றும்; अन्नमयम्, 𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌮𑍍, சரீரத்தையா, अथवा, 𑌅𑌥𑌵𑌾, இல்லாவிடில்; चैतन्यात्, 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌾𑌤𑍍, சித்ரூபமான ஆத்மாவினின்றும்; चैतन्यमेव, 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌮𑍇𑌵, சித்ரூபமான ஆத்மாவையேதானு; गच्छगच्छेति, 𑌗𑌚𑍍𑌛𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑌿, போ போவென்று; दूरीकर्तुम्, 𑌦𑍂𑌰𑍀𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑍍, தூரவிலக்குவதற்கு; वाञ्छसि, 𑌵𑌾𑌞𑍍𑌛𑌸𑌿, இச்சிக்கிறாய்; किं, 𑌕𑌿𑌮𑍍, என்ன; ब्रूहि, 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 சொல்லு.

தாத்பர்யம்:—ஹே உத்தம ஸங்யாஸியே! வேஷம் ஸங்யாஸியாயிருந்தும் ஆச்ரமத்திற்கேற்ற அநுபவம்

சற்றேனும் உன்னிடத்தில் இல்லையென்பது உன் வார்த்தையினின்றும் நிச்சயமாய் தெரியவருகிறது. ஹே சண்டாளா! தூரப்போவென்று சொன்ன உன் அபிப்பிராயம், தேஹத்திற்கும் மற்றொரு தேஹத்திற்கும் சேர்க்கை கூடாதென்பதா! அல்லது ஆத்மாவுக்கும் மற்றொரு ஆத்மாவுக்கும் சேர்க்கை கூடாதென்பதா? முதலாவது அபிப்பிராயம் மிகவும் தப்பு. உலகத்திலொரு மண்ணினின்றும் உண்டான தோண்டி, வாணை என்ற இரண்டு பதார்த்தங்கள் தோண்டி, வாணை என்ற பெயரினால் வேறுபட்டாலும் காரணமான மண்ணை ஆலோசிக்க இரண்டும் எவ்விதம் ஒன்றாகுமோ, அவ்விதமே ஒரே அன்னமென்ற காரணத்தினின்றும் உண்டான உன் தேகம், என் தேகம் என்ற இரண்டுகளும் சண்டாளன், பிராஹ்மணன் என்ற பெயரால் வேறுபட்டாலும் காரணமான அன்னத்தை ஆலோசிக்க ஒன்றல்லவா? தவிர, இந்த தேஹத்திற்கும் இதோ தெரியும் கல்லிற்கும் சற்றேனும் பேதமுண்டா? இந்த தேஹம் ஜடமல்லவா? அந்த ஜடமும் காரணத்தை ஆலோசிக்க ஒன்றேயல்லவா? அவ்விதமிருக்க இரண்டாவதொன்றுண்டு என்றெண்ணி தூரப்போவென்று சொன்ன உன்னுடைய வார்த்தை பெரும் தப்பென்பதற்கு என்னுடன் தொடர்ந்து வரும் இந்த நான்கு நாய்களே சாக்ஷியாகும்.

இரண்டாவது அபிப்பிராயமும், தப்பென்றே தீர்மானம்.

[एको देव: सर्वभूतेषु गूढ: सर्वव्यापी सर्वभूतान्तरात्मा, 𑌏𑌕𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾; एक:, 𑌏𑌕𑌃, ஸகல ஜகத்திலும் அந்தர்யாமி ஒருவன்; देव: 𑌦𑍇𑌵𑌃 ஸ்வயம்பிரகாசரூபி; सर्वभूतेषु, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁, ஸகலப்பிராணிகளிடங்களிலும்; गूढ:, 𑌗𑍂𑌢𑌃, பஞ்சகோசங்களால் மறைக்கப்பட்டவன்; सर्वव्यापी, 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 உள்ளும் வெளியும் நிறைந்தவன்; सर्वभूतान्तरात्मा, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾, ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியான ஆத்மா]

என்ற சுருதியால் சித்ரூபமான ஆத்மா ஒன்றே கூறப்படுகிறபடியாலும், வேதாந்த ஸித்தாந்த அநுபவநிஷ்டர்களுடைய அநுபவமும் அவ்விதமேயானபடியினாலும், ஒரே ஆத்மாவுக்கு விலகுகிறவன் என்றும், விலகச் சொல்லுகிறவனென்றும், இல்லாதபடியால் இரண்டாவது அபிப்பிராயமும் தப்பென்பதற்கு யாதொரு ஸந்தேஹமுமில்லை. தவிர, ஆத்மா எங்கும் நிறைந்த வஸ்துவல்லவா? நான் எவ்வளவு தூரம் விலகினாலும் அங்கேயும் ஆத்மவஸ்து இருக்கின்றதல்லவா? ஒன்றோடும் ஸம்பந்தமில்லாத ஆத்மாவுக்கு

மற்றொன்றோடு சேர்க்கை தான் எவ்விதம் வரும்? இவ்விதமான தாத்பரியங்களை நினைத்ததல்லவா,

[परस्य भावकर्माणि न प्रशंसेन्न गर्हयेत् ।
विश्वमेकात्मकं पश्यन्प्रकृत्या पुरुषेण च ॥

𑌪𑌰𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑍇𑌨𑍍𑌨 𑌗𑌰𑍍𑌹𑌯𑍇𑌤𑍍 । 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍇𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌚 ॥ प्रकृत्या, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾, மாயாவிகாரம் என்றதனாலும்; पुरुषेण, 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣, அந்தர்யாமியினாலும்; विश्वम्, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍍, உலகத்தை; एकात्मकम्, 𑌏𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍, ஒரே ஸ்வரூபமாக; पश्यन्, 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍, அநுபவிக்கிறவனாய்க்கொண்டு; परस्य, 𑌪𑌰𑌸𑍍𑌯, மற்றவனுடைய; भावकर्माणि, 𑌭𑌾𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿, அபிப்பிராயங்களையும் செய்கைகளையும்; न प्रशंसेत्. 𑌨 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑍇𑌤𑍍, சிலாகிக்கவும் கூடாது; न गर्हयेत्, 𑌨 𑌗𑌰𑍍𑌹𑌯𑍇𑌤𑍍 நிந்திக்கவும் கூடாது.

அதாவது ஜடம் சித்தென்று இரண்டு விதமான உலகில், ஜடமான உலகத்திற்கு ஒரே மாயை காரணமாகிறபடியால் ஒரே மாயையான காரணத்தினின்றும் உண்டான இவ்வுலகம் முழுமையும் ஒன்றே. அந்தர்யாமியான ஆத்மாவும் ஒன்றே. தவிர, பிரகாசரூபமான ஆத்மாவில் ஜடமான இவ்வுலகம் கானலில் ஜலம்போல் கற்பிக்கப்பட்டது. கானலில் தோன்றுகிற ஜலத்திற்கு கானலினுடைய ஸ்வரூபத்தை தவிர

வேறு ஸ்வரூபம் எவ்விதம் இல்லையோ, அவ்விதம் ஆத்மாவில் தோன்றும் இவ்வுலகிற்கும் ஆத்மஸ்வரூபத்தை தவிர வேறு ஸ்வரூபம் இல்லை. இவ்விதம் அநுபவத்தையடைந்த யார் யாரை ஸ்துதிக்கவோ நிந்திக்கவோ முடியும் என்று] இவ்விதம் கூறப்படுகிறது.

தவிர, ஒரேவிதமான சைதன்யத்தினுடைய ஸ்வரூபத்தில் பிராஹ்மணனென்றும், சண்டாளனென்றும் பேதத்தைக்கற்பிப்பது சாஸ்திரங்களுக்கு சம்மதமாகுமோ ?

प्रत्यग्वस्तुनि निस्तरङ्गसहजानन्दावबोधाम्बुधौ
विप्रोऽयं श्वपचोऽयमित्यपि महान्कोऽयं विभेदग्रहः ।
किं गङ्गाम्बुनि बिंबितेऽम्बरमणौ चण्डालवीथीपयः-
पूरेवान्तरमस्ति काञ्चनघटीमृत्कुम्भयोर्वाम्बरे ॥

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌨𑌿𑌸𑍍𑌤𑌰𑌂𑌗𑌸𑌹𑌜𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌵𑌬𑍋-
𑌧𑌾𑌂𑌬𑍁𑌧𑍌
𑌵𑌿𑌪𑍍𑌰𑍋𑌽𑌯𑌂 𑌶𑍍𑌵𑌪𑌚𑍋𑌽𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 𑌮𑌹𑌾𑌨𑍍
𑌕𑍋𑌽𑌯𑌂 𑌵𑌿𑌭𑍇𑌦𑌗𑍍𑌰𑌹𑌃 ।
𑌕𑌿𑌂 𑌗𑌂𑌗𑌾𑌂𑌬𑍁𑌨𑌿 𑌬𑌿𑌂𑌬𑌿𑌤𑍇𑌽𑌂𑌬𑌰𑌮𑌣𑍌 𑌚𑌣𑍍𑌡𑌾
𑌲𑌵𑍀𑌥𑍀𑌪𑌯𑌃
𑌪𑍂𑌰𑍇𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌸𑍍𑌤𑌿 𑌕𑌾𑌂𑌚𑌨𑌘𑌟𑍀𑌮𑍃𑌤𑍍𑌕𑍁𑌂𑌭-
𑌯𑍋𑌰𑍍𑌵𑌾𑌂𑌬𑌰𑍇 ॥

प्रत्यग्वस्तुनि, ப்ரத்யக்³வஸ்துநி, பொய்யாயும் ஜடமா மாயும், துக்கரூபமாயும், இருக்கிற இப்பிரபஞ்சத் தைக்காட்டிலும் வேறுபட்டதாயும், முக்காலத்திலும் அழிவில்லாததாயுமிருக்கிற ஆத்மஸ்வரூபமாகிய; निस्तरङ्गसहजानन्दावबोधाम्बुधौ, நிஸ்தரங்க³ஸஹஜாநந்தா³வபோ³தா⁴ம்பு³தௌ⁴, பெரிது சிறிது என்று வாதம் செய்ய முடியாததாயும், ஸ்வபாவமுள்ளதாயும் அழிவில்லாததாயும் இருக்கிற சித்ரூபமான ஆனந்தக்கடலில்; अयं विप्रः, அயம் விப்ர:, இவன் பிராஹ்மணன்; अयं श्वपचः ச்வபச:, இவன் சண்டாளன்; इत्यपि, இத்யபி, இப்படி என்றும்; विभेदभ्रमः, விபே⁴த³ப்⁴ரம:, பேதபுத்தியானது; कोऽयं, கோ(அ)யம், இதென்ன; (எவ்விதம் வந்தது); गङ्गाम्बुनि, க³ங்கா³ம்பு³நி, கங்காஜலத்திலும்; चण्डालवीथीपयःपूरे वा, சண்டா³லவீதீ²பய:பூரே வா, சண்டாளனுடைய தெருவில் போகும் பிரவாகத்திலும்; बिंबिते, பி³ம்பி³தே, பிரதிபிம்பிக்கப்பட்டதான; अंबरमणौ, அம்ப³ரமணௌ, சூரியனிடத்தில்; अन्तरम्, அந்தரம், வித்தியாஸம்; अस्ति किम्, அஸ்தி கிம், உண்டோ? (இல்லை); कांचनघटीमृत्कुम्भयोः, காஞ்சநக⁴டீம்ருத்கும்ப⁴யோ:, தங்கக்குடம், மண்குடங்களிலிருக்கும்; अम्बरे, அம்ப³ரே, ஆகாசங்களைப்போல.

தாத்பர்யம்:—இப்பிரபஞ்சத்தைக் காட்டிலும் வேறான ஆத்மஸ்வரூபம் அலையற்று நெடுநாள் வாழும்

ஆனந்தக்கடலல்லவா? இவ்விதம் ஒரே ரஸமான ஆனந்தக்கடலில் ஒரு பக்கத்தில் பிராஹ்மணன் என்ற சித்திப்பையும், மற்றொரு பக்கத்தில் சண்டாளன் என்ற கசப்பையும், எவ்வாறு கற்பிக்கிறாய்? ஆத்மாவில் நான் கற்பிக்கவில்லை. பிராஹ்மணன், சண்டாளன் என்ற இரண்டு சரீரத்தால் ஆத்மாவில் பேதம் கற்பிக்கும்படி நேருடுகிறதென்று எண்ணுகிறாயோ? அதுவும் தப்பு. கங்காஜலத்திலும், சண்டாளனுடைய தெருவில் ஓடும் ஜலத்திலும் தெரியும் சூரியனுடைய பிரதிபிம்பத்தில் பேதம் கற்பிக்கமுடியுமா? ஆனால் பேதம் தோன்றுகிறதே எதினால் என்று கேட்கிறாயோ? தங்கக்குடத்திலும் மண்குடத்திலும் விளங்கிவரும் ஆகாசம் ஒன்றானாலும் தங்கக்குடம், மண்குடம் என்ற பேதத்தால் ஆகாசம் வேறுபடுகிறது போல் தோன்றுகிறது; அதாவது உபாதியினுடைய பேதத்தால் பேதமே தவிர ஸ்வரூபத்தில் பேதமில்லை.

இந்தப் பிரகாரம் சாஸ்திரங்கள் ஆத்மஸ்வரூபம் ஒன்றென்றே கூறுங்காலத்தில் நீ பேதத்தைக் கற்பிப்பது மிகவும் தப்பு. அதிலும் ஸர்வோத்தமமான ஸந்யாஸ ஆச்ரமத்தை அடைந்து இவ்விதம் பேதகற்பனையைச் செய்கிற உம்முடைய தாத்பரியம் ஸந்யாஸத்தை வேஷமென்று வெளியாக்குகிறதல்லவா? ஏன் இவ்விதம் வேதாந்த அனுபவமில்லாமல் ஸந்யாஸத்

தை ஸ்வீகரிக்கவேண்டும்? பேத புத்தியுள்ளவனுக்கு
கர்மமார்க்கத்திலல்லவா அதிகாரம்? அதற்கு கிரஹஸ்
தாச்ரமம் அல்லவா வேண்டும்? ஆகையால் உன் தாத்
பரியம் வித்வான்களுக்கோ, சாஸ்திரங்களுக்கோ, கொ
ஞ்சமேனும் ஏற்கத்தகாததாயிற்று, என்று சண்டாள
வேஷதாரியான பரமசிவன், நாய் வேஷதாரிகளான
நான்கு வேதங்களோடு கூட ஸ்ரீசங்கரகுருவைப் பரீ
க்ஷிக்க, ஸ்ரீசங்கரகுருவும் இவன் ஜாதியால் சண்டாள
னயிருக்க நியாயமில்லை; நம்மால் ஸமாதியில் தியானம்
செய்யப்பட்ட விசுவனுதன் தானேயென்று ஸம்சயித்து
அருகில்வர, சண்டாள வேஷதாரியான பரமசிவனும்,
"ஹே, ஸன்யாஸி! நான் சண்டாளன், ஸமீபத்தில்
வரக்கூடாது, போ போ" வென்று மறுதளித்துவிட்டு,
"ஏ ஆண்டே!" என்று இன்னொரு சண்டாளனைக் கூப்
பிடுவது போலும் பாவிக்க, அச்சமயத்திலேயே பரம
சிவனுடைய அந்தரங்க பக்தனான நந்திகேசுவரன் தா
னும் சண்டாளவேஷத்தை தரித்துக்கொண்டு நாலு
வேதங்களுக்கும் மூலபூதமான ஓங்காரமென்னும் பிர
ணவத்தை செத்த நாயைப்போல் கற்பித்து, அதை
இடது தோளிலும் போட்டுக்கொண்டு சண்டாள வேஷ
தாரியான பரமசிவன் அருகில்வர, ஸ்ரீசங்கர குருவும்
"ஐயோ! என்ன கஷ்டமோ! வேஷத்தையும் ஆசாரத்
தையும் பார்த்தால் சண்டாளனென்றே தோன்றுகிறது;
பேச்சைப் பார்த்தால் ஸர்வ ஜகந்நியந்தாவோவென்று
தோன்றுகிறது. எதுதான் உண்மையோ! இவ்விதம்

தர்மசங்கடம் எனக்கும் ஏற்படவேண்டுமோ! ஹே, தெய்வமே! நீ இவ்விதம் சோதிக்க நான் என்ன குற்றம் செய்தேன்?" என்று அநேகவிதமான அநுதாபத்தோடுகூட ஸ்ரீசங்கரகுருவானவர் அதின் தத்வத்தை விசாரிப்போமென்ற எண்ணத்தையடைந்தும், மறுபடி ஏன் விசாரிக்கவேண்டும்? இவ்விதம் அநுபவம் எவனுக்கு இருந்தாலும் அவனே பிரஹ்மம். அதே நான். அது தான் எனக்கு குரு, ஏன் விருதாவாய் மனது சலிக்க இடங்கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் தனது ஸ்வானுபவத்தைத்தன் அருகில் நிற்கும் ஸனந்தனர், ஆனந்தகிரி, சித்ஸுகர் என்ற மூன்று சிஷ்யர்களோ, மற்றவர்களோ, ஸமாதியாகிற ஸாதனமின்றியே அறியும்படி பிரகாசப்படுத்தக்கூடிய ஐந்து சுலோகங்களால் தன் அநுபவத்தை சண்டாள வேஷதாரியான பரமசிவனுக்கெதிரில் தெரியப்படுத்தி தான் முதலில் செய்த குற்றத்திற்கு மன்னிப்பாக சண்டாள வேஷதாரியான பரமசிவனையே குருவாக வரிக்கின்றார். அதாவது

जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृम्भते
या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी ।
सैवाहं न च दृश्यवस्त्विति दृढप्रज्ञापि यस्यास्ति चे-
च्चाण्डालोऽस्तु स तु द्विजोऽस्तु गुरुरित्येषा मनीषा मम ॥

ஜாக்ரத்ஸ்வப்ந ஸுஷுப்திஷு ஸ்புடதரா யா ஸம்வி-
துஜ்ஜ்ரும்பதே
யா ப்ரஹ்மாதிபிபீலிகாந்ததநுஷு ப்ரோதா
ஜகத்ஸாக்ஷிணீ ।
ஸைவாஹம் ந ச த்ருச்யவஸ்த்விதி த்ருடப்ரஜ்ஞாபி
யஸ்யாஸ்தி சே-
ச்சாண்டாளோऽஸ்து ஸ து த்விஜோऽஸ்து குருரி-
த்யேஷா மநீஷா 33 ॥

जाग्रत्स्वप्नसुषुप्तिषु, ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்திஷு, ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளிலும், அதாவது, சக்ஷுரிந்திரியம் (கண்), ச்ரோத்ரேந்திரியம் (செவி), க்ராணேந்திரியம் (மூக்கு), ரஸனேந்திரியம் (நாக்கு), த்வகிந்திரியம் (த்வக்), இந்த ஐந்து இந்திரியங்களாலும், ரூபம், சப்தம், கந்தம், ரஸம், ஸ்பர்சம் இந்த ஐந்துகளையும் அறிந்து ஸுகத்தையோ அல்லது துக்கத்தையோ அனுபவிப்பதான அவஸ்தையானது 'ஜாக்ரத்' அவஸ்தை என்று சொல்லப்படும். இவ்விதமான ஐந்து இந்திரியங்களையும் அறிகிற வியாபாரமற்று, முன் பார்த்திருந்த வாஸனையால் அந்த பதார்த்தமே எதிரில் நிற்பது போலும் அதைப் பார்ப்பது போலும் மனதால் கற்பித்துக்கொண்டு ஸுகத்தையோ துக்கத்தையோ அநுபவிப்பது போல் தோன்றும் அவஸ்தை 'ஸ்வப்னவஸ்தை' என்பதாகும். ஸுஷு

லம், ஸூக்ஷ்மம் என்ற இரண்டு விதமான இப்பிரபஞ்சத்திற்கு காரணமான தனது ஸ்வரூபத்தை தெரிந்துகொள்ளாததான தெரியாத்தனமும், எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியான ஆத்மாவும், இரண்டே மாத்திரம் மீதமாயிருந்து வேறுவிஷயங்களெல்லாம் ஒடுங்கிப்போன அவஸ்தையானது 'ஸுஷுப்தி' அவஸ்தை எனப்படும். இம்மூன்று அவஸ்தைகளிலும்; प्रोता, ப்ரோதா, அம்மூன்று அவஸ்தைகளையும் பிரகாசிப்பித்துக்கொண்டு தொடர்ந்து வருகிறதாயும்; स्फुटतरा, ஸ்புடதரா, அம்மூன்று அவஸ்தைகளும் உண்டாகும் காலத்திலோ, அழியுங்காலத்திலோ, தான் உற்பத்தியையோ, அழிவையோ அற்றதாயும் இருக்கிற; या, யா, யாதொரு; संवित्, ஸம்வித், சித்ரூபமான பரமாத்மா; उज्जृम्भते, உஜ்ஜ்ரும்பதே, ஸ்வயமாக பிரகாசித்து வருகின்றதோ; ब्रह्मादिपिपीलिकान्ततनुषु, ப்ருஹ்மாதிபிபீலிகாந்த தநுஷு, ஸமஷ்டி, வியஷ்டி, என்ற சரீரங்களில் அதாவது, பிரஹ்மா முதல் சிற்றெறும்பு பரியந்தமான ஸகல சரீரங்களிலும் या संवित्, யா ஸம்வித், யாதொரு சித்ரூபமான பரமாத்மா; प्रोता, ப்ரோதா, அந்தர்யாமியாய் இருந்துகொண்டு அந்த சரீரங்களை பிரகாசிக்கும்படி செய்வதோடுகூட அந்த சரீரங்களை எப்பொழுதும் தொடர்ந்து வருகிறதோ; या संविद्, யா ஸம்வித், யாதொரு சித்ரூபமான

பரமாத்மா ; जगत्साक्षिणी, ஜகத்ஸாக்ஷிணீ, ஸகல ஜகத்திற்கும் ஸாக்ஷியோ, அதாவது, ஸகல ஜகத்தின் விஷயங்களைப் பார்க்கும் சக்தியுள்ளதோ ; सैव, ஸைவ, அந்த சித்ரூபமான பரமாத்மாதான் ; अहम्, அஹம், நான் ; दृश्यवस्तु, த்ருச்யவஸ்து, அன்னகோசம், பிராணகோசம், மனோகோசம், விக்ஞானகோசம், ஆனந்தகோசம், என்ற பஞ்சகோசங்களாக ; न च, ந ச, இல்லை தான் ; इति, இதி, என்று ; प्रज्ञा, ப்ரஜ்ஞா, புத்தியானது ; दृढा, த்ருடா, அழிக்கமுடியாததாக ; यस्य, யஸ்ய எவனுக்காவது ; अस्ति चेत्, அஸ்தி சேத், இருக்குமேயானால் ; स तु, ஸ து, அவனோ என்றால் ; चण्डालोऽपि, சண்டாலோஅபி, சண்டாள குலத்தில் உண்டானவனாகவோ; अस्तु, அஸ்து, இருக்கட்டும் ; द्विजः, த்விஜ:, பிராஹ்மண குலத்தில் உண்டானவனாகவோ; अस्तु, அஸ்து, இருக்கட்டும்; सः, ஸ:, அவன் ; मम, மம, எனக்கு ; गुरुः, குரு:, ஆசாரியன் ; इति, இதி, என்று, एषा मनीषा, ஏஷா மனீஷா, இந்த புத்தி அதாவது இவ்விதம் என் நிச்சயம்.

தாத்பர்யம்:— இவ்வுலகில் பிரதி தினமும் ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்று மூன்றுவிதமான அவஸ்தைகள் அவித்யையால் கற்பிக்கப்பட்டு, ஆத்மஸ்வரூ

பத்தில் ஏற்பட்டதுபோல் பிரகாசித்து வருகிறதல்லவா? அவ்வித மூன்றுவிதமான அவஸ்தைகளும் உண்மையில் விசாரிக்கும் காலத்தில் ஆத்மஸ்வரூபத்தில் கொஞ்சமேனும் ஏற்காத தன்மையோடு கூடினது ஆகிலும், மூன்றுவிதமான அவஸ்தைகளுக்கு ஸாக்ஷியாய் அதில் ஸம்பந்தப்படாமல் ஸ்வப்பிரகாசனாய் விளங்கி வருவதே ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபமென்று வேதாந்த ஸித்தாந்தம். ஒருவன் ஒரு நகரில் பகலில் அநேக விதமான காக்ஷிகளைப்பார்த்து, அவைகளைப்பார்க்குங்காலத்தில் தன்னால் பார்க்கப்பட்ட காக்ஷிகளைக் காட்டிலும், பார்ப்பதற்கு ஸாதனங்களான சக்ஷுஸ் முதலான இந்திரியங்களைகாட்டிலும், தான் வேறு என்றதான அநுபவம் அவனுக்கு பிரத்யக்ஷமல்லவா? அவ்விதமே, இவ்விதமான காக்ஷிகளை நாம் பார்த்தோம், ரொம்பவும் ஆச்சரியகரமாய் இருந்தது, என்று தான் பார்த்த பிற்பாடு கிரஹத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு யோசிக்கும் காலத்தில், பார்த்த காக்ஷிகளெல்லாம் எதிரில் நிற்பதுபோலும், அதைத் தான் கண்களாகிற ஸாதனங்களால் பார்ப்பது போலும், தோன்றுகிற அநுபவமும், எதிரே நிற்பதுபோல் தோன்றின காக்ஷிகளைக்காட்டிலும், அந்த காக்ஷிகளைப்பார்க்க ஸாதனங்கள்போல் தோன்றின கண்கள் முதலான இந்திரியங்களைக்காட்டிலும், தான் வேறு என்பதையே பிரகாசப்படுத்தும் என்பதும் பிரத்யக்ஷஸித்தம்.

அவ்வித காக்ஷிகள் ஒன்றும் ஒரு விதத்திலும் தோன்றாமலும், தான் கண்களால் பார்ப்பதாகவோ, பார்ப்பது போலாகவோ, இவ்வித இரண்டு விதமான தோற்றமில்லாமல் ஒன்றும் தோன்றாமலிருக்கும் காலத்தில், அதாவது மனப்பிரவிருத்தி இல்லாமலிருக்குங்காலத்தில், ஒன்றும் தோன்றாமலிருக்கிறது என்ற அவஸ்தையைக்காட்டிலும், தான் வேறு என்ற அநுபவம் பிரத்யக்ஷ ஸித்தம். இவ்வித மூன்று விதமான நடவடிக்கைகளை (செய்கைகளை)க்காட்டிலும், இந்த ஜாக்ரதா அவஸ்தையில் இந்த மூன்றுவிதமான செய்கைகளுக்கும் ஸாக்ஷியான புருஷன் இந்த மூன்றைக் காட்டிலும், வேறென்றே எவ்வாறு நிச்சயமோ அவ்வாறே, ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி இந்த மூன்று விதமான அவஸ்தைகளுக்கும் ஸாக்ஷியான ஆத்மா மூன்றுவிதமான அவஸ்தைகளைக்காட்டிலும் வேறு என்பதற்கு ஆக்ஷேபணை உண்டோ? ஆகையால், இவ்விதம் ஸ்வாநுபவத்தால் ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளைக்காட்டிலும் ஆவிர்பாவ (தோற்றம்) திரோபாவ (மறைவு) காலத்தில், தான் ஆவிர்பாவ திரோபாவத்தையடையாமல் சுத்த சைதன்ய ஸ்வரூபமான யாதொரு ஆத்மஸ்வரூபம் ஸ்வயம் பிரகாசமாய் விளங்கி வருகிறதோ அதுவே தான் நான், வேறு விதமான மூன்று விதமான அவஸ்தைகளுக்குட்பட்டவனல்ல. இம்மூன்று அவஸ்தைகளும் என்னி

டத்தில் கானலில் ஜலம் போல் கற்பிக்கப்பட்டதல்ல வா ? கற்பிக்கப்பட்ட ஜலத்தால் கானல் எவ்விதம் தன் ஸ்வரூபத்தை விடாதோ, அவ்விதமே, அவித்யையால் கற்பிக்கப்பட்ட அவஸ்தைகளால் நானும் என் ஸ்வரூபத்தை விடுவேனோ? அந்த அவித்யையும் என்னிடத்தில் கற்பிக்கப்பட்டதல்லவா ? என்னிடத்தில் கற்பிக்கப்பட்ட அவித்யைக்கோ, அந்த அவித்தையால் கற்பிக்கப்பட்ட மூன்று விதமான அவஸ்தைகளுக்கோ, அதிஷ்டானமான என்னுடைய ஸ்வரூபத்தை தவிர வேறு ஸ்வரூபமுண்டோ? இவ்விதம் கற்பிக்கப்பட்ட அவஸ்தைகளின் ஸ்வரூபமே உண்மையில் விசாரிக்க என் ஸ்வரூபமே. அவ்விதமிருக்க அவஸ்தைகள் ஒன்று இருப்பது போலவும் அதினால் தான் பாதிக்கப்படுவதுபோலவும் தோன்றுவது

[असङ्गो हि अयं पुरुषः न हि सजते, அஸங்கோ ஹி அயம் புருஷ: ந ஹி ஸஜ்ஜதே,

अयं पुरुषः, அயம் புருஷ:, இந்த பூர்ணமான ஆத்மவஸ்துவானது ; असङ्गः, அஸங்க:, ஒன்றோடேயும் ஸம்பந்திக்கத்தகாதவன்; न हि सजते, ந ஹி ஸஜ்ஜதே, ஒன்றோடும் ஸம்பந்திக்கும்படியும் ஏற்படக்கூடாதவன்] என்ற சுருதிக்கும் ஸம்மதமாகுமோ? ஆகையால், நான் ஒன்றிலும் சேராதவன்; அஸங்கன், ஸாக்ஷி, என்ற அநுபவம்தான் சாஸ்திர ஸம்மதமான அநுபவம்.

இதை அநுஸரித்து மேற்கண்ட வித அவஸ்தைகளுக்கு ஸாக்ஷியான சித்ரூபமே நான் என்றும் ;

தவிர, ஸமஷ்டி, வியஷ்டி, என்ற இரண்டுவிதமான சரீரங்களிலும், அதாவது, இப்பிரபஞ்சங்களிலுள்ள பிராணிகளுடைய சரீரககளெல்லாம் ஒன்று சேர்ந்து இவ்வுலகத்திற்கு ஆதிகாரணபூதனான ஹிரண்யகர்ப்பன் என்ற பிரஹ்மாவினுடைய சரீரமாகும். அது தான் ஸமஷ்டி சரீரமென்று சாஸ்திரங்களில் கூறப்படுகிறது. வெவ்வேறாய்ப் பிரிக்கப்படும் பிராணிகளின் சரீரங்கள் வியஷ்டிகளென்றும் கூறப்படும். இவ்விதமான வியஷ்டி, ஸமஷ்டியோ இரண்டு விதமான சரீரங்களிலும் அந்தர்யாமியாய் இருந்துகொண்டு மேற்சொன்ன சரீரங்களை பிரகாசிக்கும்படி செய்துகொண்டு, ஸகல ஜகத்திற்கும் ஸாக்ஷியாய் விளங்கும் யாதொரு சித்ரூபமான பரமாத்மாவுண்டோ அதுவே நான் என்றும், திருச்யவஸ்துக்கள் நான் இல்லையென்றும்;—அதாவது, அன்னகோசம், பிராணகோசம், மனோகோசம், விக்ஞானகோசம், ஆனந்தகோசமாகிய இவைகள் திருச்யமென்று சொல்லப்படும், அன்னகோசமாவது, பிரதிதினம் புஜிக்கப்படும் அன்னரஸத்தால் வளர்ந்துவரும் இத்தோல்மயமான ஸ்தூலசரீரமே. பிராணகோசமாவது, சக்ஷுஸ் (கண்) சுரோத்திரம் (செவி), க்ராணம் (மூக்கு), ரஸனம் (நாக்கு), த்வக் இவ்வாறு ஐந்து வகையான ஞானேந்திரியங்கள், வாக்கு (வாய்), பாணி

(கை), பாத (கால்), பாயு, உபஸ்தம் (கூடமான ஸ்த லங்கள்), இவ்வாறு ஐந்து விதமான கர்மேந்திரியங் கள், பிராண, அபான, வ்யான, உதான, ஸமான, என்ற ஐந்து விதமான பிராணங்கள், இவ்வாறு பதினேந்து தத்வங்களும் பிராணகோசம். மனோகோசமாவது மனது, விக்ஞானகோசமாவது புத்தி, அதாவது ரூபம், சப்தம், கந்தம், ரஸனம், ஸ்பர்சம் என்ற ஐந்து விஷய ங்களை அறிவதற்காக ஏற்பட்ட சக்ஷுஸ், ச்ரோத்ரம், க்ராணம், ரஸனம், த்வக் என்ற யாதொரு ஐந்து வித மான இந்திரியங்களுண்டோ அந்த ஐந்து விதமான இந்திரியங்களையும், ஐந்து விதமான விஷயங்களில் போகும்படி செய்வதோடுகூட ஐந்து விதமான விஷ யங்களையும் அறியும்படியான சக்தியையும் ஐந்து வித மான இந்திரியங்களுக்கு கொடுக்க வல்லமையுள்ள உள் ளாக இருக்கும் ஒரு இந்திரியம் மனதென்று சொல்லப் படும். அதாவது, இவ்வித தன்மையுள்ள ஒருவிதமான சக்தி. இந்த இந்திரியங்கள் விஷயங்களில் போவதிலே, போகாமலிருப்பதிலோ, அதின் பிரேரணை தான் காரண ம். இந்த இந்திரியங்களாகிற கூட்டத்திற்கு யஜமான னாய் விளங்கிவரும் இந்திரியம் மனதென்பதாகும். அந் த ஒரே சக்திக்கு இரண்டு விதம் பெயர். அதாவது மனதென்றும், புத்தியென்றும். ஒரு காரியத்தில் இந்த இந்திரியங்களை பிரவர்த்திக்கச்செய்வதில் சந்தே கமுள்ளதாயிருந்தால் அப்பொழுது மனம் என்று

பெயர். மேற்கண்ட விஷயத்தில் நிச்சயமுள்ளதாக இருந்தால் அப்பொழுது புத்தி என்று பெயர். இவ்விதமான உள்ளே விளங்கும் ஸகல இந்திரியங்களுக்கும் பிரவர்த்தியைக்கொடுத்துவரும் விசேஷமான ஒரு சக்திக்கு, காரியத்தின் நிலைமையை அனுஸரித்து ஏற்பட்ட இரண்டுவிதமான மனது, புத்தி, என்றதான பெயரை அநுஸரித்துத்தான் மனேகோசம், விக்ஞானகோசமென்று சாஸ்திரத்தில கூறப்படுகிறது. ஆனந்தகோசமாவது எதிரில் அழகான ஒரு வஸ்து இருக்கும் காலத்தில் கண்ணால் அதைப்பார்க்கும்பொழுது மனதானது அந்த அழகான வஸ்துவைப்போல் உள்ளே பரிணமிக்கும் காலத்தில் அந்த அஞ்ஞான ரூபமான மனதினுடைய பரிணமத்தில் ஸ்வரூபமான ஆத்மதத்வத்தின் பிரதிபிம்பம் அடிப்பது யாதொன்றுண்டோ அதுதான் ஆனந்தகோசம். இவ்வாறு, ஐந்து விதமான கோசங்களும் திருச்யங்களென்றே, அதாவது, அறிவிக்கும் விஷயங்களென்றே சொல்லப்படும்—இவைகள் ஆத்மாவல்ல. இவைகளைக்காட்டிலும் ஆத்மதத்வம் வேறுபட்டது. உலகத்தில் மண்மயமான ஒருபெரிய அறையை நிர்மாணம் செய்து, அதற்குள் சிவப்பு வர்ணத்தோடு கூடின கண்ணுடிகளால் மற்றொரு அறையை நிர்மாணம் செய்து, அதற்குள்ளாகவும் மலினமான வெள்ளை நிறமுடைய கண்ணுடிகளால் வேறொரு அறையை நிர்மாணம் செய்து,

அதற்குள்ளாகவும் நிர்மலமான வெள்ளைக்கண்ணாடிக ளால் ஒரு அறையை நிர்மாணம் செய்து, அதற்குள் ஸ்படிகசிலையால் மற்றொரு அறையை நிர்மாணம் செய்து, அதற்குள் ஒரு தீபம் வைக்கப்பட்டிருந்தால் அந்த தீபத்தினுடைய பிரகாசமானது ஸமீபத்திலுள்ள ஸ்படிகமயமான சுவரிலும், அதில் நின்றும் நிர்மல மான வெள்ளைநிறமான கண்ணாடிச்சுவரிலும், அதில் நின்றும் மலினமான வெள்ளை நிறமுள்ள கண்ணாடிச் சுவரிலும், அதில் நின்றும் மண்மயமான சுவரிலும் அடிப்பது அநுபவ ஸித்தமல்லவா! தவிர, இவ் வைந்து விதமான சுவர்களுமே பிரகாசமான வஸ்துக்க ளாவென்று தோன்றும்படியாய் பிரகாசிக்குமல்லவா? ஆனால் உண்மையில் இவ்வைந்தும் பிரகாசமுள்ள வஸ் துக்களல்ல. இவ்வைந்துக்கும் உள்ளாக விளங்கிவரும் தீபத்தின் பிரகாசத்தினுடைய பிரதிபிம்பம் அல்லவா வீசுகிறது? விவேகமுள்ளவன் இந்த மண்மயமான சுவ ரை பார்க்கும்பொழுது இது ஜடமல்லவா; இதற்கு எவ் விதம் பிரகாசம் ஏற்பட்டது? இதற்கு ஸ்வயம் பிரகா சம் ஏற்பட நியாயமில்லை, ஆகையால் இதற்குள்ளேயும் போய்ப்பார்ப்போம்; அதற்குள்ளேயும் பிரகாசமிருக் கும்; அதினாலே இதற்குபிரகாசம் ஏற்பட்டிருக்கலாம் என்று உள்ளே செல்ல அவ்விடத்திலும் சிவப்பு வர்ண த்தோடு கூடிய ஒரு அறையைப்பார்த்து இதுவும் ஜட மல்லவா? இதற்கு ஸ்வயம் பிரகாசம் ஏற்பட நியாய மில்லை. இதற்குள்ளும் போவோமென்றுலோசித்து

உட்செல்ல அவ்விடத்திலும் கொஞ்சம் மங்கின வெள்ளை நிறமான கண்ணாடி அறையைப்பார்த்து இதுவும் பிரகாசித்து வருகிறதே! முன் பார்த்தவைகளைப்போல் தானே இவைகளும் ஜடம். என்ன ஆச்சரியம்! இதற்குள்ளாகவும் சென்று பார்ப்போமென்று நினைத்து உட்செல்ல மிகவும் சுத்தமான வெள்ளைக் கண்ணாடியால் செய்யப்பட்ட அறையைக்கண்டு, முன் பார்த்ததான சுவர்களைக்காட்டிலும் இச்சுவருக்கு அதிகமான பிரகாசமல்லவா தோன்றுகிறது! இதுவும் ஜடம் தானே முன் பார்த்ததைக்காட்டிலும் இதற்கென்ன விசேஷம்; இன்னும் உள்ளே சென்று பார்ப்போமென்று போக ஓரே ஸ்படிகமயமான ரொம்பவும் பிரகாசிக்கிறதான மற்றொரு அறையைப்பார்க்க இந்த பிரகாசம் கண்ணை ப்பறிப்பதுபோல் இருக்கின்றதல்லவா? இதற்கும் பிரகாசம் எக்காரணத்தினின்றும் ஏற்பட்டது? என்று நினைத்து அதற்குள்ளும் செல்ல அவ்விடத்தில் ஜ்வலிப்பதான ஒரு தீபத்தைப் பார்த்து, அஹோ! இந்த தீபத்தினுடைய பிரகாசமல்லவா இந்த ஐந்து சுவர்களிலும் அடித்து பிரகாசிக்கின்றது! நாம் இவ்விதம் ஊக்கத்துடன் உள்ளே வந்து பார்க்காவிடில் ஐந்து சுவர்களே பிரகாசிக்கின்ற வஸ்துக்கள் என்றல்லவா பிரமத்தையடைவோம்! இத்தீபம் ஒன்றுதான் இவ்விடத்தில் பிரகாசிக்கின்ற வஸ்து. நான் உள்ளே வந்தது நலமாயிற்றல்லவா? உட்சென்று பார்க்கிறவனே

விவேகி. ஆச்சரியம்! இந்த தீபம் அவ்வைந்து அறைகளைக்காட்டிலும் வேறென்று நிச்சயமாய் புலப்பட்டது. இவ்வைந்து அறைகளும் இந்த தீபத்தால் பிரகாசிக்கத்தகுந்த வஸ்துக்கள் இவ்வைந்து அறைகளுக்கும் இந்த தீபம் ஒன்றுதான் பிரகாசக வஸ்து. பிரகாசகவஸ்துவில்லாமல் பிரகாசிக்கத்தகுந்த வஸ்துக்களுக்கு ஸ்வயமாகவே பிரகாசம் ஸ்பூர்த்தியில்லையல்லவா? ஆகையால் இவைகளில் இந்த தீபம் ஒன்றுதான் பிரகாசகமான வஸ்துவானதால் உண்மையான பொருள். இதற்கப்பாலொவொன்றையும் காணேம். இது தான் கடைசி எல்லையாகவும் தெரியவருகிறது என்ற ஸ்வானுபவத்தால் ஐந்து அறைகளைக்காட்டிலும் வேறாக தீபம் என்ற பிரகாசக வஸ்துவைக்கண்டுபிடித்து எவ்விதம் மேன்மையை யடைவனே ஒருவன் அவ்வாறே மாயையினுடைய (மண்ணுக்குச்சமானமான தமோகுணத்தால்) பஞ்சபூதங்கள் சிருஷ்டிக்கப்பட்டு அவைகளுடைய கூட்டங்களாகிற இச்சரீரமாகிற மண்செவராகிற அறையைக்காட்டிலும் மாயையின் (சிவப்பான வர்ணத்திற்குச் சமானமான ரஜோகுணத்தில்) நின்றும் உண்டான இந்திரியங்களுடைய கூட்டங்களாகிற சிவப்பு வர்ணமுடைய கண்ணடியைப்போல் விளங்கி வரும் பிராணகோசத்தைக்காட்டிலும், மாயையினுடைய அழுக்குள்ள வெள்ளை நிறத்திற்குச் சமானமான மலின ஸத்வ வருணத்தினுடைய காரிய

மான மனதாகிற அழுக்குடைய கண்ணாடியால் செய்யப்பட்ட அறையைப்போல் விளங்கிவரும் மனோகோசத்தைக் காட்டிலும், மாயையினுடைய சுத்தமான வெள்ளையைப்போல் இருக்கிற சுத்த ஸத்வ குணத்தினுடைய காரியமான புத்தியாகிற சுத்தமான வெள்ளை நிறமுள்ள கண்ணாடியால் செய்யப்பட்ட அறையைப் போல் விளங்கிவருகிற விக்ஞானகோசத்தைக் காட்டிலும், தமோகுணம் ரஜோகுணம் அடங்கி கேவலம் ஸத்வகுணம் மாத்திரம் மேலிட்டு ஸ்படிகம்போல் பிரகாசமான அவித்யையாகிற மனதினுடைய பரிணாமத்தில் அடித்துவரும் ஆனந்த பிரதிபிம்பமாகிற ஸ்படிக சிலையால் செய்யப்பட்ட அறையைப்போல் விளங்கி வருகிற ஆனந்தகோசத்தைக்காட்டிலும், ஸ்வப்பிரகாசமான ஆத்மா நான் வேறுபட்டவன். இவ்வைந்து கோசங்களும் நானல்ல; இவ்வைந்து கோசங்களும் என்னால் பிரகாசிக்கத் தகுந்த வஸ்துக்கள்; நான் பிரகாசகன். எவ்விதம் ஐந்து அறைகளுக்கும் அதற்குள்ளிருக்கும் தீபத்திற்கும் ஒரு விதமான ஸம்பந்தமில்லையோ, அவ்விதமே இந்த ஐந்து கோசங்களுக்கும் எனக்கும் ஒரு விதமான ஸம்பந்தமுமில்லை. நான் அஸங்கன். என்னிடத்தில் இவ்வைந்து கோசங்களும் கற்பிக்கப்பட்டன; என் ஸ்வரூபம் ஒன்றே உண்மை; ஐந்து கோசங்களின் ஸ்வரூபம் விசாரிக்கப்பொய். ஐந்து கோசங்கள் திருச்யம் (அறியத் தகுந்தது).

நான் த்ரஷ்டா (அறிகிறவன்.) அவைகள் அநித்யம். நான் நித்யம். அவைகள் கல்பிதம். நான் அதிஷ்டானம். அவைகள் அசுத்தம். நான் சுத்தன். இவ்வாறு அவைகளுக்கும் எனக்கும் அநேக விதம் வித்தியாஸம் இருக்குங்காலத்தில் அவைகளாக நான் எவ்விதம ஆகுவேன். ஆகையால் அவைகள் நானல்ல. அவைகளைக் காட்டிலும் நான் வேறு என்னும் திவ்யாநுபவமும எவனுக்கு (அதாவது இவ்விதமான அநுபவத்தில் ஜாதி, குலம, ஆச்ரமம் இவைகள் ஆவசியகமில்லாமலே யாராயிருந்தாலும் அநேக ஜன்மாவில் அடிக்கடி இவ்விதமான திவ்யாநுபவத்தை அநுபவித்து வந்த திடவாஸனையால் இந்த ஜன்மாவில் ஒருவனுடைய உபதேசத்தை அபேக்ஷிக்காமலே காமாதிகள் எப்படி பிரகாசிக்கின்றதோ, அவ்விதமே, மேற்சொன்ன திவ்யாநுபவம் குருவினுடைய உபதேசத்தையோ, சாஸ்திரத்தையோ அபேக்ஷிக்காமலே எவனுக்கு) உண்டானாலும் அவன் மேலான பிராஹ்மணகுலத்தில் பிறந்தவனாயிருந்தாலும் அல்லது மிகவும் கீழான சண்டாள குலத்தில் பிறந்தவனாயிருந்தாலும் அவன், ஜாதி, வர்ணாச்ரமத்திற்குட்பட்டவனல்ல. நித்யமாயும், நிரதிசய ஆனந்த வடிவாயும், சுத்தமாயும், இந்த ஜகத்திற்கு அதிஷ்டானமாயும், ஸர்வஸாக்ஷியாயும், நிர்விகாரியாயும், வேதாந்த வேத்யமாயும், மாயாவிலக்ஷணமாயும், விள

ங்கி வரும் ப்ரஹ்மமேதான் அவன். அன்றி வேறில்லையென்று பாவிப்பதோடுகூட,

[गु-शब्दस्त्वन्धकारः स्यात् रु-शब्दस्तन्निरोधकः ।
अन्धकारनिरोधित्वाद्गुरुरित्यभिधीयते ॥

𑌗𑍁-𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑍁-𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑍋𑌧𑌕𑌃 ।

𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌨𑌿𑌰𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

गु-शब्दः, 𑌗𑍁 𑌶𑌬𑍍𑌦𑌃, '𑌗𑍁' வென்ற சப்தமானது; अन्धकारः, 𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌃, அஞ்ஞானமாகிற இருளாக; स्यात्, 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, ஆகிறது; रु-शब्दः, 𑌰𑍁 𑌶𑌬𑍍𑌦𑌃, '𑌰𑍁' வென்ற சப்தமானது; तन्निरोधकः, 𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑍋𑌧𑌕𑌃, அஞ்ஞானமென்ற இருளைப்போக்கடிக்கிறதாக; स्यात्, 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, ஆகிறது; अन्धकारनिरोधित्वात्, 𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌨𑌿𑌰𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, அஞ்ஞானமாகிற இருளைப்போக்கடிக்கிறதன்மையினுலேதான்; गुरुः, 𑌗𑍁𑌰𑍁𑌃, குரு; इति, 𑌇𑌤𑌿, என்று; अभिधीयते, 𑌅𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇, சொல்லப்படுகிறது. என்றபடி] ஸகல ஜீவகோடிகளின் அஞ்ஞானமாகிற இருட்டைப் போக்கடித்து தத்வோபதேசத்தால் ஸகலஜீவகோடிகளையும் கிருதார்த்தர்களாகச் செய்யக்கூடிய கருணைக்கிருப்பிடமான பரமகுருவென்றே என் ஸித்தாந்தம்.

மேற்கண்ட சுலோகத்தால் ஸகல ஜகத்திலும் அந்தர்

யாமியான சித்ரூபமான பிரஹ்மம் எதுவோ அதுவே தான் நான் என்ற அனுபவமானது ஜீவபிரஹ்ம ஐக்கியதத்வத்தை விளக்குகிறது. அது மிகவும் தப்பு. பிரஹ்மமோ சகல ஜகத்திற்கும் காரணம்; ஜீவனோ தன் ஸ்வாதந்தரியத்தோடு ஒன்றையும் செய்யக்கூடாதவன். பிரஹ்மமோ ஸர்வத்தையும் அறியுந்தன்மையுள்ளது. ஜீவனோ அதற்கு நேர் விபரீதமுள்ளவன். இவ்விதமிருக்க ஒன்றுக்கொன்று விபரீத ஸ்வபாவமுள்ள இருட்டுக்கும் பிரகாசத்திற்கும் எவ்விதம் ஐக்கியம் கிடையாதோ அவ்விதமே விருத்த ஸ்வபாவமுள்ள ஜீவனுக்கும் பிரஹ்மத்திற்கும் எவ்வாறு ஐக்கியம் ஏற்படும்? அவ்வித ஐக்கிய அனுபவத்தை எவ்விதம் பூர்வசுலோகத்தில் சாஸ்திர ஸம்மதம் போல் கூறப்பட்டது? இவ்விதமான ஆக்ஷேபணைகளுக்கு ஸமாதானம் தெரியும். சகலமான ஜகத்தும் பிரஹ்மத்தினிடத்தில் கல்பிதமானபடியால் பிரஹ்மத்தில் ஜகத்தை கல்பித்தவனை நானும் பிரஹ்மத்தினிடத்தில் கல்பிக்கப்பட்டவனுதலால் கல்பிதமான வஸ்துக்களுக்கு அதிஷ்டான ஸ்வரூபத்தைத் தவிர வேறு ஸ்வரூபம் இல்லாதபடியால் நான் பிரஹ்மமே என்ற ஜீவ பிரஹ்ம ஐக்கிய அனுபவத்தை மேற்கண்ட சுலோகத்தில் காட்டியது சாஸ்திர ஸம்மதமேயாகும். கல்பிதமான ஜகத்கர்த்ருத்வம் பிரஹ்மத்திற்கு எவ்விதமோ அவ்விதமே ஜீவனுக்கு ஸ்வாப்னமான ஜகத் கர்த்ருத்வம் உண்டல்லவா? எவ்விதத்திலும்

ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் விருத்த ஸ்வபாவமே கிடையாது. இவ்விதமான அபிப்பிராயங்களை அனுஸரித்தல்லவா மகாவாக்கியங்களும் ஜீவனுக்கு பிரம்மபாவத்தை போதிக்கின்றது. ஆகையால், மகாவாக்கியங்களுடைய உண்மையான ஸித்தாந்தம் எதுவோ அதே ஜீவனும் பிரம்மமும் ஒன்றென்பதுதான். அதுதான் மேற்கண்ட சுலோகத்திலும் கூறப்பட்டது. அவ்விதமான ஜீவப்பிரஹ்ம ஐக்கியம் என்ற ஸித்தாந்தம் சாஸ்திர ஸம்மதம் தான் என்று விவரித்து நன்ருய்க்காட்டுவதோடுங்கூட அதற்கு விபரீதமான மதங்களுக்கு சாஸ்திரம் சற்றேனும் இடங்கொடுக்காது என்பதையும் நன்ருய்க்காட்டுகிருர் இந்த சுலோகத்தால்

ब्रह्मैवाहमिदं जगच्च सकलं चिन्मात्रविस्तारितं
सर्वं चैतदविद्यया त्रिगुणयाऽशेषं मया कल्पितम् ।
इत्थं यस्य दृढामतिः सुखतरे नित्ये परे निर्मले
चाण्डालोऽस्तु स तु द्विजोऽस्तु गुरुरित्येषा मनीषा मम ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌹𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌚𑍍𑌚 𑌸𑌕𑌲𑌂 𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾
𑌰𑌿𑌤𑌂
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚𑍈𑌤𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌯𑌾 𑌶𑍇𑌷𑌂
𑌮𑌯𑌾 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌇𑌤𑍍𑌥𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌦𑍃𑌢𑌾𑌮𑌤𑌿𑌃 𑌸𑍁𑌖𑌤𑌰𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇
𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍇

𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌰𑍁𑌰𑌿-
𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥

चिन्मात्रविस्तारितम्, 𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌿𑌤𑌂, சித்ரூபமான பிரம்மத்தினிடத்தில் கல்பிக்கப்பட்டதான; इदं, 𑌇𑌦𑌂, இந்த ; सकलम्, 𑌸𑌕𑌲𑌂, ஸமஸ்தமான ? जगच्च, 𑌜𑌗𑌚𑍍𑌚, ஜகத்தும் ; ब्रह्मैव, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵, பரப்பிரம்ம ஸ்வரூபம்தான்; यत:, 𑌯𑌤𑌃, யாதொரு காரணத்தால்; त्रिगुणया, 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌯𑌾, ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற மூன்று குணத்தோடு கூடின अविद्यया, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾, அவித்யையான ஸாதனத்தாலே; मया, 𑌮𑌯𑌾, என்னால் ; एतत्, 𑌏𑌤𑌤𑍍, இந்த ; सर्वं च, 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 ஸகலமான ஜகத்தும்; शेषं, 𑌶𑍇𑌷𑌂, ஈசுவரனோடு கூட; कल्पितम्, 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂, கற்பிக்கப்பட்டதோ ; अत:, 𑌅𑌤𑌃, ஆகையால் ; अहं, 𑌅𑌹𑌂, நான் ; ब्रह्मैव, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵, பிரம்மம்தான் ; इत्थं, 𑌇𑌤𑍍𑌥𑌂, இந்தப்பிரகாரம்; सुखतरे, 𑌸𑍁𑌖𑌤𑌰𑍇, அளவற்ற ஆனந்த ரூபமாயும் नित्ये, 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇, அழிவற்றதாயும் परे, 𑌪𑌰𑍇, மாயையைக்காட்டிலும் வேறாயும் ; निर्मले, 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍇, மலமற்றதாயும் இருக்கிற பிரஹ்மத்தினிடத்தில்; यस्य, 𑌯𑌸𑍍𑌯, எவனுக்கு ; मतिः, 𑌮𑌤𑌿𑌃, புத்தியானது ; दृढा, 𑌦𑍃𑌢𑌾, அழிக்கமுடியாததாக; भवति, 𑌭𑌵𑌤𑌿, ஆகிறதோ; स तु,

ஸந்து, அவனே என்றால்; चाण्डालः, சாண்டாலஃ, சண்டாள குலத்திலுண்டானவனாகவோ; द्विजः, த்விஜஃ, பிராஹ்மணனாகவோ; अस्तु, அஸ்து, இருக்கட்டும், सः, ஸஃ, அவன்; मम, மம, எனக்கு; गुरुः, குருஃ, ஆசாரியன்; इति, இதி, என்று; एषा, ஏஷா, இந்த; मनीषा, மநீஷா, நிச்சயம்;

கிளிஞ்சலில் கல்பிதமான வெள்ளியானது உண்மையில் விசாரிக்க கிளிஞ்சலாகவே ஏற்படுவதுபோல், சித்ரூபமான பிரம்மத்திலிடத்தில் ஜீவனுண என்னால் கல்பிக்கப்பட்ட இந்த ஸகல ஜகத்தும் விசாரித்தால் பிரஹ்மமாகவேதான் உண்மையில் முடியும். ஆனால் கிளிஞ்சலில் தோன்றிய வெள்ளியானது கிளிஞ்சலைக் காட்டிலும் வேறாக இல்லாவிடினும், அந்த வெள்ளியை கிளிஞ்சலில் கல்பித்த புருஷன் கிளிஞ்சலைக் காட்டிலும் வேறாக ஏற்படுகிறான் என்பது போலவே சித்ரூபமான பிரம்மத்திலிடத்தில் கல்பிக்கப்பட்ட இந்த ஜகத்தானது அதிஷ்டானமான பிரம்மத்தைக் காட்டிலும் வேறுபடாமல் பிரஹ்மரூபமாகவே ஆனாலும், அந்த ஜகத்தை பிரம்மத்திலிடத்தில் கல்பித்த ஜீவன் வேறாக இருக்கிறான் அல்லவா? தவிர, கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளி பிராதிபாஸிகம் (அதாவது அக்காலத்தில் கிளிஞ்சலுடைய தெரியாத்தன்மையான அஞ்ஞானத்தால் உண்டாய் ஒரு புருஷனால் கிளிஞ்சலில் கல்பிக்கப்பட்டது). பிரம்மத்தில் தோன்றும்

ஜகத்தோ அவ்விதமல்ல. இது வியாவகாரிகம் உண்மையாய் விசாரிக்க அழிவதாய் இருந்தாலும் வியாவகாரகாலத்தில் அழியாது. கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியோ வியவகார காலத்திலேயே அழிந்துவிடுகிறது. அதற்கும் இதற்கும் ஸாம்யம் சொல்வது தப்போடு கூட இவ்விடத்தில் இந்த ஜகத்திற்கு கர்த்தாவான மாயையோடு கூடின ஈசுவரனென்றவனை கர்த்தாவொருவன் இருந்து வருகிறான். ஆகையால் ஜகத்து பிரஹ்மத்தில் கல்பிக்கப்பட்டு பிரம்மமாகவே ஆனாலும், ஜகத்தை கல்பித்த ஜீவன், கல்பிதமான ஜகத்திற்கு கர்த்தாவான ஈசன், அதிஷ்டானமான பிரம்மம் இந்த மூன்று தத்வம் உண்மையிலும் மிச்சமாக ஸித்திக்குமானபடியால் அத்வைத ஸித்தாந்தம் எவ்விதம் ஏற்படும் என்ற ஆக்ஷேபணைகளுக்கு ஸமாதானமோ அடியிற்கண்டவாறு கூறப்படும். அதாவது, கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியைப்போல்தான் இந்த ஜகத்தும் பிரயமத்தில் தோன்றுகிறதே தவிர, அதற்கும் இதற்கும் ஒரு விதத்திலும் வித்தியாஸம் இல்லை. கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியும், கிளிஞ்சலைத்தெரிந்து கொண்டமாத்திரத்தில் எவ்விதம் போகிறதோ, அவ்விதமே, பிரம்மத்தில் தோன்றுகிற ஜகத்தும் பிரம்மத்தை தெரிந்துகொண்ட மாத்திரத்தில் போவதில் ஆக்ஷேபணையில்லை. கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியை உண்டுபண்ணினது கிளிஞ்சல் மாத்திரமுமில்லை. கிளிஞ்சலினுடைய அஞ்ஞானம் மாத்

திரமுமில்லை. ஆனால் அஞ்ஞானத்தோடு கூடின கிளிஞ்சல். எவ்விதம் கிளிஞ்சலில் வெள்ளி கல்பிதமோ, அவ்விதமே, அந்த வெள்ளியை உண்டு பண்ணின அஞ்ஞானத்துடன் கூடின கிளிஞ்சலும் சுத்தமான கிளிஞ்சலில் கல்பிதமல்லவா? கிளிஞ்சலின் உண்மையைத் தெரிந்துகொண்ட மாத்திரத்தில் கிளிஞ்சலில் தோன்றின வெள்ளியைப்போல் அந்த வெள்ளியை உண்டு பண்ணின அஞ்ஞானத்துடன் கூடின கிளிஞ்சலும் மறைந்து விடும். அது போலவே, இந்த பிரம்மத்தில் தோன்றும் ஜகத்தை உண்டு பண்ணினது, பிரம்மம் மாத்திரம் இல்லை. பிரம்மத்தை தெரிந்து கொள்ளாததான அஞ்ஞானம் மாத்திரமுமில்லை. அஞ்ஞானத்தோடு கூடின பிரம்மம் உண்டுபண்ணினது. அது தான் மாயா (சபளித) பிரம்மமென்றும், ஈஸ்வரனென்றும் கூறப்படும். பிரம்மத்தின் உண்மையைத்தெரிந்த மாத்திரத்தில், பிரம்மத்தில் கல்பித்த ஜகத் எவ்விதம் மறைகிறதோ, அவ்விதமே அந்த ஜகத்தை உண்டு பண்ணின மாயா சபளிதமான பிரம்மமென்ற ஈசுவரனும் சுத்த பிரம்மத்தினிடத்தில் கல்பிதமானபடியால் மறைந்தே விடும். ஆனாலும், கிளிஞ்சலில் வெள்ளியைக்கல்பித்த புருஷனானவன், கிளிஞ்சலினுடைய உண்மையைத்தெரிந்துகொண்ட காலத்திலும் மறையாதது போல் பிரம்மத்தினிடத்தில் ஜகத்தைக்கல்பித்த கல்பகனான ஜீவனை மறையாமல் இருப்பதாகவே பிரம்மத்தின் உண்மையைத்தெரிந்துகொண்ட காலத்

திலும் ஒப்புக்கொள்ளவேண்டியது ஆவசியகமென்று ஆக்ஷேபிக்கவும் இடமில்லை. ஏனென்றால் கல்பகனுன புருஷன் அதிஷ்டானத்தின் உண்மையைத்தெரிந்து கொண்ட காலத்தில் அதிஷ்டான ஸ்வரூபத்தில் மறைந்து விடாமலேதான் இருக்கின்றான் என்ற நியமம் சொல்ல முடியாது. கல்பகனும், அதிஷ்டானத்தில் மறைந்து விடலாம். அதாவது, தேவதத்தன் என்ற ஒரு புருஷன் ஜாக்கிரதாவஸ்தையில் தான் ரொம்பவும் தரித்திரனாய் இருந்தாலும் ஸ்வப்னுவஸ்தையில் தான் அநேக விதமான வைபவத்தைக் காண்கிறான். அதாவது விசாலா என்ற நகரத்தில் குலசேகரன் என்ற பூபதியினுடைய பட்ட மகிஷியான சாரதாபாய் என்ற ராஜஸ்திரீயினிடத்தில் அநேக விதமான உபவாஸாதிகளால் ராஜகுமாரனாய் பிறந்தான். பிறந்து கௌமாராவஸ்தையிலேயே ஸகல ராஜ்யபாரங்களையும் வகிக்கும்படியான பராக்கிரமங்களையும் நீதிகளையும் அப்பயஸித்து பிதாவின் மனதிற்கு தன் செய்கையால் அடிக்கடி ஆனந்தத்தை விருத்தி பண்ணிக்கொண்டு வந்தான். குலசேகரன் என்ற ராஜனும் தன் குழந்தையான மார்த்தாண்ட பூபதியென்ற குமாரனுக்கு உஜ்ஜயனீ என்ற தேசத்தை ஆண்டு வருகிற ஸ்ரீகிருஷ்ண வர்மா என்ற ராஜனுடைய பெண்ணுன கமலாபாய் என்றவளை விவாகம் செய்து வைத்து கொஞ்ச காலம் தான் தன் குமாரனையும் குமாரனுடைய பத்தினியான கமலாபாயையும் இவ்விருவர்களையும் பார்த்து

அளவில்லாததான ஆனந்தக்கடலில் மூழ்கி வந்தான். இவ்விதமிருக்க, குலசேகரன் என்ற ராஜனும் தனது கடைசி காலத்தில் மார்த்தாண்ட பூபதி என்ற தன் குமாரனிடத்தில் ராஜ்யபாரத்தை ஒப்புவித்துவிட்டு தான் வனத்தை யடைந்தான். மார்த்தாண்ட பூபதியும் நீதிப்பிரகாரம் பிரஜைகளை பரிபாலனம் பண்ணுவதோடு கூட தனது ராஜ்யத்திற்கருகில் விளங்கி வரும் வேங்கடாத்ரி என்ற ஒரு பெரிய மலையைக் கண்டு இவ்வித மலையால் என்ன பிரயோஜனம், இவ்வித மலையையும், மலைக்கருகாமையிலுள்ள காடுகளையும் அழித்து ஒரு பெரிய ராஜதானியாய் பிரஜைகள் வஸிக்கும்படியாயும், ராஜ்யபாரங்களை நிர்வாகம் பண்ணக்கூடிய அநேக நியாயாதிபதிகளுடைய சபையை ஏற்படுத்தக்கூடியதாயும் ஏற்பாடு செய்யவேண்டியது ஆவசியகமென்று தான் தீர்மானித்து தன் பிதாவான குலசேகரன் காலம் முதல் தன் அரண்மனையில் மந்திரிஸ்தானத்தை வகித்து வருகிறவனான ராமசந்திரராவ் என்ற மந்திரியை வரவழைத்து தான் தீர்மானித்ததை ஏகாந்தத்தில் சொன்னான். மந்திரியும் “ராஜனே! தங்கள் புத்தியில் தோன்றினது ரொம்பவும் நலம் தான். ஆனாலும், இந்த வேங்கடாத்திரி என்ற மலையை அழிப்பது மனிதர்களால் ஸாத்தியமோ? இந்த மலையினுடைய சிகரம் எவ்வளவு உயரமுள்ளதென்று கண்டு பிடிக்க தங்கள் பிதா ராஜ்ய பரிபாலனம் பண்ணிவரும் காலத்திலேயே நானும்

அவர்களும் அதைக்கண்டு பிடிக்க ஒரு வருஷத்திற்கு நமது ராஜதானியில் வரக்கூடிய வரும்படியான ஏழு கோடியையும் அதற்காக சாங்க்ஷன் செய்து அநேக மாந்திரீகர்கள் மூலமாகவும் ஸித்தர்கள் மூலமாகவும் லௌகிக உத்தியோகஸ்தர்கள் மூலமாகவும் யத்னம் செய்து ஏழுகோடி ரூபாய் வீணாய் செலவழிந்தது மாத்திரம் பலனே தவிர சிகரத்தினுடைய உயரத்தைக்கண்டு பிடிக்க முடியவில்லை என்பது தங்களுக்குத்தெரிந்த விஷயமே! இவ்விதமான மலையின் சிகரத்தில் அநேக தேவர்களுடைய ஸ்தானங்களும் இருப்பதாக ஸித்த புருஷர்கள் மூலம் தெரிய வருகிறது, இவ்விதமிருக்க, இம்மலையை அழிப்பது நம்மால் ஸாத்தியமோ? ராஜன்! தீர்மானித்தது ரொம்பவும் உசிதம்தான். பெரிய ராஜதானியாய் இருந்தால் அநேக காரியங்களுக்கு ஸௌகரியமல்லவா? ஆனால் அது ஸாத்தியமான காரியமென்று எனக்குத் தோன்றவில்லை. தவிர, அம்மலையில் ரொம்பவும் அருமையான 'கந்த ஹஸ்தி' என்ற பெயருடன் கூடிய மத்தகஜங்கள் (மதம் பிடித்த யானைகள்) அநேகங்களாக ஸஞ்சரித்து வருகின்றன. மாதந்தோறும், நம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ள யானை விழுங் குழியில் நாலைந்து யானைகளுக்குக் குறையாமல் யானைகள் அகப்பட்டுக்கொண்டு வருகிறதல்லவா? ஒவ்வொரு யானையும் சுமார் 5000 பவுனுக்குக்குறைந்ததான யானையே இல்லை. இவ்வித மலையை அழித்துவிட்டு ராஜதானியாய் கல்பித்து விட்டால்

மாதந்தோறும் இவ்விதமான லாபத்தை எவ்விதமடைவோம். தவிர, கண்காக்ஷிகளுக்குத்தகுந்த அநேக விருக்ஷங்களும், அநேக மிருகங்களும், அநேக வைபவங்களுமுள்ள மலைகளை, ராஜன் அழிக்க நினைப்பது உசிதமோ? மற்ற ராஜர்கள் தன் ராஜ்யத்தில் ஒரு சிறு மலை அகப்பட்டால் போதுமென்று தபித்து வருகின்ருர்கள். நாம் இருக்கும் மலையை அழிக்க யத்னம் செய்கிறோம். இதென்ன ராஜ நீதி. ராஜனே! இந்த எண்ணத்தை இந்த நிமிஷத்திலேயே விட்டுவிடவேண்டுமென்று ராமசந்திரராவ் என்ற மந்திரியானவன் உபதேசிக்க மார்த்தாண்ட பூபதி என்ற ராஜன் தனது அபிப்பிராயத்திற்கு விரோதமாய்ச் சொல்லும் இந்த மந்திரியை நமது ராஜ்யத்தில் வைத்துக் கொள்வது இனி உசிதமில்லையென்று அந்த நிமிஷமே அந்த மந்திரியை ராஜ்யத்தை விட்டு விலக்கிவிட்டு ராமானுஜ நாயுடுவென்ற பெயருடன் கூடி கொஞ்சகாலமாக தன் ராஜ்யத்தில் திவான் பேஷ்காராயிருந்தவனை மந்திரியாக கல்பித்துக்கொண்டு தான் எண்ணின பிரகாரமே வேங்கடாத்ரி என்ற மலையை அழித்து ராஜதானியாய்ச் செய்ய யத்னம் செய்தான். அநேக விதமான பீரங்கி முதலான ஆயுதங்களால் மலைகளை ஒடைத்து, ஒவ்வொரு பாரைகளையும் யந்திரங்களால் அருகிலுள்ள ஸமுத்திரத்தில் போகும்படி செய்துகொண்டு தினந்தோறும் லக்ஷம் கூலிபாட்களும் பீரங்கி முதலான யந்

திரங்களும் அதற்கு சிலவிற்காக பிரதிதினம் லக்ஷம் பவுன்களும் இவ்விதமான ஆடம்பரங்களோடு பன்னிரண்டு வருஷகாலமாக இந்த மலையை உடைத்து வந்தான் இந்த ராஜன். இவ்விதமிருக்க, பதின்மூன்றுவது வருஷத்தில் மலையை உடைத்து வருகிற சமயத்தில் அந்த மலையில் கீழ்பக்கத்தில் ஒரு குகையில் வெகு நாளாய் தபஸை செய்து வருகிற வரதந்து என்ற ஒரு மகரிஷியினுடைய அருகில் ஒரு பீரங்கி குண்டு போய்விழ அவர் ஸமாதியில் நின்றும் விழித்துக்கொண்டு பரமகோபத்தடன் ஹூங்காரம் செய்துகொண்டு "யார் பிராஹ்மண ஹிம்ஸகனன ராஜா?" என்ற சப்தத்தை உயர்ந்த ஸ்வரத்தோடு சொல்லிவிட்டு தன் தபோ பலத்தால் ஒரு பைசாசத்தை சிருஷ்டித்து பிராம்மண ஹிம்ஸகனன ராஜனுடைய குலத்தை துவம்ஸம் பண்ணிவாவென்று ஆக்ஞாபித்தார். அந்த பைசாசமும் பயங்கரமான ரூபத்துடன் அந்த மலையை ஹிம்ஸித்து வரும் ஸகல வேலைக்காரர்களையும் துவம்ஸம் செய்து ராஜனையும் ஹூங்காரத்தால் பயத்தை உண்டுபண்ணிக்கொண்டு துரத்திற்று. அந்த பைசாசத்திற்கு எதிரில் நிற்க முடியாமல் ராஜனும் வேருராகவோடி ஓரிடத்திலும் தன்னை ரக்ஷிக்கிறமகானைக்காணாமல் அந்த வரதந்து மகரிஷியினுடைய காலிலேயே சரணமடைந்தான். வரதந்து என்ற மகரிஷியும் சரணாகதியடைந்தவனை ரக்ஷிக்கவேண்டுமென் சாஸ்திரத்தை யனுஸரித்து அந்த பைசாசத்தைத்

தன் தபோ பலத்தால் மறையும்படி செய்துவிட்டார். ராஜனே! உன் பணத்தினுடைய அகங்காரத்தால் அல்லவா, உன் மந்திரியால் சொல்லப்பட்ட ஹிதத்தையும் கேட்காமல் மந்திரி ஸ்தானத்திற்கு யோக்கியதையில்லாத ஒருவனை மந்திரியாக பாவித்துக்கொண்டு ஹிதோபதேசம் செய்த மந்திரியையும் ராஜ்யத்தினின்று விலக்கிவிட்டு இவ்விதம் மகரிஷிகளை ஹிம்ஸிக்கக்கூடிய காரியத்தில் நீ பிரவேசித்தாய்! ஆகையால் [असतः श्रीमदान्धस्य दारिद्र्यं परमाञ्जनं, அஸதஃ ஶ்ரீமதாந்தஸ்ய தாரித்ர்யம் பரமாஞ்ஜநம்,

श्रीमदान्धस्य, ஶ்ரீமதாந்தஸ்ய, தனத்தினுடைய மதத்தால் பொட்டையான; असत:, அஸதஃ, மூர்க்கனுக்கு दारिद्र्यम्, தாரித்ர்யம், தரித்திரத்தால் கஷ்டப்படும் தன்மையே; परमाञ्जनं, பரமாஞ்ஜநம், சிரேஷ்டமான மை.

பணமாகிற பித்த நீரால் மறைக்கப்பட்ட மூளையாகிற கண்ணுள்ளவனுக்கு தாரித்திரியம் என்ற குளிகைதான் மருந்தென்ற சாஸ்திரத்தை யனுஸரித்து] ராஜனே! நீ இந்த நிமிஷமே தரித்திரனாய் போகக்கடவது என்று சபித்தார். அந்த நிமிஷமே அவந்தீ என்ற தேசத்திற்கு அதிபதியான ஸ்ரீகோபாலவர்மா என்ற பூபதி இவன் (மார்த்தாண்ட பூபதியின்) ராஜ்யத்தை ஆக்ரமித்துக்கொண்டு தன் ராஜதா

னியாய்ச்செய்துகொண்டான். இந்த மார்த்தாண்ட பூபதியும் மகரிஷியினுடைய சாபத்தால் பரம தாரித்திரிய தசையை யடைந்து, தனக்கு இருந்த ராஜதானி போராமல் ஸித்தர்கள் வசிக்கும் மலையை அழித்து ராஜதாணியாக்கவேண்டுமென்ற பேராசையால் இருக்கும் ராஜதானியையும் இழந்து பரமகஷ்டத்தையனுபவிக்கும்படியான பாபியாய் ஆனான். இவ்விதமிருக்க, அரண்யத்தில் வேடர்களுடைய கூட்டத்தில் தானும் ஒரு வேடனாகச்சேர்ந்து கொண்டு வெகு காலமாய் விறகு வெட்டி ஜீவனம் செய்து வந்தான். ஒரு சமயம் தான் தனியாய் காட்டில் விறகு வெட்டப்போகும் காலத்தில் ஒரு புலியானது தன்மேல் பாய்ந்து தன்னை ஹிம்ஸித்தகாலத்தில் தான் ரொம்பவும் விசனத்தை யடைந்தான். இவ்விதமிருக்க, ஸ்வப்னாவஸ்தை தெளிந்து முழிப்பு வந்து விட்டது. மேற்கண்ட ஸ்வப்னாவஸ்தையில் கண்ட ஸகல வைபவங்களும் தனது ஆத்மாவில் கல்பிக்கப்பட்டதல்லவா ? முழித்துக்கொண்டவுடன ஸ்வப்னாவஸ்தையில் கல்பிக்கப்பட்ட ஸகல வைபவங்களும் தனது ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறாய்த்தோன்றுகிறதோ, ஸ்வப்னாவஸ்தையில் இந்த ஸகல வைபவங்களையும் கல்பித்த கல்பகனான மார்த்தாண்ட பூபதி என்ற ராஜனும் ஜாக்கிரதாவஸ்தையில் மறைந்து போய்விடுகிறானல்லவா ? (வாஸிஷ்டம்). ஆகையால், கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுமிடத்து, கிளிஞ்சலினுடைய உண்மையைத்தெரிந்த காலத்தில் வெள்ளி

மறைந்தாலும், வெள்ளியைக்கல்பித்த புருஷன் மறைய வில்லையே யென்றாலும், ஸ்வப்னவஸ்தையில் ஆத்மா வில் கல்பிக்கப்பட்ட ஸகல வைபவங்களும், அந்த வைபவங்களை கல்பித்த கல்பகனும் ஜாக்கிரதாவஸ் தையில் மறைந்துவிடுகிறதென்பது அனுபவசித்தமல் லவா ? ஆகையால் கல்பிதம், அதிஷ்டானத்தை தெரிந் துகொண்ட திசையில் மறையுமே தவிர, கல்பகன் மறையமாட்டான் என்ற ஆக்ஷேபணை சற்றேனும் ஒப்புக்கொள்ளத்தகுந்ததல்ல. அவ்விதமே, என்னால் பிரஹ்ம ஸ்வரூபத்தில் கல்பிக்கப்பட்ட ஈசுவரனோடு கூடின இந்த ஜகத்தானது பிரம்ம ஸாக்ஷாத்கார தசை யில் மறைந்து விடுவதுபோல், அதைக்கல்பித்த நா னும் பிரம்ம ஸாக்ஷாத்காரதசையில் மறைந்து பிரம்ம த்தின் உருவமாகவே ஆய்விடுவேன். ஆகையால், நான் பிரம்மம் தான், அதிஷ்டானமாகிற பிரம்மத் தைக்காட்டிலும் நான் வேறுபட்டவனல்ல என்ற பிர காரம் அளவற்ற ஸுகரூபமாயும், அழிவற்றதாயும், எல்லாவற்றிற்கும் மேலாயுப, அஞ்ஞானமாகிற இருட் டோ, அதின் காரியமாகிற ஜகத்தோ, இவ்விதம் இரண்டுவிதமான மலங்களற்றதாயுமிருக்கும் பிரம்ம ஸ்வரூபத்தினிடத்தில் ஒரே நிலையான புத்தியானது எவனுக்கிருந்தாலும், அவன் இன்ன ஜாதியில் பிறந்த வன், இந்த குலத்தில் ஜனித்தவன், என்ற வித்தியா ஸங்களை யற்றதான பிரம்மம் என்றே தீர்மானிக்க வேண்டும்.

भावना दर्शने हित्वा स्वयं केवलरूपतः ।
यस्तिष्ठति स तु ब्रह्मन् ब्रह्म न ब्रह्मवित्स्वयम् ॥

ஹாவநா தஶநே ஹித்வா ஸ்வயம் கேவலரூபத꞉ ।
யஸ்திஷ்டதி ஸது ப்ரஹ்மந் ப்ரஹ்ம ந ப்ரஹ்மவித்ஸ்வயம் ॥

भावनादर्शने, ஹாவநாதஶநே, தியானம், அநுபவம் இவ்விரண்டுகளையும்; हित्वा, ஹித்வா, விட்டு; स्वयं, ஸ்வயம், தான்; केवलरूपतः, கேவலரூபத꞉, கேவலஸ்வரூபமாக; यः, ய꞉, எவன்; तिष्ठति, திஷ்டதி, இருக்கின்றானோ; सतु, ஸது, அவனோ என்றால் ब्रह्मन्, ப்ரஹ்மந், ஹே பிரம்மாவே; ब्रह्म ப்ரஹ்ம பரபிரம்மம் தான் स्वयम, ஸ்வயம், தான் ब्रह्मवित्, ப்ரஹ்மவித், பிரஹ்மத்தை அறிந்தவன் என்றதாக; न, ந, இல்லை.

என்ற ஸ்மிருதியாலும் வாஸ்தவமான பிரம்ம ஸாக்ஷாத்காரத்தை யடைந்தவன் பரபிரமமமென்றே தீர்மானிக்கவேண்டும். ஆகையால், மேற்சொன்ன அநுபவம் எவனுக்கிருக்கிறதோ அவன் பிராம்மணன், சண்டாளன், என்ற வித்யாஸத்திற்கு உட்பட்டவனாக ஆகாதபடியாலும், கேவல பிரம்மரூபமானபடியினாலும், அவனே ஆசாரியனென்று என் நிச்சயம். எவ்வளவு காலம் ஜீவபாவம் போகவில்லையோ அவ்வளவுக்குள் வர்ணாச்ரமத்தால் பேதம் ஏற்படுமே தவிர ஜீவபா

வம் போன பிற்பாடு இவ்விதமான பேதம் அற்றுப் போகுமல்லவா? அதாவது

केऽयं दुर्नीतिरेषा वद भवति कदा वास्ति किं नौ विभागः
दैवादैश्वर्यमाप्तं निरवधि भवता किं न तत्भोक्तृता मे ।
तत्कुर्वेतन्न कुर्वित्यपि वदसि समं पश्य नो चेत्
कूटस्थे त्वां निवेश्य स्थिरमपि भवदैश्वर्यमुन्मूलयामि ॥

கேऽயம் துர்நீதிரேஷா வத பவதி கதாவாஸ்தி
கிம் நௌ விபாக:
தைவாதைச்வர்யமாப்தம் நிரவதி பவதா கிம் ந
தத்போக்த்ருதா மே ।
தத் குர்வேதந்ந குர்வித்யபி வதஸி ஸமம் பச்ய நோ சேத்
கூடஸ்தே த்வாம் நிவேச்ய ஸ்திரமபி பவதைச்-
வர்யமுன்மூலயாமி ॥

भवति, பவதி, உம்மிடத்தில்; इयम्, இயம், இந்த; दुर्नीतिः, துர்நீதி:, நீதிக்கு விரோதமான தன்மையானது; का, கா, என்ன? नौ, நௌ, நம்மிருவர்களுக்கும்; विभागः, விபாக:, பாகமானது; कदा वा, கதா வா, எப்பொழுதாவது; अस्ति किं, அஸ்தி, கிம், ஆயிற்று; दैवात्, தைவாத், பரபிரம்மத்தினிடத்தில் நின்றும்; निरवधि, நிரவதி, அளவற்றதான; ऐश्वर्यम्, ஐச்வ-

ர்யம், ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் என்ற ஐந்து விதமான ஈசத்தன்மையானது; आप्तम्, ஆப்தம், அடையப்பட்டதல்லவா? तत्, தத், அவ்விதமான ஐச்வரியத்தை உத்தேசித்து; भोक्तृता, போக்த்ருதா, புஜிக்கும் தன்மையானது; मे, மே, எனக்கு; किं, கிம், ஏன்; न, ந, இல்லை; तत्, தத், அதை; कुरु, குரு, செய்; एतत्, ஏதத், இதை; न कुरु, ந குரு, செய்யாதே; इत्यपि, இத்யபி, இந்தப்பிரகாரமும்; वदसि, வதஸி, சொல்லுகிறாய்; माम्, மாம், என்னை; समम्, ஸமம், சமமாக; पश्य, பச்ய, பார்; ईश, ஈச, ஈசுவரனே; नो चेत्, நோ சேத், அவ்விதம் செய்யாதுபோனால்; कूटस्थे, கூடஸ்தே, சுத்தப்பிரம்மத்தினிடத்தில்; त्वां, த்வாம், உன்னை; निवेद्य, நிவேத்ய, தெரியப்படுத்தி; स्थिरमपि, ஸ்திரமபி, வெகு காலம் இருக்கக் கூடியதானாலும்; भवदैश्वर्यम्, பவதைச்வர்யம், உன் ஸம்பத்தை; उन्मूलयामि, உந்மூலயாமி, அழியும்படி செய்து விடுவேன்.

அதாவது, ஒரு தேசத்தில் ஒரு பிராம்மணன் ஸாத்விகியான தன் மனைவியிடத்தில் இரண்டு புத்திரர்களைப்பெற்றான். அதில் முந்தினவனுக்கு விஷ்ணுமித்திரன் என்றும் இளையவனுக்கு ஹிமமித்திரன் என்

றும் பெயர். விஷ்ணுமித்திரனுக்கு இருபத்தைந்தாவது வயது நடக்கும்பொழுது ஹரிமித்திரனுக்கு பதினோராவது வயது நடந்துவந்தது. அந்த ஸமயத்தில் அந்தக்குழந்தைகளுக்கு பிதாவான பிராம்மணன்,

[धर्मतः सुतमुत्पाद्य वनं गच्छेत् जितेन्द्रियः, 𑌧𑌰𑍍𑌮𑌤𑌃 𑌸𑍁𑌤𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯 𑌵𑌨𑌂 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃,

धर्मतः, 𑌧𑌰𑍍𑌮𑌤𑌃, தர்மமாக; सुतम्, 𑌸𑍁𑌤𑌂, புத்திரனை; उत्पाद्य, 𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯, உண்டுபண்ணி; जितेन्द्रियः, 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃, ஜயிக்கப்பட்ட இந்திரியத்தை யுடையவனாய்க் கொண்டு; वनम्, 𑌵𑌨𑌂, அரண்யத்தை; गच्छेत् 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍, அடையவேண்டும்.]

என்ற சாஸ்திரத்தை அனுஸரித்து வானப்பிரஸ்தாச்ரமத்தையடையவேண்டுமென்று எண்ணினான். அவ்விதமெண்ணி, தனக்குள்ள சொத்துக்களை ஜேஷ்ட குமாரனை விஷ்ணுமித்திரனிடத்தில் கொடுத்து கனிஷ்டபுத்திரனை ஹரிமித்ரனையும் அவனிடம் ஒப்பிவித்து, ஹரிமித்திரன் மேஜராய் வந்தவுடன் உனக்கு சமானமாய் அவனை நினைத்து உன் ஸொத்தில் அவனுக்கும் சரியான பாகம் கொடுத்து அவனை பரிபாலிக்க வேண்டியது உன கடமை என்றும் ஜேஷ்ட புத்திரனை நியமனம் செய்துவிட்டு அரண்யத்தை யடைந்தான். உடனே ஜேஷ்ட புத்திரன் தன் மனைவியோடு ஸகல சொத்துக்களுக்கும் யஜமானனாயிருந்துகொண்டு தன்

தம்பியான ஹிமமித்ரனை சில காரியங்களைச்செய்யவென்று ஏவுகிறதும் சில காரியங்களைச் செய்யக்கூடாதென்று தடுக்கிறதும் இவ்விதம் நியமனம் செய்து கொண்டு வந்தான். இவ்விதமிருக்க, காலக்ரமமாக ஹிமமித்ரனென்ற கனிஷ்டனும் மேஜராய் மனைவியோடு கூடினவனாய் ஆனான். அச்சமயத்திலும் ஹிமமித்திரனை விஷ்ணுமித்திரன் அநேக விதமான காரியங்களில் கட்டளையிட்டு வந்தான். ஹிமமித்ரன் விஷ்ணுமித்ரனைப் பார்த்துச்சொன்னதாவது நீயும் நானும் ஒரே தகப்பனிடத்தில் பிறந்தவர்கள். அவ்விதமிருக்க நீ என்னை சமமாய் பார்க்காததோடுங்கூட வேலைக்காரனைப்போல் அநேக விதமான காரியங்களில் நீ ஏவி வருவது சற்றேனும் உசிதமல்ல. தவிர, நான் மைனராய் இருந்து வந்த காலத்தில் நீ சொல்லுவது உசிதமானாலும் மேஜரான காலத்தில் சொல்வது தப்பு. ஸமமாய் பார்க்கவேண்டும். அவ்விதம் பார்க்காவிடில் எனக்குள்ள சமமான பாகத்தை இந்த நிமிஷமே கொடுத்து விடவேண்டும். கொடுக்காவிடில் நியாயாதிபதிகளின் ஸபையில் நம்மிருவர்களின் வியவகார மூலமாய் சகல சொத்திற்கும் விரயம் ஏற்பட்டு நாம் இருவர்களும் ஒன்றுமில்லாதவர்களாய்விடுவோமல்லவா? என்றது போல் பிரம்மமாகிய மனிதனுக்கு மாயை ஆகிற ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர்களான ஈசுவரன், ஜீவன் என்ற இரண்டு குமாரர்களும் ஒருவருக்கொருவர் வாதம் பண்ணிக்கொள்வதாவது.

ஜீவன்:—ஈசனே! பரபிரம்மமாகிற பிதாவினிடத்தி ல் நின்று ஜகத்தை சிருஷ்டிப்பதோ, பரிபாலிப்பதோ, ஸம்ஹரிப்பதோ என்ற மகத்தான ஐசுவரியம் உனக்கு அகப்பட்டதல்லவா? அதில் நானும் பாத்தியமுள்ளவ னல்லவா! என்னைப்பார்த்து நீ ஸந்தியோபாஸனம் பண்ணு சுராபானம் பண்ணுதே என்று ஒரு காரியத் தை ஏவுகிறதும் ஒரு காரியத்தைச்செய்யாதே என்று தடுப்பதும் நியாயமோ! நான் கர்த்தா, போக்தா வென்ற அபிமானமாகிற மைனராயிருக்கும் தன்மை யில் நீ அவ்விதம் கட்டளையிட்டாலும் அகர்த்தா அபோ க்தாவாகிய சொரூபமாகிற மேஜரான தன்மையில் இருக்கும் காலத்தில் கட்டளையிடுவது உசிதமோ! ஸமமாய் இருக்கவேணும். ஆகையால் என்னை இனி ஒரு விதத்தாலும் ஆக்ஞாபிக்கக்கூடாது. 'அவ்விதம் நடக்காது போனால் நிர்விகாரமான சித்ரூபமான பிர ஹ்மத்தினிடத்தில் ஈசனான உன்னையும் ஜீவனான என் னையும் நானே கல்பித்துக்கொண்டு நீ வேறு, நான் வேறு என்ற பேதம் அற்றுப்போகும்படி செய்துகொ ண்டு, கேவல அதிஷ்டான ரூபமான பிரம்மமாகவே மிச்சம் தேரும்படி செய்துகொண்டு விடுவேன்' என்ற விதமான அநேக வித்வான்களுடைய அனுபவத்தைப் பார்க்க பிரம்ம ஸாக்ஷாத்காரத்தை யடைந்தவன் அ டைந்த பிற்பாடு ஜீவனென்றும், ஈசுவரனென்றும், பிராம்மணனென்றும், க்ஷத்திரியனென்றும், வைசிய னென்றும், சூத்திரனென்றும், பிரம்மசாரியென்றும்,

கிரஹஸ்தனென்றும், ஸந்நியாஸி என்றும், இவ்வித மான பேதங்கள் சற்றேனும் தோன்றாது என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. பிரஹ்ம ஸாக்ஷாத்காரத் தையடைந்தவன் பிரஹ்மம் தான். அவனே லோக குருவென்பது என்னுடைய ஸித்தாந்தம்.

அநேக விதமான வாதிகள் இந்த ஜகத்தைப்பொய் யென்று சொல்ல நியாயமில்லையென்றும் கிளிஞ்சலில் கல்பிக்கப்பட்ட வெள்ளிக்கும் இந்த ஜகத்திற்கும் அ நேகவிதத்தில் வித்தியாஸம் இருக்கிறதென்றும், ஆகை யால் ஜகத்து பொய்யென்று முன் சுலோகத்தில் ஸித் தாந்தம் செய்தது தப்பென்றும் ஆக்ஷேபிக்கின்றார்கள். அதாவது இந்த ஜகத்திற்கு காரணம் பிரஹ்மம் என்று வேதாந்தியின் ஸித்தாந்தம். ஆனபடியால் அந்த காரணமான பிரஹ்மம் சத்தியமென்றே அவர்களின் ஸித்தாந்தம். அவ்விதமிருக்க, காரியமான பிரபஞ் சத்தைப் பொய்யென்று எவ்விதம் சொல்லக்கூடும். காரணம் எவ்விதமான தன்மையோடு கூடினதோ அவ் விதமான தன்மையல்லவா காரியத்திலும் காணப்ப டுகிறது. மண்ணிலிருந்துண்டான தோண்டியில் மண் தன்மையல்லவா தோன்றுகிறது. ஒரு காலத்திலும் காரணம், காரியம் இவைகளுக்கு மாறுதலான ஸ்வபா வம் ஏற்படவே நியாயமில்லை. அதோடு கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியால் ஒருவிதமான காரியமும் செய்யக்கூடியதாகக் காணப்படவில்லை. இவ்விதமான

ஜகத்திலோ அநேக விதமான காரியங்கள் நடந்து வருகின்றன. கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியைப்போல் இப்பிரபஞ்சமும் பொய்யாயிருந்தால் அநேக விதமான காரியங்களை உண்டுபண்ண சாமர்த்தியமுள்ளதாக ஆக நியாயமுண்டோ? ஆகையால் இப்பிரபஞ்சத்திற்கும் கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளிக்கும் எவ்வளவு விதத்திலேயோ வித்தியாஸமிருப்பதால் கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியைப் போல் இப்பிரபஞ்சம் பொய்யென்று சொல்வதில் என்ன பிரமாணம்? என்ற ஆக்ஷேபணைக்கு ஸமாதானமாவது:—

கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளிக்கு இப்பிரபஞ்சம் சமானமுள்ளதே தவிர கொஞ்சமேனும் வித்தியாஸம் கிடையாது. கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியும் அறிவுக்கு விஷயம் இப்பிரபஞ்சமும் அவ்விதமே அறிவுக்கு விஷயமல்லவா? எவ்வெவைகள் அறிவுக்கு விஷயமோ அவ்வவைகள் பொய். எவ்வெவைகள் பொய்யோ அவ்வவைகள் அறிவுக்கு விஷயம் என்ற நியாயமே, கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியைக்காட்டிலும் இப்பிரபஞ்சத்தில் சற்றேனும் வித்தியாஸம் கிடையாது, அது போல் பொய்தான் என்ற விஷயத்தில், பிரமாணமாக ஆகிறதல்லவா.

यद्दृश्यं तन्मिथ्या यन्मिथ्या तद्दृश्यं यथा शुक्तिरजतम् ।

உத்பந்நஸ்யம் ததீயஸ்ய யதீயஸ்ய தத்பந்நஸ்யம் யதா
ஶுக்திரஜதம்॥

இப்பிரபஞ்சத்தில் அநேக விதமான காரியங்கள் உண்டாகின்றபடியால் இதை சத்தியமென்றே சொல்லவேண்டும் என்பதும் தப்பு. அநேக காரியங்கள் உண்டாவதற்காக இப்பிரபஞ்சத்தை சத்தியமென்று ஒப்புக்கொள்ளவேண்டாம். பொய்யாய் இருந்தாலும் அநேக காரியங்கள் உண்டாகலாம். கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியும் கிளிஞ்சலில் வெள்ளியென்று பிரமித்தவனுக்கு தற்காலத்தில் சந்தோஷம் என்ற காரியத்தை உண்டு பண்ணவில்லையா? பழுதையில் தோன்றும் பாம்பானது பழுதையில் பாம்பு என்று பிரமித்தவனுக்கு தற்காலத்தில் பயம் என்ற காரியத்தை உண்டுபண்ணவில்லையா? ஸ்வப்நத்தில் ஒரு புமான் ஒரு ஸ்திரீயோடு ஸம்பர்க்கம் பண்ணுவதாகக் காண்கிறான். அச்சொப்பனத்தில் கண்ட ஸ்திரீயும் பொய். செய்யப்பட்ட ஸம்பர்க்கமும் பொய்யல்லவா? அவ்விதமான பொய்யான ஸ்திரீ ஸம்பர்க்கத்தால் ரேதஸ்கலனம் என்ற ஒரு காரியம் உண்டாய் விழித்த பிறகும் அதைப்பார்க்கக் கூடியதாய் நேரிடுகிறதல்லவா? ஆகையால், இவ்வித அநேக திருஷ்டாந்தங்களால் இந்த ஜகத்து பொய்யாயினும் அநேக காரியங்களை உண்டுபண்ண வல்லமையுள்ளது தான். அதற்காக ஜகத்தை சத்தியமென்று ஒப்புக்கொள்ளவேண்டாம்.

அறிவுக்கு விஷயமானதால் இந்த ஜகத்தும் பொய் என்பது தான் சாஸ்திரத்திற்கு சம்மதமாகும். தவிர சத்தியமான பிரம்மத்தினிடத்திலிருந்து உண்டான ஜகத்து பிரம்மத்தைப் போலவே சத்தியமாய் இருக்க வேண்டுமல்லவா? என்பதும் சாஸ்திரத்திற்கும் சம்மதமாகாது. காரணம் எவ்விதமோ அவ்விதத் தன்மையோடு தான் காரியமிருக்கவேண்டுமெனுல் காரணம் காரியம் என்ற வித்தியாஸம் எவ்விதம் ஏற்படும். காரணம், காரியம் என்ற வியவகாரத்தாலேயே அவ்விரண்டுகளுக்கும் வித்தியாஸம் ஏற்படவேண்டுமென்று தோன்றுகிறதல்லவா அவ்விதமிருக்க, காரணம், காரியம் என்ற வியவகாரத்தையும் செய்துகொண்டு அவ்விரண்டுகளும் சமானமான வைபவங்களையுடையனவாயிருக்க வேண்டும் என்று ஆக்ஷேபிக்கிறவர்கள், ஸ்வபுத்தியால் இவ்விதம் சொல்லுகிறுர்களென்று தோன்றவில்லை. தவிர, அவ்விதமான நிர்ப்பந்தத்தை அனுஸரித்தும் பதில் கூறப்படுகிறது. அதாவது, வியவகாரத்தையனுஸரித்து பிரம்மம் இரண்டு விதம். சுத்தம் என்றும் மாயையோடு கூடினதென்றும் அவைகளில் சுத்தப்பிரம்மம் தான் முக்காலத்திலும் அழிவற்றது; சத்தியம் என்று வேதாந்த ஸித்தாந்தம். மாயையோடு கூடின பிரம்மமோ, மாயை பொய்யானபடியால் அத்துடன் கூடின பிரம்மமும் பொய்யென்றே ஸித்தாந்தம். அதில் சுத்தப்பிரம்மம் ஜகத்காரணம் அல்ல. மாயையோடு கூடின பிரம்மம் தான் ஜகத்காரணம். காரண

மான மாயையோடு கூடின பிரம்மமானது பொய்யா னபடியால் காரியமான இந்த ஜகத்தும் பொய்யென்ப தற்கு ஆக்ஷேபணையுண்டோ? இவ்விதமான தத்வ த்தை யறிந்துகொள்ளமுடியாமல் காரணமான பிரம் மம் சத்தியமானபடியால் காரியமான ஜகத்தும சத் தியமாயிருக்கவேண்டுமென்பது பிராந்தியுள்ளவன் பிரலாபிக்கிறது போலல்லவா இருக்கிறது! ஆகையால் ஒருவிதத்திலும் ஜகத்தை சத்தியமென்றோ, கிளிஞ்ச லில் தோன்றும் வெள்ளியைக்காட்டிலும் ஜகத்து வித் தியாஸமுள்ளதென்றோ, சொல்லுவதற்கு, சாஸ்திரம் கொஞ்சமேனும் இடங்கொடுக்காது என்பது வித்வா ன்களுடைய அனுபவ ஸித்தம். இது விஷயங்களை அடியிற் கண்ட சுலோகத்தால் விவரிக்கின்றார்.

शश्वन्नश्वरमेव विश्वमखिलं निश्चित्य वाचा गुरोः
नित्यं ब्रह्म निरन्तरं विमृशता निर्व्याजशान्तात्मना।
भूतं भावि च दुष्कृतं प्रदहता संविन्मये पावके
प्रारब्धाय समर्पितं स्ववपुरित्येषा मनीषा मम ॥

ശശ്വന്നശ്വരമേവ വിശ്വമഖിലം നിശ്ചിത്യ വാചാ
ഗുരോഃ
നിത്യം ബ്രഹ്മ നിരന്തരം വിമൃശതാ നിർവ്യാ-
ജശാന്താത്മനാ

𑌭𑍂𑌤𑌂 𑌭𑌾𑌵𑌿 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌦𑌹𑌤𑌾 𑌸𑌂𑌵𑌿-
𑌨𑍍𑌮𑌯𑍇 𑌪𑌾𑌵𑌕𑍇
𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌯 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌂 𑌸𑍍𑌵𑌵𑌪𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾
𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥

इदम्, 𑌇𑌦𑌂, இந்த; विश्वम्, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂, ஜகத்தை; शश्वत्, 𑌶𑌶𑍍𑌵𑌤𑍍, அடிக்கடி; नश्वरमेव, 𑌨𑌶𑍍𑌵𑌰𑌮𑍇𑌵, துச்சம், தான்; इति, 𑌇𑌤𑌿, என்று; गुरोः, 𑌗𑍁𑌰𑍋𑌃, குருவி னுடைய; वाचा, 𑌵𑌾𑌚𑌾, உபதேசத்தால்; निश्चित्य, 𑌨𑌿-𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯, தீர்மானித்துக்கொண்டு; नित्यम्, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂, முக் காலத்திலும் அழிவில்லாததான; ब्रह्म, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, பிரம் மத்தை; निरन्तरम्, 𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌂, எப்பொழுதும் இடை விடாமல்; विमृशता, 𑌵𑌿𑌮𑍃𑌶𑌤𑌾, தியானம் பண்ணுகி றவனும்; निर्व्याजशान्तात्मना, 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌜𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾, வாஸனை நாசம், மனோ நாசம், இவ்விரண்டையும் உடை த்தானவனும், भूतम्, 𑌭𑍂𑌤𑌂, ஸஞ்சிதமான; दुष्कृ-तम्, 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂, புண்ணியபாபங்களையும்; भावि च, 𑌭𑌾𑌵𑌿 𑌚, வரப்போகிறதான; दुष्कृतम्, 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂, புண்ணியபாபங்களையும், संविन्मये, 𑌸𑌂𑌵𑌿𑌨𑍍𑌮𑌯𑍇, பிரம் மஞானரூபமான; पावके, 𑌪𑌾𑌵𑌕𑍇, அக்னியில்; प्रदहता, 𑌪𑍍𑌰𑌦𑌹𑌤𑌾, பொசுக்குகிறவனுமிருக்கிற; येन, 𑌯𑍇𑌨, யாதொரு பிரம்மநிஷ்டனாலே; स्ववपुः, 𑌸𑍍𑌵𑌵𑌪𑍁𑌃, தன்

சரீரமானது ; प्रारब्धाय, ப்ராரப்தாய, பலத்தைக்கொடுத்து வரும் கர்மாவின் பொருட்டு ; समर्पितम्, ஸமர்ப்பிதம், அர்ப்பணம் செய்யப்பட்டதோ ; सः ஸ:, அந்த பிரம்மநிஷ்டன்; इति, இதி, முன் சொன்ன பிரகாரம்; गुरुः, குரு:, ஆசாரியன் ; इति, இதி, என்று मम मनीषा, மம மநீஷா, என் ஸித்தாந்தம்.

தாத்பரியம்:—

[तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् ।
समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥

தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ।
ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ॥

तद्विज्ञानार्थं, தத்விஜ்ஞாநார்த்தம், அந்த பிரம்மத்தை தெரிந்துகொள்ள வேண்டியதின் பொருட்டு ; सः, ஸ:, பிரம்மத்தை தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பமுள்ளவன் ; समित्पाणिः, ஸமித்பாணி:, ஸமித்தைக்கையில் உள்ளவனாக ; श्रोत्रियम् ஶ்ரோத்ரியம், விஹிதகர்மானுஷ்டானத்தில் தத்பரனையும், ब्रह्मनिष्ठम् ப்ரஹ்மநிஷ்டம், பிரம்ம ஸ்வரூபத்தில் ஸதா நிஷ்டையுள்ளவனையும் இருக்கிற ; गुरुमेव குருமேவ, குருவையே ; अभि, அபி, அபிமுகமாக ; गच्छेत्, கச்சேத், அடையவேண்டும்.

அநேகவிதமான அனர்த்தங்களாகிற இமிசைக்கு இருப்பிடமான இந்த ஸம்ஸாரத்தில் ஒழிவைய டைந்து இதில் அடிக்கடி அகப்பட்டுக்கொள்ளாமல் இதிலிருந்தும் விடுபடவேண்டுமென்ற முமுக்ஷுவான வன் சாஸ்திரத்தில் கூறியபடி ஸத்குருவை யடைந்து இப்பிரபஞ்சத்தின் உண்மையையும், பிரம்மத்தின் உண் மையையும் நன்ருய் விசாரித்து இப்பிரபஞ்சம் உண் மையில் விசாரிக்கப் பொய்யென்றும் பிரம்மமே சத்திய மென்றும் ஸத்குருவினுடைய உபதேசத்தால் நிர்மானி ப்பதோடுங்கூட இப்பிரபஞ்சத்திற்கு அதிஷ்டானமான பிரம்ம ஸ்வரூபத்தில் மனதை லயப்படுத்தி அந்த பிர ம்மத்தின் ஆகாரமாகவே மனதாகும்படி பாவிக்கவே ண்டும். அவ்விதமாக வாஸனநாசம், மனோநாசம் இவ்விரண்டும் உபாயங்களாக சாஸ்திரங்களில் கூறப்ப ட்டிருக்கிறது. ஆகையால் அவைகளை அவசியமனுஷ் டானம் செய்கிறவனுய் இருக்கவேண்டும். அதாவது வாஸனு என்றால் ஆஸுர ஸம்பத்தின் வாஸனை. அதாவது,

दंभो दर्पोऽतिमानश्च क्रोधः पारुष्यमेव च ।

தம்ஹோ தவெ்ாதிமாநஶ்ச க்ரோத: பாரு ஷ்யமேவ ச ।

दंभः, தம்ஹ:, ஐசுவரியத்தால் உண்டாகும் அகங்கா ரம்; दर्पः, தவ:, தர்மானுஷ்டானத்தாலுண்டாகும் அகங்காரம்; अतिमानः, அதிமாந:, இவ்விரண்டு கார

ணங்களாலும் தானே லோகங்களால் பூஜிக்கத்தகுந்தவன் என்ற எண்ணம்; क्रोधः, க்ரோதம், காரணமின்றி மனதிற்கு ஏற்படும் விகாரம்; पारुष्यम्, பாருஷ்யம், மனிதர்களுக்கு பயத்தை உண்டுபண்ணும்படியான வார்த்தை,

இவைகள் எந்த மனிதர்களிடமிருந்து வருகின்றனவோ அவர்களை அசுரர்களென்று கூறப்படும். இவைகளுக்கு ஒரு நிமிஷத்தில் நமது மனதில் அவகாசம் கொடுத்துவிட்டோமேயானால் அவைகள் அடிக்கடி தன்னை இந்த மனிதன் வரவழைத்துக்கொள்ளும்படி வாஸனை என்ற தன் குணத்தை கற்பித்துவிட்டுப்போகிறது. ஆகையால் இந்த ஆசார ஸம்பத்துகளுக்கு சற்றேனும் மனதில் இடங்கொடுக்காமல் மனதை சுத்தமாய் வைத்துக்கொள்ளுகிறவன்தான் வாஸனா நாசமுள்ளவன் என்று ஸித்தாந்தம்]

மனோ நாசமாவது மனதிற்கு எப்பொழுதும் ஏற்பட்டு வருகிற அநேக விதமான பரிணாமத்தை (உருவமாக ஆகும் தன்மையை) அடக்கி வாஸ்தவ ஸ்வரூபத்தில் போய் இந்த மனது ஒடுங்கும்படியாய் செய்வதே மனோநாசம். இவ்வித மனோநாசம், வாஸனாநாசம் இரண்டுமுள்ளவன்தான் மேற்கண்டபடி ஸத்குருவினுடைய பிரஸாதத்திற்கு பாத்திரனாய் பிரஹ்மஸ்வரூபத்தை எப்பொழுதும் இடைவிடாமல் அனுஸந்தானம் செய்வதற்கு லாயக்குள்ளவனாக ஆகிறான்.

இவ்விதமான திவ்விய பிரம்ம ஸ்வரூபானுவத்தால் அவனடையும் பலம் அடியிற் கூறியவாறு. அதாவது ஸஞ்சிதம், பிராரப்தம் ஆகாம்யமென்று கர்மா மூன்று விதம். ஸஞ்சிதமாவது முன் ஜன்மாக்களிலோ, அல்லது இந்த ஜன்மாவிலேயே பிரம்மஞானத்தை அடைவதற்கு முன்பாக இந்த புருஷனால் செய்யப்பட்டு பலத்தைக்கொடுக்க ஆரம்பிக்காமல், பலத்தைக்கொடுக்க சமயத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டு காத்துவரும் கர்மா ஸஞ்சிதகர்மா. பிராரப்தமாவது, இச்சரீரமாகிற பலத்தைக்கொடுத்துக்கொண்டு அநுபவத்தில் நடந்துவரும் கர்மா. ஆகாமியாவது ஞானமுண்டான பிற்பாடு ஏற்படக்கூடும் கர்மா. இவ்வித மூன்று கர்மாக்களில் ஸஞ்சிதம், ஆகாமியம் என்ற இரண்டு கர்மாக்களையும் தனக்கு ஏற்பட்ட திவ்விய பிரம்ம ஆத்மானுபவத்தால் நாசம் பண்ணக்கூடிய வல்லமையுள்ளவனாக ஆகிவிடுவான். பிராரப்த கர்மாவையோ அனுபவித்தே தீரவேண்டும். எவ்விதம் ஒரு வில்லாளி, பாணத்தை விடுவதற்கு முன் அந்த பாணத்தில தன் ஸ்வாதந்தரியத்தையடைந்தவனாய் இருந்தாலும் விட்டுவிட்ட பாணத்தில் தன் ஸ்வாதந்தரியத்தை இழந்து விடுகிறானோ, அதாவது, அந்த பாணத்திற்கு எவ்வளவு வேகமோ அவ்வளவு வேகத்தோடு போய் தானாகவே தான் விழவேண்டுமோ, அவ்விதமே ஜீவப்ரம்ம ஐக்கிய ஞானத்திற்கு பலத்தைக்கொடுக்க ஆரம்பிக்காததான கர்மாவில் தனக்கு ஸ்வாதந்தரியம் ஏற்பட்டாலும், பலத்தைக்கொடுக்க

ஆரம்பித்ததான கர்மாவில் ஸ்வாதந்தரியம் கிடையாதென்பது அனுபவஸித்தம். அந்த பிராரப்த கர்மாவிற்கு பலம் என்ற வேகமானது எவ்வளவு காலம், எவ்வளவு தூரம், போகக்கூடியதோ அவ்வளவு பரியந்தம் அந்த பிராரப்த கர்மாவை அனுபவித்துத்தான் தீரவேண்டும். ஆனால் அந்த பிராரப்த கர்மாவினால் பிரம்ம நிஷ்டனுக்கு ஒருவிதமான சம்பந்தமுமில்லை. தனக்கு சரீரம் இருப்பதாகவும், அதால் ஒரு விதமான இன்பமோ, துன்பமோ, ஏற்படுவதாகவும் எண்ணமில்லாமல் கேவலம் பிரம்மமாகவே தான் இருந்துகொண்டு ஜீவன்முக்தன் என்ற வியவகாரத்திற்கு யோக்கியனாக ஆகிறான். லோகரீதியாக பிராகிருத ஜனங்களுடைய திருஷ்டியை அனுஸரித்து பிராரப்த சரீரம் அவனுக்கிருப்பதுபோல் தோன்றுமே தவிர, அவனுடைய திருஷ்டியால் கிடையாது. அந்த பிராரப்த கர்மா இருந்தாலும் அவனுடைய அனுபவத்தில் இல்லாமலிருப்பதற்கு மேல்தான். இவ்வித திவ்வியானுபவமுள்ளவன் எவனாயிருந்தாலும் அவன் இன்ன ஜாதி இன்ன குலமென்று விசாரிக்கத்தகாதவன். ஆனபடியால் ஸாக்ஷாத் பிரம்மமென்றே தீர்மானிக்கவேண்டும். அவ்விதமான மஹான் இப்பிரபஞ்சத்திற்கோ, எனக்கோ, அஞ்ஞானமாகிற இருளைப்போக்கடித்து தத்வஞானமாகிற பிரகாசத்தை விளக்கி ஸகல ஜீவகோடிகளையும் கிருதார்த்தர்களாகச்செய்ய ஆவிர்பவித்த தக்ஷிணாமூர்த்தியாகிற பரம குருவென்றே என் ஸித்தாந்தம்.

स्थूलोऽहं कृशोऽहं अन्धोऽहं बधिरोऽहं

ஸ்தூலோஸஹம் க்ருஶோஸஹம் அந்தோஸஹம் பதி-ரோஸஹம்

अहं, அஹம், நான்; स्थूलः ஸ்தூலஃ, பெருத்தவன்; अहं कृशः, அஹம் க்ருஶஃ, நான் இளைத்தவன்; अहं अन्धः அஹம் அந்தஃ, நான் குருடன்; अहं बधिरः, அஹம் பதிரஃ, நான் செவிடன்

என்ற அநேகவிதமான அனுபவங்களால் ஸகல ஜனங்களுக்கும் தேகமே ஆத்மாவென்று தீர்மானமானதால், தேகத்தைக்காட்டிலும் ஆத்மா வேறென்றதான அனுபவம் ஒருவருக்குமில்லையென்பது ஸித்தம். மேற்கண்ட அனுபவத்தால் 'நான்' என்ற சப்தத்தினுடைய பொருளில், பெருத்தல், இளைப்பு முதலான தன்மைகள் தோன்றுகின்றனவல்லவா? தேகத்தைக்காட்டிலும் ஆத்மா வேறாய் இருந்தால், தேகத்தில் பிரஸித்தமாய் ஏற்பட்ட பெருமன், இளைப்பு முதலான தன்மைகள் 'நான்' என்ற சப்தத்தினுடைய பொருளான ஆத்மாவினிடத்தில் தோன்றுவதற்கு நியாயமில்லையல்லவா? ஆகையால் தேகமே ஆத்மாவென்ற ஸகலப்பிராணிகளுடைய அநுபவம் சாஸ்திரசம்மதமாகவே இருக்கவேண்டும். தேகமே ஆத்மாவாய் இருப்பதால், ஆத்மா,

जायते, ஜாயதே, பிறத்தல்; अस्ति, அஸ்தி, இருத்

தல்; वर्धते வர்த்தே, வளர்தல்; परिणमते, பரிண-மதே, மாறுதல்; अपक्षीयते, அபக்ஷீயதே, குறைதல்; विनश्यति, விநஶ்யதி, நாசமுறுதல்;

என்ற ஆறுவிதமான விகாரமுள்ளதாக ஆகிறது. இவ்விதம் விகாரியான ஆத்மாவுக்கும் விகாரமற்றதான பிரம்மத்திற்கும் சற்றேனும் ஐக்கியம் ஸம்பவிக்க நியாயமில்லை. ஆகையால் ஜீவாத்மாவுக்கும் பிரம்மத்திற்கும் ஐக்கியம் சாஸ்திர சம்மதமென்று ஸித்தாந்தம் செய்தது மிகவும் தப்பென்ற ஆக்ஷேபணைக்கு சமாதானமாவது: தேகமே ஆத்மாவென்பதில் ஒரு விதமான பிரமாணத்தையும் நிரூபணம் செய்யமுடியாது. ஸகலப்பிராணிகளுக்கும் தேஹாதிகளைக்காட்டிலும் ஆத்மா வேறென்றே அனுபவமே தவிர, தேகம் ஆத்மாவென்று ஒருவருக்காவது அநுபவம் கிடையாது. சாஸ்திரத்தைப்பார்க்க பதார்த்தங்கள் இரண்டே. ஒன்று ஆத்மா மற்றொன்று அனாத்மா. ஆத்மாவென்ற பதார்த்தத்தைக்கூறும் சப்தம் 'அஹம்' என்ற சப்தம். அனாத்மாவான பதார்த்தத்தைக்கூறும் சப்தம் 'இதம்' என்ற சப்தம். ஒருவருக்காவது 'இதம்' என்ற சப்தத்தால் ஆத்மாவென்ற அனுபவம் கிடையாது. என்னுடைய தேகம், என்னுடைய கண், என்னுடைய செவி, என்னுடைய மனது, என்னுடைய புத்தி என்ற அநுபவங்களால் தேகாதிகளைக் காட்டிலும் ஆத்மா வேறென்றே ஸகலரும் அனுப

வித்து வருகிறார்கள். தேகமே ஆத்மாவென்று வாதிக்கிறவர்களும் 'என்தேக' மென்ற அநுபவத்தை மாற்றக்கூடிய சக்தியுள்ளவர்களாக ஆகமாட்டார்கள். அவர்களும் என் தேகமென்றே அநுபவித்து வருகிறார்கள். அவ்வித அனுபவ காலத்தில் தேகத்தைக்காட்டிலும் 'என்'என்ற சப்தத்தின் பொருள் வேறாய் தோன்றுகிறபடியால் தேகமே ஆத்மாவென்ற ஸித்தாந்தம் அவர்களின் ஸமாஜத்திலேதான் நிலைநிற்குமோ? ஆகையால், தேகாத்மவாதம் சற்றேனும் சாஸ்திரங்களுக்கோ, வித்வான்களுக்கோ ஸம்மதமாகாது. எப்பொழுது இவ்விதமான காரணத்தால் தேகாதிகளைக்காட்டிலும் ஆத்மா வேறென்ற தீர்மானம் ஏற்பட்டுவிட்டதோ அப்பொழுது ஆத்மாவினிடத்தில் மேற்கண்ட விகாரங்கள் எவ்விதம் ஏற்படும்? ஆத்மா அவிகாரியான வஸ்துவே. அவ்விதம் அவிகாரியான ஆத்மஸ்வரூபமேதான் பிரம்மம் என்ற ஜீவப்பிரம்ம ஐக்கியானுபவம் சாஸ்திர சம்மதமாகுவதில் ஆக்ஷேபணையுண்டோ? இவ்விஷயங்களைத்தான் விவரமாமய் அடியிற்கண்ட சுலோகத்தால் ஸ்ரீசங்கரகுருவானவர் பிரகாசப்படுத்தி வருகின்றார்.

या तिर्यङ्नरदेवताभिरहमित्यन्तः स्फुटा गृह्यते
यद्भासा हृदयाक्षदेहविषया भान्ति स्वतोऽचेतनाः ।
तां भास्यैः पिहितार्कमण्डलनिभां स्फूर्तिं सदा भावयन्
योगी निर्वृतमानसो हि गुरुरित्येषा मनीषा मम ॥

𑌯𑌾 𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑌰𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿𑌰𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌫𑍁𑌟𑌾
𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇
𑌯𑌦𑍍𑌭𑌾𑌸𑌾 𑌹𑍃𑌦𑌯𑌾𑌕𑍍𑌷𑌦𑍇𑌹𑌵𑌿𑌷𑌯𑌾 𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵-
𑌤𑍋𑌽𑌚𑍇𑌤𑌨𑌾𑌃 ।
𑌤𑌾𑌂 𑌭𑌾𑌸𑍍𑌯𑍈𑌰𑌵𑌿𑌭𑌿𑌤𑌾𑌕𑌾𑌲𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌨𑌿𑌭𑌾𑌂 𑌸𑍍𑌫𑍂𑌰𑍍𑌤𑌿𑌂
𑌸𑌦𑌾 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍
𑌯𑍋𑌗𑍀 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌮𑌾𑌨𑌸𑍋 𑌹𑌿 𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌤𑍍𑌰
𑌷𑌾 𑌽𑌨𑍁𑌭𑍂𑌷𑌾 33 ॥

तिर्यङ्नरदेवताभिः, 𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑌰𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿𑌃, மிருகம் முதலான ஜந்துக்கள் மனுஷ்யர்கள், தேவர்கள் இம் மூன்று விதமான பிராணிகளாலேயும், अहम्, 𑌅𑌹𑌂, நான் ; इति, 𑌇𑌤𑌿, என்று ; अंतः, 𑌅𑌂𑌤𑌃, தேகாதிக ளைக்காட்டிலும் வேறாக ; स्फुटा, 𑌸𑍍𑌫𑍁𑌟𑌾, ஸகல ஜகத் தையும் பிரகாசிப்பித்துக்கொண்டு தானும் ஸ்வயமாய் பிரகாசித்துக்கொண்டு வருகிறதான ; या, 𑌯𑌾, யா தொரு ; स्फूर्तिः, 𑌸𑍍𑌫𑍂𑌰𑍍𑌤𑌿𑌃, பிரகாசவடிவான ஆத்மஸ் வரூபமானது ; गृह्यते, 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇, பிரத்யக்ஷமாய் அநுபவிக்கப்படுகின்றதோ ; यद्भासा, 𑌯𑌦𑍍𑌭𑌾𑌸𑌾, யா தொரு பிரகாசவடிவாகிற ஆத்மவஸ்துவின் காந்தியால்; हृदयाक्षदेहविषयाः, 𑌹𑍃𑌦𑌯𑌾𑌕𑍍𑌷𑌦𑍇𑌹𑌵𑌿𑌷𑌯𑌾𑌃, மனது இந்திரியம், தேகம் முதலான விஷயங்கள் ; स्वतः, 𑌸𑍍𑌵𑌤𑌃, ஸ்வயமாக; अचेतनाः (सन्तः), 𑌅𑌚𑍇𑌤𑌨𑌾𑌃 (𑌸𑌂

தா), ஜடங்களாய் இருக்கிறவைகளைக்கொண்டு; भान्ति, பாந்தி, பிரகாசிக்கின்றதுகளோ; भास्वैः, பாஸ்வை:, ஸூர்யனுடைய காந்தியால் பிரகாசிக்கிறதுகளான மேகங்களால்; पिहितार्कमण्डलनिभाम्, பிஹிதார்க்கமண்டலநிபாம், மறைக்கப்பட்ட சூரியமண்டலத்திற்கு சமானமான; ताम्, தாம், அந்த; स्फूर्ति ஸ்பூர்த்திம் பிரகாசவடிவமாகிற ஆத்மவஸ்துவை; सदा, ஸதா, எக்காலத்திலும்; भावयन्, பாவயந், தானே அதுவென்று அநுஸந்தானம் பண்ணுகிறவனும்; योगी, யோகீ, அதற்குத்தகுந்த ஸாதனங்களை அநுஷ்டானம் பண்ணுகிறவனும்; निर्वृतमानसः, நிர்வ்ருதமாநஸ:, அவ்விதம் அநுஸந்தானத்தினுடைய பலமான ஸ்வரூபஸௌக்யத்தை யடைந்தவனுமிருக்கிற மனிதன்; हि, ஹி, யாதொருகாரணத்தால்; ब्रह्म, ப்ரஹ்ம, ஜாதிவர்ணாச்ரமம் அற்றதான பரபிரம்மமேயோ; तस्मात्, தஸ்மாத், ஆகையால்; सः, ஸ:, அவன்; चण्डालः, சண்டால:, சண்டாளனாகவோ; अस्तु, அஸ்து, இருக்கட்டும்; द्विजः, த்விஜ:, பிராம்மணனாகவோ இருக்கட்டும்; गुरुः, குரு:, லோககுரு; इति, இதி, என்று; मम, மம, என்னுடைய; मनीषा, மநீஷா, நிச்சயம்.

தாத்பர்யம்:—புண்ணியம், பாபம், புண்ணிய பாப மிச்ரம், என்று மூன்றுவிதம், கர்மாவானது சாஸ்திரத்தில் பிரஸித்தம். புண்யகர்மாவென்றால் சாஸ்தி

ரத்தில் அவசியம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டவைகள். பாபகர்மாவென்றால் சாஸ்திரத்தில் செய்யக்கூடாதென்று தள்ளப்பட்டவையாகும். புண்யம் பாபம் இரண்டும் சேர்ந்தது மிச்ரகர்மா. இவ்விதமான மூன்றுவிதமான கர்மாக்களில் பாபகர்மாவைச்செய்வதின் பலன் மிருகம் முதலான திரியங் ஜன்மாவில் ஜனனம். புண்ணியகர்மாவைச்செய்வதின் பலன், தேவதைகளாக ஸ்வர்க்கலோகத்தில் ஜனிப்பது. புண்ணியம் பாபம் என்ற இரண்டு கர்மாக்களைச்செய்வதின் பலன் மனிதலோகத்திலே மனிதனாய் ஜனிப்பது. இவ்விதம் பாபகர்மாவினால் ஏற்பட்ட மிருகம் முதலான திரியங் ஜந்துக்களுக்கோ புண்ணிய கர்மாவினால் ஏற்பட்ட இந்திரன் முதலான தேவர்களுக்கோ, புண்ணியபாபகர்மாவினால் ஏற்பட்ட மனிதர்களுக்கோ, சகலருக்கும் 'நான்' என்ற சப்தத்தாலேயே ஆத்மாவென்று விவகரிக்கும் அனுபவம் இருந்து வருகிறதே தவிர, வேறு விதமான சப்தத்தால் ஆத்மாவின் அனுபவம் கிடையாது. 'நான்' என்ற சப்தத்தை விவரிக்காதவன் ஒருவனும் இவ்வுலகில் இல்லை. 'நான்' என்ற சப்தமோ தேகத்தைக்காட்டிலும் வேறான ஆத்மவஸ்துவைத் தான் சொல்லும். ஆனாலும்: தேகத்திலும் 'நான்' என்ற சப்தத்தால் வியவகரித்து வருகிறார்களேயென்றால், அந்த வியவகாரமும் செம்பருத்திப்பூவின் சமீபத்திலுள்ள ஸ்படிகத்தில் அந்த செம்பருத்திப்பூவின் சிவப்பு காந்தியைக்கல்பிப்பது போல ஆத்மாவின் சமீ

பத்திலுள்ள தேகத்தில் ஆத்மாவைச்சொல்லும் 'அஹ
ம்' என்ற சப்தத்தைக்கல்பிப்பதே ஆகும். அன்றி
உண்மையாக ஏற்படாது. ஆகையால் 'அஹம்' என்ற
சப்தத்தால் ஆத்மாவை ஸகலரும் அநுபவித்துவருகிற
படியாலும், 'அஹம்' என்ற சப்தமும் அனாத்மவஸ்து
க்களைச்சொல்வதில் தாத்பரியமில்லையென்பதை 'அஹ
ம்' என்ற சப்தமே காட்டுகிறபடியாலும், 'அஹம்'
என்ற சப்தத்தின் பொருளான ஆத்மா ஸகலமான
அனாத்மவஸ்துக்களைக்காட்டிலும் வேறென்பதோடுங்
கூட ஸகல அனாத்மவஸ்துக்களுடைய கல்பனைக்கு
அதிஷ்டானமாயும், ஜடமான மனது, இந்திரியம்,
தேகம், முதலான அனாத்மவஸ்துக்களை பிரகாசிப்பித்
துக்கொண்டு, தான் பிரகாசிப்பதற்கு வேறொரு பிரகா
சத்தை அபேக்ஷிக்காமல் ஸ்வயமாகவே பிரகாசித்துக்
கொண்டு சிதேகரஸ (चिदेकरस) வடிவாக விளங்கிவரு
வது அநுபவஸித்தம். ஆனால், ஸகலராலும் 'அஹம்'
என்ற சப்தத்தால் ஆத்மா அநுபவிக்கப்படுமேயாகில்,
ஆத்மாவின் அநுபவமல்லவா மோக்ஷத்திற்குக்கா
ணம். ஆகையால் ஸகலரும் முக்தர்களாகவே ஆகிவி
டலாமே! அநேக ஜீவகோடிகளில் ஒருவனையும் பத்தன்
(बद्धः) என்று சொல்ல நியாயமில்லையே? அநேகமாய்
ஸகலரும் பத்தர்களாகவல்லவோ காணப்படுகிறது.
ஆகையால் 'அஹம்' என்ற சப்தத்தால் 'ஆத்மா'
அனுபவிக்கப்படுகிறதென்று சொல்வது ஸகலரும்
பத்தர்களாக காணப்படுவதான பிரத்யக்ஷானுபவத்

திற்கு விரோதமாக இருக்கிறதல்லவா? என்று ஆக்ஷேபத்திற்கு இடமுண்டு. ஆனாலும், அந்த ஆக்ஷேபனை, ஆக்ஷேபனையாக ஏற்படமாட்டாது.

तमहं प्रत्ययव्याजात् सर्वे जानन्ति जन्तवः ।
तथापि न विजानन्ति शिवरूपेण मोहिताः ॥

தமஹம் ப்ரத்யயவ்யாஜாத் ஸர்வே ஜாநந்தி ஜந்தவ: ।
ததாபி ந விஜாநந்தி ஶிவரூபேண மோஹிதா: ॥

तम्, தம், அந்த ஆத்மாவை; अहंप्रत्ययव्याजात्, அஹம்ப்ரத்யயவ்யாஜாத் 'அஹம்' என்ற அநுபவமூலமாக; सर्वे, ஸர்வே, ஸகலமான; जन्तवः, ஜந்தவ:, பிராணிகளும்; जानन्ति, ஜாநந்தி, அறிகிறார்கள்; तथापि, ததாபி, அப்படி அறிந்தாலும்; शिवरूपेण, ஶிவரூபேண, பரமேச்வரனுடைய மாயையால்; मोहिताः सन्तः, மோஹிதா: ஸந்த:, மோஹிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு; न विजानन्ति, ந விஜாநந்தி, விசதமாக அறிகிறார்கள் என்பது இல்லை.

அதாவது, உலகத்தில் ஒரு விருக்ஷமானது தான் மதுரமாக இருந்துகொண்டு ஸகலப்பிராணிகளுக்கும் வேம்பாகத் தோன்றிக்கொண்டிருக்கும்படி பிரம்மஸிருஷ்டியில் இவ்விதமான ஒரு ஆச்சரியம் ஏற்பட்டிருக்கு-

மே யாகில், அந்த விருக்ஷத்தை ஸகலரும் வேம்பாக அறிகிருர்கள். ஆனுலும், உண்மையான ஸ்வரூபத்தை அறியவில்லை என்று சொல்வதுபோல் இந்த ஆத்மவஸ்துவானது தான் அகர்த்தாவாய், அபோக்தாவாய் இருந்துகொண்டு வெளிக்கு கர்த்தாவாய், போக்தாவாய் அறியும்படி விளங்கிவருகிறது. ஸகலரும் 'அஹம்' என்ற அநுபவத்தால் தேகாதிகளைக்காட்டிலும் வேருகவே அனுபவித்துவருகிருர்கள். ஆனுலும், அகர்த்தா, அபோக்தாவாகிற வாஸ்தவத்தன்மையை அறிகிறதில்லை என்ற ஸ்மிருதியின் தாத்பரியப்படி ஸகலரும் 'அஹம்' என்ற அனுபவத்தால் ஆத்மவஸ்துவை அறிந்தவர்களாய் இருந்தாலும் அகர்த்தா, அபோக்தாவான ஆத்மாவினுடைய ஸ்வரூபத்தை அறியாதவர்களானபடியால் பேத்தர்களாகக் காணப்படுகிருர்கள். ஆத்மவஸ்துவின் அறிவுமாத்திரம் மோக்ஷத்திற்குக்காரணம் இல்லை. ஆத்மா, அகர்த்தா, அபோக்தா என்ற அறிவு தான் மோக்ஷத்திற்குக்காரணம். அவ்விதமான அறிவு ஏற்படுவது துர்லபம்.

आश्चर्यवत्पश्यति कश्चिदेनं आश्चर्यवद्वदति तथैव चान्यः ।
आश्चर्यवच्चैनमन्यः शृणोति श्रुत्वाप्येन वेद न चैव कश्चित् ॥

𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍇𑌨𑌂 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌦𑍍𑌵𑌦𑌤𑌿
𑌤𑌥𑍈𑌵 𑌚𑌾𑌨𑍍𑌯𑌃 ।
𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌚𑍍𑌚𑍈𑌨𑌮𑌨𑍍𑌯𑌃 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾-
𑌪𑍍𑌯𑍇𑌨𑌂 𑌵𑍇𑌦 𑌨 𑌚𑍈𑌵 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 ॥

आश्चर्यवत्, ஆஶ்சர்யவத், தான் அகர்த்தாவாயும், அபோக்தாவாயும், இருந்துகொண்டும் வெளியில் ஸகலராலும் 'அஹம்' என்ற அநுபவத்தால் கர்த்தாவாயும் போக்தாவாயும் அறிகப்படுகிறபடியால் பரம ஆச்சரியரூபமான; एनम्, ஏநம், இந்த ஆத்மாவை; कश्चित्, கஶ்சித், எவனாவது ஒருவன்தான்; पश्यति, பஶ்யதி, அறிகிறான்; तथा, ததா, அப்படியே எவனாவது ஒருவன்தான்; अन्यः सन्, அந்ய:, ஸந், ஶிஷ்யன் கேட்ட கேள்விக்கு ஸமாதானம் சொல்லக்கூடிய வல்லமையுள்ளவனைக் கொண்டு एनम्, ஏநம், இந்த ஆத்மவஸ்துவை; आश्चर्यवत्, ஆ-ஶ்சர்யவத், சப்தத்தால் சொல்லக்கூடாததான இந்த ஆத்மவஸ்துவைச் சொல்லுகிறபடியால் ஆச்சரியமாயிருக்கும்படி; वदति, வததி, உபதேசிக்கிறான்; अन्यः, அந்ய:, சகல சக்தியோடு கேட்குந்தன்மையுள்ளயாராவது ஒருவன்தான்; एनम्, ஏநம், இந்த ஆத்மவஸ்துவை; आश्चर्यवत्, ஆஶ்சர்யவத், ஸகல ஜனங்களுக்கும் ஆச்சரியமாயிருக்கும்படி; शृणोति, ஶ்ருணோதி கேட்கிறான்; श्रुत्वापि, ஶ்ருத்வாபி, கேட்டும்; एनम्, ஏநம், இந்த ஆத்மவஸ்துவை; कश्चित्, கஶ்சித், ஒருவனும்; नैव वेद, நைவ வேத, அறிபத்தான் இல்லை.

என்ற ஸ்மிருதியில் கூறியபடி ஆத்மாவினுடைய

யதார்த்தமான ஸ்வரூபத்தை அறிவது துர்லபமானப டியால் அகர்த்தாவாயும், அபோக்தாவாயும், ஆத்மஸ் வரூபத்தை அறிகிறவனே ரொம்பவும் துர்லபம் ; அறி ந்தாலும் அதை அன்னியர்களுக்கு உபதேசிக்கிறவன் துர்லபம் ; அதிலும் ஜனங்களுடைய மனதிற்குண் டான ஸகல சந்தேகமும் தெளிய உபதேசிக்கிறவன் மிகவும் துர்லபம் ; அதிலும் அதைக்கேட்கிறவன் மிக வும் அரிது ; அதிலும் அதைத்தெரிந்துகொண்டவன் மிகவும் அரிது, என்ற தாத்பரியத்தால் 'அஹம்' என்ற அநுபவத்தால் ஸகலரும் ஆத்மவஸ்துவை அறிந்தவர் களாயிருந்தாலும் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூப த்தை அறிந்தவர்களிருப்பது துர்லபம் அல்லவா? உண்மையான ஸ்வரூபத்தை அறிவதில் என்ன தடை யென்றால் சூரியனால் பிரகாசிப்பிக்கச்செய்யப்பட்டதா ன மேகங்கள் எவ்விதம் சூரியனையே மறைத்து ஜனங் களுக்கு சூரியனுடைய உண்மையை தெரிந்துகொள் ளாமலிருப்பதற்கு தடையாய் ஏற்படுகிறதோ அவ்வித மே மேகம்போல் ஜடமான இந்த பஞ்சகோசங்களும் ஆத்மாவினுடைய பிரகாசத்தால் பிரகாசித்து வருகிற துகளாய் இருந்தாலும் ஆத்மாவையே மறைத்து வரு கின்றது? ஆகையால், ஆத்மாவின் உண்மையை அறிவ பஞ்சகோசங்களாகிற ஆவரணமே தடை. அத்தடை யை நிவர்த்திக்க எப்பொழுதும் இடைவிடாமல் ஆத் மாவினுடைய ஸ்வரூபத்தின் உண்மையான தத்துவத் தின் பாவனையால் ஏற்படும் திவ்யஞானமேதான் உபா

யமாகும். ஆத்மாவின் உண்மையான தத்துவத்தை பாவிக்கும் முமுக்ஷுவான புருஷனானவன் அதற்கு உசிதமான லக்ஷணத்தோடு கூடினவனாய் இருக்கவேண்டும். அவ்வித லக்ஷணங்களாவன:—

मौनं योगासनं योगः तितीक्षैकान्तशीलता ।
निस्पृहत्वं समत्वं च सप्तैतान्येकदण्डिनः ॥ इति

மௌநம் யோகாஸநம் யோக꞉ திதிக்ஷைகா-
ந்தஶீலதா ।
நிஸ்ப்ருஹத்வம் ஸமத்வம் ச ஸப்தைதாந்யேகத-
ண்டிந꞉ । இதி

मौनम्, மௌநம், வாக்கு வியாபாரத்தை அடக்குவது; योगासनं, யோகாஸநம், யோகத்திற்கு அங்கமான ஆஸனமும்; योगः, யோக꞉, மனதை அடக்குவது; तितीक्षा, திதிக்ஷா, யார் எதைச்சொன்னாலும் சகிக்கும் சக்தி; एकान्तशीलता, ஏகாந்தஶீலதா, தனியாக வசிப்பதான ஸ்வபாவம்; निस्पृहत्वं, நிஸ்ப்ருஹத்வம், ஆசையில்லாததன்மை; समत्वं, ஸமத்வம், ஸமபாவனை.

அதாவது, இவ்விதமான முனிகளைப்போல் பிரபஞ்சவிஷயமான வாக் வியாபாரத்தை விட்டு ஆத்மாவினுடைய ஸ்வரூபத்தை மாத்திரம் நினைத்துக்கொண்டிருப்பதான மௌனம் என்ற லக்ஷணம் ஆத்மதத்துவஸ்வரூபத்தை பாவிப்பவனிடத்தில் அவசியமாய் இருக்க-

வேண்டும். அவன் ஆத்மதத்வஸ்வரூபத்தை பாவிக்கும் காலத்தில் யோக சாஸ்திரத்தில் கூறிய ஒன்பது விதமான ஆஸனங்களுக்குள் ஏதாவது ஒரு ஆஸனத்தில், உட்கார்ந்தவனாக இருக்கவேண்டும். அதிலும் வீராஸனம், பத்மாஸனம், முக்கியமான ஆஸனங்கள். இடதுகாலை கிழே வைத்துக்கொண்டு வலதுகாலை அதின் மேல் போட்டுக்கொள்வதே வீராஸனமாகும். இடது பாதத்தை வலது தொடையில் படும்படியாயும், வலது பாதம் இடது தொடையில் படும்படி உட்கார்ந்திருப்பதே பத்மாஸனமாகும். இவ்விதமான இரண்டாஸனங்கள், ஜபம், ஈசுவராராதனம், முதலிய சத்கர்மாக்களில் ஆவசியகம். இந்த இரண்டுவிதமான ஆஸனங்களில் எது சுகமோ அதில் இருக்கிறவனாய்க்கொண்டு ஆத்மதத்வத்தை பாவிக்கவேண்டும். அதோடுங்கூட பூரகம், கும்பகம், ரேசகம் என்ற மூன்று விதமான ஸாதனங்களால் பிராணனைஜெயித்து அந்தப்பிராணனுடைய ஜயமூலம் ஆங்காங்கு பிரசுரிக்கிற மனதை ஒரு விதமான ஸ்வரூபத்தில் நிலை நிறுத்துவதான தன்மையையும் மேற்கண்ட அதிகாரிக்கு அவசியம் வேண்டும். அதாவது, பூரகம் என்றால், வெளியிலுள்ள வாயுவை சந்திரநாடி (இடநாடி) வழியாக இடது மூக்குதுவாரத்தால் உள்ளே இழுத்து அடக்குவதே. கும்பகம் என்றால் உள்ளே அடக்கின வாயுவை பிரம்ம நாடியாகிற சுஷும்னா நாடியில் அடக்கி ஸ்தம்பனம் செய்து மனதை ஏதாவது ஒரு ஸ்வ

ரூபத்தில் நிலைநிறுத்துவதே. அவ்விதம் சற்று அனுபவித்து, அதாவது தன்னால் எவ்வளவு காலம் அவ்விதம் சுஷும்னா நாடியில் ஸ்தம்பனம் பண்ணமுடியுமோ அவ்வளவு காலம் அப்பலித்து மறுபடி அந்த வாயுவை சூரிய நாடியான பிங்களா நாடியென்ற வலது நாடி வழியாக அந்த வாயுவை வலது மூக்கு துவாரம் வழியாய் வெளியில் விடுவது ரேசகம். இவ்விதமாய் பிராணனுடைய நிரோத மூலமாக, மனோ நிரோதம் செய்வதும் ஆவசியகம். அத்துடன் திதிக்ஷை என்ற குணத்தையும் கைக்கொள்ளவேண்டும். அதாவது, மனதிற்கு விகாரம் உண்டாகும்படியான ஜனங்களின் பிரியமான சேஷ்டையோ, அப்பிரியமான சேஷ்டையோ இவைகள் ஏற்படும் காலத்தில் பிரியமான சேஷ்டையால் சந்தோஷம் என்ற விகாரம் உண்டாவதில் மனதிற்கிடங்கொடுக்காமலும் அப்பிரியமான சேஷ்டையால் துக்கம் என்ற விகாரத்திற்கு இடங்கொடுக்காமலும் ஒரே விதமாய் மனதை வைத்துக்கொள்வதான சகன சக்தியே ஆகும். தவிர, துர்ஜனங்களுடைய ஸமாஜத்தில் வசிக்காமல் ஏகாந்தமான ஸ்தலத்தில் எப்பொழுதும் வசிப்பதென்பதையும் அவசியம் அப்யஸிக்கவேண்டும். தவிர பிராணிகளை அநேகப்பிரகாரமாய் பாப கர்மாவில் பிரவிர்த்திக்கும்படி செய்வதற்கு காரணமான அநேக விதமான கெட்ட குணங்களில் ஆசையென்பது முக்கியமானதல்லவா? மகாபண்டிதர்களைக்

கூட ஆசையென்பது தன் வசப்படுத்திக்கொண்டு அவர்களின் விவேகத்தை மறைத்து அவர்களை அக்காரியத்தில் பிரவிர்த்திக்கச்செய்யும் என்பது பிரஸித்தம். சாஸ்திரத்திலும,

क्षुत्पिपासे कुटिम्बिन्यौ मयि जीवति नान्यगे ।
ताभ्यां आशा तृतीया च तस्याः शृङ्गारचेष्टितम् ॥

க்ஷுத்பிபாஸே குடும்பிந்யௌ மயி ஜீவதி நா-
ந்யகே ।
தாப்யாம் ஆசா த்ருதீயா ச தஸ்யா: ச்ருங்கா-
ரசேஷ்டிதம் ॥

कुटिम्बिन्यौ, குடும்பிந்யௌ, பத்னிகளான; क्षुत्पिपासे, க்ஷுத்பிபாஸே, பசி தாகம் ஆகிய இவ்விரண்டுகளும்; मयि, மயி, நான்; जीवति सति, ஜீவதி ஸதி, ஜீவிக்கும் பொழுது, अन्यगे, அந்யகே, அன்னியர்களை அடைந்தவர்களாக; न, ந, இல்லை; ताभ्यां, தாப்யாம், அவ்விருவர்களைக்காட்டிலும் வேறான; आशा च, ஆசா ச, ஆசையென்பவளும்; तृतीया, த்ருதீயா, மூன்றுவது பார்யை; तस्याः, தஸ்யா:, அவளுடைய; शृङ्गारचेष्टितम्, ச்ருங்காரசேஷ்டிதம், சிருங்கார லீலை.

நேபாளதேசத்தில் சர்வ சாஸ்திரத்திலும் பாண்டித்தியமுள்ளவனான, அதிலும் வேதாந்த சாஸ்திரத்தில் மகாபண்டிதனான, வித்தியாநிதி என்ற ஒரு பிராம்மண

ணன் இருந்து வந்தான். அவன் அந்த தேசத்தரசனுக்கு மிகவும் பிரியமுள்ளவன். அந்தப்பிராஹ்மணன் சொல்லுகிறபடிதான் ராஜனும் ஸகல காரியங்களையும் செய்கிறது வழக்கம். இவ்விதமிருக்க, ஒரு தினத்தில் அந்த தேசத்தரசனுக்கு ஜன்ம நக்ஷத்திர மஹோத்ஸவம் நடைபெற்றது. அந்த உத்ஸவதினத்தில் ஸகல ஜனங்களுக்கும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சாவரன் வீதம் கொடுத்து ஸகல ஜனங்களையும் திருப்தி செய்துவைக்கும்படி கட்டளையிட்டான். அவ்விதமே கீழதிகாரிகளும் ராஜனுடைய கட்டளையை அனுஸரித்து ஸகல ஜனங்களையும் கோட்டைக்குள்ளடைத்து, நான்கு வாசல்கள் வழியாகவும், ஜனங்களுக்கு ஒவ்வொரு சாவரன் வீதம் கொடுத்து அவர்களை வெளியில் விட்டார்கள். அதில் ராஜனுக்கும் மிகவும் பிரீதியுள்ளவனாகவும் மகாவித்வானாயுமிருக்கிற வித்யாநிதி என்ற பிராஹ்மணனும் ஒரு கோட்டை வாசல் வழியாக ஒரு சாவரன் பூரி தக்ஷிணையை தன் கையில் வாங்கிக்கொண்டு வெளியில் வந்தான். வந்தவுடன் தன் கையைத்திறந்து பார்க்க சாவரன் என்றதைப்பார்த்து மிகவும் சந்தோஷத்தை அடைந்ததோடுங்கூட எவ்விதத்திலும் இந்த கோட்டைக்குள் இன்னும் ஒரு தடவை பிரவேசித்துவிட்டால் இரண்டாந்தடவையும் ஒரு சாவரன் வாங்கலாமென்ற கெட்ட எண்ணம் அவருக்கு உதித்தது. உடனே, உள்ளே நுழைய ஆங்காங்கு சுற்றி ஜனங்களறியாமலிருக்கும்படி இடத்தை

யும் காலத்தையும் விசாரித்து வரும் சமயத்தில் கோட்டையின் ஒரு மூலையில் ஜனங்கள் இல்லாமலும் லகுவாய் ஏறி உள்ளே குதிக்கும்படியான வழியாகவும் காணப்பட்டது. அவ்விதமான வழியாய் உள்ளே குதிக்கும் சமயத்தில் அக்கோட்டைச்சுவரின்மேல் பதித்திருந்த பீங்கான்களால் சரீரமுழுமையும் காயப்படுத்தப்பட்டவனுய்க்கொண்டு இரத்த பிரவாஹத்துடன் மிகவும் சிரமத்தோடு உள்ளே குதித்தான். உடனே, தன் கையிலிருந்த சிவப்பு சாதராவினுல் அந்த ரத்தத்தை துடைத்து மூடிக்கொண்டு முன் எந்த வாசல் வழியாக ஒரு சாவரனே வாங்கிக்கொண்டு வெளியில் சென்றுனே அவ்வாசலின் வழியே பூர்வகர்மவசத்தால் மறுபடியும் சென்றுன். அவ்வாசலில் ஒவ்வொரு ஜனத்திற்கும் ஒவ்வொரு சாவரன் தக்ஷிணையைக்கொடுத்து வரும் உத்தியோகஸ்தனுக்கும் இந்த வித்வான் மிகவும் தெரிந்தவன். அவ்விதமிருக்க அந்த வாசலின் வழியே இரண்டாந்தடவையும் பூரிதக்ஷிணை வாங்கச்சென்றபொழுது, அந்த உத்தியோகஸ்தன் இந்த வித்வானைப்பார்த்துக் கூறியதாவது: ஹே, பண்டித சிரேஷ்டனே! தங்களுக்கு ஸகல சாஸ்திரத்திலும் மேன்மையான பாண்டித்யம் உண்டல்லவா? அதிலும் வேதாந்த சாஸ்திரத்தில் தங்களுக்குச்சமானமான வேறொரு பண்டிதன் உலகத்திலுண்டோ? அந்த வேதாந்த சாஸ்திரத்தில் தங்கத்தையும், வாசலில் கிடக்கும் மண்ணுங்கட்டிகளையும் சமானமாய் நினைத்து வைராக்கியத்தையடைய

வேண்டுமென்றல்லவா கூறப்படுகிறது! ஆனால் தாங்கள் படித்த வேதாந்த சாஸ்திரத்தில் ஒரு தடவை பூரிதக்ஷிணை வாங்கினால் போதாது இரண்டாந்தடவையும் எவ்வித உபாயத்தினாலேயாவது ஆங்காங்கு நின்றுகொண்டிருக்கும் காவற்காரர்களையும் வஞ்சித்துவிட்டு பூரிதக்ஷிணை வாங்கவேண்டியது ஆவசியகமென்று கூறப்பட்டிருக்கிறதோ? இதுவென்ன அக்கிரமம். படித்தவர்களே இவ்விதம் செய்தால் படிக்காதவர்கள் எவ்விதமான அக்கிரமத்தைத்தான் செய்யமாட்டார்கள்? என்று மிகவும் வருத்தத்துடன் அந்தப்பண்டிதனைப் பார்த்து அந்த உத்தியோகஸ்தன் கூறினவுடன் அந்தப் பண்டிதனுக்கு உடனே பரமவைராக்கியம் உண்டாய் மனோவருத்தத்துடன் சொல்லுவதாவது: ஹே! சுவாமின்! என் பிதா என்னை கர்ப்பாதானம்செய்த காலத்திலேயே எனக்கு பசி, தாகம், என்று இரண்டு ஸ்திரீகளையும் விவாஹம் செய்துவைத்தார். அவ்விருவரும் நான் உயிரோடிருக்கும் பரியந்தம் கனவில்கூட இன்னொரு புருடனை மனதில் நினைக்காமல் மஹாபதிவிரதைகளாக இருக்கிறவர்கள். தற்காலத்தில் அவ்விருவர்களும் கிழத்தனத்தை அடைந்தமையால் அவ்விருவர்களைக்காட்டிலும் வேறான ஆசையென்ற ஒரு ஸ்திரீயை விவாஹம் செய்துகொண்டேன். அந்த ஆசையென்ற ஸ்திரீ எனக்கு மிகவும் பிரியமுள்ளவளாகையால் நானிருக்குமிடத்திலேயே எப்பொழுதுமிருக்க உத்ஸாகமுள்ளவள். ஆகையால்தான் இப்பொழு

தும் நான் பூரிதக்ஷிணை வாங்கும் சமயத்திலும் பின் தொடர்ந்து வந்திருக்கிறுள். இவ்விதஸமாஜத்திலும் என்னை அந்த ஆசையென்ற மூன்ருவது ஸ்திரீ க்ரீடிக்க வரவேண்டுமென்று நிர்ப்பந்தம், செய்து ரக்த சந்தத்தை மாரிலும் பூசி என்னை ஹிம்ஸித்து வருகிறுள். பிரபுக்கள் நன்ருய்ப்பார்க்கலாம் என்று தன் சாதராவைத்திறந்து காட்டினுன். உடனே அந்த வித்வானுக்கும் பரம வைராக்கியம் உண்டாய் ஆசையாலல்லவா நாம் கெட்டோம்! ஆசைக்கு நாம் இடங்கொடுக்கக்கூடாதென்று தீர்மானித்து, அந்த நிமிஷத்திலேயே ஆசையை விட்டொழித்து, சந்நியாசாச்ரமத்தைபடைந்து பரபிரஹ்மத்தினிடத்தில் நிஷ்டையைச்செய்து கொண்டு ஸமாதியில் இருப்பவனுக ஆகிவிட்டான். ஆகையால் ஆசையென்றவளுக்கு இடங்கொடுக்கப்பட்டவனுக்கு கொஞ்சமேனும் ஸுகமில்லாததோடுங்கூட அந்தந்த இடத்தில் அவமானத்தையும் அடைவான் என்பது நிச்சயம் என்ற தாத்பரியத்தைக்கவனிக்க, ஆசையென்ற துர்க்குணத்திற்கு பாத்திரனுய் இருக்கக்கூடிய மனிதன் ஒருவிதமான நிலையுமில்லாமல் பாபத்தையே சம்பாதித்தவனுக ஆகுவன் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இவ்வித ஆசையால் உண்டாகும் தீமையை ஆலோசிக்க, பிரஹ்ம பாவனையையடைய வேண்டுமென்று எண்ணமுள்ள முமுக்ஷுவானவன் ஆசையை விட்டு நிஸ்பிருகன் (ஆசையற்றவன்) என்ற பிரஸித்தியை படைவது ஆவச்யகம். அத்துடன் பிராஹ்ம

ணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்று சரீரத்தால் வித்யாஸம் தோன்றுவதாயிருந்தாலும் அவ்விதம் ஸகல தேகங்களிலும் அந்தர்யாமியான ஆத்மசைதன்யம் ஏகரூபமாகவேதான் இருக்கிறதென்றபாவனையினுடைய உத்கர்ஷத்தால் அவ்விதமே அநுபவத்திலும் அடையவேண்டும். ஆனால் அநுபவம் இரண்டுவிதம். பாவனானுபவம் கார்யானுபவம் என்பன. அவற்றில் பாவனையால் வஸ்து ஒன்று என்றவனுபவம் சாஸ்திரசித்தமேயொழிய கிரியையால் வஸ்து ஒன்று என்றவனுபவம் சாஸ்திரசித்தமல்ல. கிரியையினால் வர்ணாச்ரம பேதங்களை அநுஷ்டித்துத்தான் தீரவேண்டும். கிரியையாலும் பேதத்தை இழந்தவனாய் இருந்ததால் அவ்விதமான ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பேதம் ஏற்படாது. ஆகையால், கிரியையில் பேதத்தைத்தான் அநுஷ்டானம் செய்யவேண்டும். பாவனையில் அத்வைதானுபவமும், சமபாவனையும், அடையவேண்டுவது ஆவசியகம். இவ்விதமான மௌனம், யோகாஸனம், யோகம், திதீக்ஷா, ஏகாந்தசீலதா, நிஸ்பிருகத்துவம், ஸமத்துவம் என்ற ஏழுவித குணங்களுடைய ஸகாயத்தால் எப்பொழுதும் இடைவிடாமல் அகர்த்தாவாயும் அபோக்தாவாயும், நித்தியனாயும், சுத்தனாயும், புத்தனாயும், முக்தனாயும், சிதேகரஸனாயும், விளங்கிவரும் ஆத்மாவைக்காட்டிலும் வேறில்லாததான பிரஹ்மஸ்வரூபத்தினிடத்தில் மனதை லயப்படுத்தி,

ब्रह्माकारमनोवृत्तिप्रवाहः अहंकृतिं विना ।
संप्रज्ञातः समाधिः स्यात् ध्यानाभ्यासप्रकर्षतः ॥

ப்ரஹ்மாகாரமநோவ்ருத்திப்ரவாஹ: அஹங்க்ருதிம் விநா ।
ஸம்ப்ரஜ்ஞாத: ஸமாதி: ஸ்யாத் த்யாநாப்யாஸப்ரகர்ஷத: ॥

अहंकृतिं विना, அஹங்க்ருதிம் விநா, நானென்ற பாவத்தை மறந்து ; ब्रह्माकारमनोवृत्तिप्रवाहः, ப்ரஹ்மாகாரமநோவ்ருத்திப்ரவாஹ:, இடைவிடாமல் பிரஹ்மமாகவே மனதின் பரிணாமத்தின் பிரவாஹம் ; संप्रज्ञातः समाधिः, ஸம்ப்ரஜ்ஞாத: ஸமாதி:, சம்பிரக்ஞாதஸமாதியாக ; ध्यानाभ्यासप्रकर्षतः, த்யாநாப்யாஸப்ரகர்ஷத:, தியானம், அப்பியாஸம், இதினுடைய ஆதிக்யத்தால் ; स्यात्, ஸ்யாத், உண்டாகிறது.

என்ற பிரகாரம் பிரம்மரூபமாகவே இடைவிடாமல் மனதை பரிணமிக்கும்படி செய்யக்கூடிய சம்பிரக்ஞாதசமாதியில் அதிகாரத்தையடைந்தவனாக ஆகிவிடுவான். இவ்விதமான சமாதியில் எப்பொழுது ஸ்திரமான நிலை ஏற்படுகிறதோ அப்பொழுது அளவற்ற தான ஸ்வரூபானந்தத்தையடைந்தவனாக ஆய்விடுகிறான். அதாவது, நித்ய, நிரதிசய, ஆனந்தகரமான பிரஹ்மவடிவாகவேதான் ஆகிறானே தவிர, வேறு

விதமான ஜாதி, குலம், ஆச்ரமம் என்ற வித்தியாஸத்தையுடையவனாக ஆகமாட்டானென்பது (ब्रह्मवित् ब्रह्मैव भवति, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿, ब्रह्मवित्, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍, பிரஹ்மதத்துவத்தை யறிந்தவன்; ब्रह्मैव, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵, பிரஹ்மமாகவே; भवति, 𑌭𑌵𑌤𑌿, ஆகிறான்.) இந்த சுருதியால் ஸித்தமல்லவா? ஆகையால் இவ்விதமான சிரேஷ்டமான அனுபவத்தையுடையவன் ஜாதிவர்ணாச்ரமத்தினின்றும் வேறுபட்டவனானபடியினாலும், பிரஹ்மரூபமானபடியினாலும் அவன் எவனாயிருந்தாலும் அவன் லோககுருவென்பது என் ஸித்தாந்தம்.

இவ்வுலகில் அறிதான மானிட ஜன்மாவையடைந்ததற்கு வேதாந்த சித்தாந்தமான ஜீவபிரஹ்மைக்கிய அனுபவத்தையடையவேண்டியது ஆவசியகம் என்றாலும் இப்பிரபஞ்சத்தில் புத்திரன், பணம், ஸ்திரீ இம்மூன்றுகளால் ஏற்படும் சுகானுபவத்தைவிட்டு பிரஹ்மானந்தத்தையடைவதில் என்ன பிரயோஜனம்? இவ்வுலகத்திலோ, மற்ற சுவர்க்காதிலோகங்களிலோ, ஏற்படும் திவ்யசுகம் போலொத்த சுகம் அவ்வனுபவத்தில் ஏற்படக்கூடுமா? என்பதான ஆக்ஷேபணைக்கு சமானதாமாவது: இந்த சம்ஸாரமண்டலத்தில் இந்தலோகமோ மற்றலோகமோ ஒரு இடத்திலும் சுகமென்பதே சற்றேனுமில்லை. ஸகலமும் துக்கரூபம்தான். சுகம்போல் தோன்றினாலும், எந்த

பதார்த்தம் சுகமென்று தோன்றுகிறதோ அந்த பதார்த்தம் ஸ்வயமாகவே சுகரூபமல்ல. சுகரூபமாகிற பிரஹ்மத்தினிடத்தில் கல்பிக்கப்பட்டபடியால், ஸ்வயமாக துக்கரூபமாயிருந்தாலும் சுகரூபமான அதிஷ்டானத்தினுடைய ஆச்ரயத்தால், தானும் சுகம்போல் தோன்றுகிறதேதவிர, வாஸ்தவமாய் விசாரிக்க சுகரூபமல்ல. இந்த லோகத்தில் ஸகலப்பிராணிகளுக்கும் பூஜ்யாளான இந்திராதிகளான தேவசிரேஷ்டர்களே பிரஹ்மரூபமான ஆனந்தத்தினுடைய திவலையினுடைய திவலையைத்தான் அடைந்திருக்கிறபடியால் தாங்களும் சுகரூபிகள் என்பதாக அகங்காரத்தையடைந்து வருகிறார்கள். அவர்களுடைய ஸ்வரூபத்தையே உண்மையில் விசாரிக்க, துக்கவடிவாகவே ஆகிறார்கள். அவ்விதமிருக்க, இந்த பூலோகத்தில் அடிக்கடி ஜனனமரணத்தோடு கூடினவர்களான பிராணிகளுக்கு சுகம் என்ற லேசத்திற்கே அவகாசமில்லையல்லவா? ஆகையால், புத்திரன், ஸ்திரீ, பணம், இம்மூன்றுகளால் உண்டாகும் சுகம் போலொத்த சுகம் பிரஹ்மானுபவத்தில் உண்டாகுமோவென்று கேட்கவும் இந்த ஜீவகோடிகளுக்கு மனம் துணியுமா? 'சுகம்' என்ற பதார்த்தமே வேதாந்த சித்தமான பிரஹ்மம் ஒன்றேதான். அதனிடத்தில் ஸகல ஜகத்தும் கற்பிதமானபடியால், கற்பிக்கப்பட்ட இந்த ஜகத்தில் அதிஷ்டானமாகிற தான் தொடர்ச்சியாய் பிரகாசித்து வருகிறபடியால் அந்த அதிஷ்டானமாகிற சுகரூப பிரம்மத்தின்

சம்பந்தத்தால் மிகவும் துக்கரூபமான இப்பிரபஞ்சம் சுகம்போல் தோன்றுகிறது. வாஸ்தவமாய் இப்பிரபஞ்சம் துக்கமே. இவ்விதமான தாத்பரியங்கள் அடங்கிய அடியில் வருமாறு ஒரு சுலோகத்தை ஸ்வானுபவத்தால் ஸ்ரீ சங்கர குருவானவர் வெளியிட்டிருக்கிறார்:

यत्सौख्याम्बुधिलेशलेशत इमे शक्रादयो निर्वृताः
यच्चित्ते नितरां प्रशान्तकलने लब्ध्वा मुनिर्निर्वृतः ।
यस्मिन्नित्यसुखाम्बुधौ गलितधीर्ब्रह्मैव न ब्रह्मवित्
यः कश्चित्स सुरेन्द्रवान्दितपदो नूनं मनीषा मम ॥

𑌯𑌤𑍍𑌸𑍌𑌖𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌲𑍇𑌶𑌲𑍇𑌶𑌤 𑌇𑌮𑍇 𑌶𑌕𑍍𑌰𑌾
𑌦𑌯𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌾-
𑌯𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌕𑌲𑌨𑍇 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿-
𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌃 ।
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍁𑌖𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑍌 𑌗𑌲𑌿𑌤𑌧𑍀𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈-
𑌵 𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍
𑌯𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌸 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑌪𑌦𑍋 𑌨𑍂𑌨𑌂
𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥

यत्सौख्याम्बुधिलेशलेशतः, 𑌯𑌤𑍍𑌸𑍌𑌖𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌲𑍇𑌶𑌲𑍇𑌶𑌤𑌃, யாதொரு பிரம்மரூபமான ஆனந்தக்கடலினுடைய திவலையின் திவலையால்; इमे, 𑌇𑌮𑍇, இந்த शक्रादयः, 𑌶𑌕𑍍𑌰𑌾𑌦𑌯𑌃, இந்திராதிகளான தேவர்களும்;

निर्वृताः, நிர்வ்ருʼதா:, சுகத்தோடு கூடினவர்களென்று அகங்காரத்தையடைந்து வருகிறார்களோ ; यत्, யத், யாதொரு பிரம்மத்தை ; नितरां நிதராம், மிகவும் ; प्रशान्तकलने, ப்ரசாந்தகலநே, ஒழிவடைந்ததான ராகத்வேஷாதிகளோடு கூடின ; चित्ते, சித்தே, மனதில் लब्ध्वा, லப்த்வா, அறிந்து ; मुनिः, முநி:, மகரிஷியானவர் ; निर्वृतः, நிர்வ்ருʼத:, சுகத்தையடைந்தவராக ஆகிறாரோ ; यस्मिन्, யஸ்மிந், யாதொரு ; नित्यसुखाम्बुधौ, நித்யஸுகாம்புதௌ, அழிவற்ற பிரம்மானந்தக் கடலில் ; यः कश्चित्, ய: கஸ்சித், யாதொருவன் ; गलितधीः, களிததீ:, முழுகினதான மனதோடு கூடினவனாக ஆகிறானோ ; सः, ஸ:, அவன் ; सुरेन्द्रवन्दितपदस्सन् ஸுரேந்த்ரவந்திதபதஸ்ஸந், தேவேந்திரன் முதலான தேவசிரேஷ்டர்களால்கூட நமஸ்கரிக்கப்பட்ட பாதாரவிந்தத்தோடு கூடினவனாய்க்கொண்டு; ब्रह्मैव, ப்ரஹ்மைவ, பிரம்மமாகவே ; भवति, பவதி, ஆகிறான் ; ब्रह्मवित्, ப்ரஹ்மவித், பிரம்மத்தையறிந்தவனாக ; न, ந, இல்லை ; सः, ஸ:, அவன் ; गुरुः, குரு:, லோககுரு ; इति, இதி, என்று ; मम, மம, என்னுடைய ; मनीषा, மநீஷா, ஸித்தாந்தம் ; नूनम्, நூநம், நிச்சயம்.

தாத்பரியம்: இப்பிரபஞ்சத்தில் சுகத்தின் தாரதம்மியத்தை விசாரிப்பதற்கோ, துக்கத்தின் தாரதம்மியத்

ஷை விசாரிப்பதற்கோ, இந்த மனுஷ ஜன்மாத்தான் எல்லே. மனுஷியஜன்மாமுதல் ஹிரண்ணியகர்ப்பன் வரையில் சுகத்தின் தாரதம்மியம். அவ்விதமே, மனுஷியஜன்மாமுதல் ஸ்தம்பமென்ற (அதாவது) சிற்றெறும்பு பரியந்தம் துக்கத்தின் தாரதம்மியம். மானிடஜன்மாவில் சுகத்தோடு கூடினவனென்று எவனேச்சொல்லலாம் என்றால் அடியிற்கண்டவாறு மகிமைகளேயடைந்தவனேத்தான் சுகத்தையடைந்தவனென்று சொல்லவேண்டும். அதாவது, வயது பதினெட்டுக்குமேல் முப்பதுக்குள் அடங்கின வயது, அதிலும் அழகான சரீரம், அதிலும் சகலவேதங்களேயும் சாஸ்திரங்களேயும் தான் நன்றாய்ப்படித்து அவைகளே அந்நியர்களுக்கு போதிக்க வல்லமையான அறிவு, அதிலும் ஸகல ஜனங்களேயும் நியமனம் செய்யும்படியான சக்தி, போகத்தையனுபவிக்கக்கூடிய சக்தி மனோதைரியம், தேஹபலம், ஸகல பூமண்டலமும் தன் வசத்திலிருப்பது, இவ்விதமான பெருமைகள் எல்லாம் ஒன்றுகூடக்குறையாமல் ஒரு புருஷனுக்கு இருந்ததேயாகில், அவன் தான் சுகத்தோடு கூடினவனென்று சொல்லத்தகுந்தவன். அவ்விதமான ஆனந்தத்தைத் தான் மானுஷ ஆனந்தமென்று சொல்லப்படும். இவ்விதமான ஆனந்தத்தில் நூறுமடங்கு சேர்ந்தது மனுஷியகந்தர்வர்களுடைய ஆனந்தம். அதாவது பூலோகத்திற்கு மேலான லோகம் கந்தர்வலோகமென்ற ஒரு லோகம். அந்த லோகத்தில் மனுஷியகந்தர்வர்களென்றும் தேவ

கந்தர்வர்களென்றும் இரண்டு பிரிவு. மனுஷியகந்தர்வர்களென்றால் பூலோகத்தில் மனுஷியர்களாகப்பிறந்திருந்து வைதீகமான கர்மாவையும் பகவதாராதனத்தையும் செய்துவந்த இரண்டுவிதமான புண்ணியத்தால் இந்த மனுஷிய சரீரம் போனபிற்பாடு தேவசரீரத்துடன் மேற்கண்ட கந்தர்வலோகத்தில் போய் வசிப்பவர்களே மனுஷியகந்தர்வர்களென்று சொல்லப்படும். தேவகந்தர்வர்கள் என்றால் இரண்யகர்ப்பனால் சிருஷ்டியினுடைய ஆதியிலேயே தேவர்களாகவே சிருஷ்டிக்கப்பட்டு கந்தர்வலோகத்தில் இருந்துவருகிறவர்கள். இந்த மனுஷ்யகந்தர்வர்கள், தேவகந்தர்வர்கள் இவர்களில், தேவகந்தர்வர்கள் மனுஷியகந்தர்வர்களைக்காட்டிலும் நூறுமடங்கு பேலானவர்கள். மனுஷியகந்தர்வர்கள் இந்த பூலோகத்திலுள்ள மனுஷியர்களைக் காட்டிலும் மேலானவர்கள். ஆகையால், இந்த பூலோகத்தில் மேற்கண்ட மகிமைகளோடு கூடினவன் எவனோ அவனுடைய ஆனந்தம் மானுஷானந்தம் என்றும், அதில் நூறு பங்கு சேர்ந்த ஆனந்தம் மனுஷிய கந்தர்வர்களுக்கென்றும் கூறப்படும். இந்த மனுஷிய கந்தர்வர்களுக்கு எவ்விதமாக ஆனந்தம் கூறப்படுகிறதோ அவ்விதமான ஆனந்தத்தில் நூறுபங்கு சேர்ந்தது தேவகந்தர்வர்களின் ஆனந்தம். தேவகந்தர்வர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தில் நூறுபங்கு சேர்ந்தது பிதிருக்களுக்கு. அதாவது, பூலோகத்திற்கு அப்பால் கந்தர்வலோகம். அதற்கு மேல்லோகம் பிதிருலோ

கமென்று சொல்லப்படும். அந்த லோகத்தில் வஸு, ருத்திரன், ஆதித்தன், என்று மூன்றுபேர்கள் சிருஷ்டியினுடைய ஆதிகாலத்திலேயே ஹிரண்யகர்ப்பனால் மனதால் சிருஷ்டிக்கப்பட்டு மேற்சொன்ன பிதிருலோகத்தில் விளங்கிவருகிறவர்கள். அவர்களுடைய உத்தியோகமாவது, இந்த லோகத்தில் எவ்விதம் ஒரு தேசத்திலுள்ள மனிதனுடைய விருத்தாந்தங்களை மற்றொரு தேசத்திலுள்ள மனிதன் அறியக்கூடியதற்கு உபகாரமாயும் ஒரு தேசத்திலுள்ள மனிதனும் மற்றொரு தேசத்திலுள்ள மனிதனும் ஒருவனுக்கொருவன் தனக்குப்பிரியமான வஸ்துக்களை அனுப்புவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் உபகாரமாயிருக்கும்படி போஸ்டாபீசு என்றதாக ஒரு ஆபீசு ஏற்பட்டிருக்கிறதோ அவ்விதமே ஒரு லோகத்திலுள்ள மனிதனுக்கும் மற்றொரு லோகத்திலுள்ள மனிதனுக்கும் ஒருவனுக்கொருவன் தன் தன் விருத்தாந்தத்தை தெரிவித்துக்கொள்ளும்படிக்கும் பிரியமான வஸ்துக்களை அனுப்புவதற்கும் வாங்குவதற்கும் உபகாரமாயிருக்கும்படி ஏற்பட்டதான ஓர் ஸ்தானம் பிதிருலோகம் என்பது. அந்த லோகத்திற்கு அதிபதிகள் வஸு, ருத்திரன், ஆதித்தன் என்ற மூன்று நித்திய பிதுருக்கள். அவர்கள் மூன்றுகாலத்திலுமுள்ள ஸகல விஷயத்தையும் அறிந்து அனுபவிக்கும்படியான ஸர்வக்ஞசக்தியுடையவர்கள். பூலோகத்தில் ஒரு மனிதன் தன் தகப்பன் மறித்த பிற்பாடு அந்த தகப்பனானவன் புண்ணியலோ

கத்திலேயோ, பாபலோகத்திலேயோ, எந்த இடத்தில் இருக்கிறான் என்பதை இவனுக்குத் தெரிந்துகொள்ள சக்தியில்லாதபடியால், தான் தன் தகப்பனை உத்தே சித்துக்கொடுத்துவரும் அன்னம், தக்ஷணை இவை களை வஸு, ருத்திரன், ஆதித்தனுகிய இம்மூவர்கள் மூலமாய்க்கொடுத்து வருகிறான். இந்த பூலோகத்தி லுள்ள மனிதனுடைய தகப்பன் மறித்த பிற்பாடு புண்ணியலோகத்திலோ பாபலோகத்திலோ எந்த லோகத்தில் இருந்துவருகிறானோ அந்த லோகத்தை யும், அந்த இடத்தையும் தெரிந்துகொள்ள இம்மூன்று பிதிருக்களுக்கும் சக்தி உண்டு. அதாவது, ஒரு மனி தன் ஒரு கிராமாந்தரத்திலுள்ள தன் சிநேகிதனுக்கு தன் விருத்தாந்தத்தை தெரிவிக்க ஒரு பத்திரிகை எழுதினால் அந்த கிராமாந்திரம் எந்த போஸ்டாபீ சில் சேர்ந்தது என்று தான் தெரிந்துகொள்ள முடி யாமல், போஸ்டாபீசில் அந்த பத்திரிகையைக்கொ டுக்க அந்த போஸ்டாபீசில் உள்ளவர்கள் இன்னி ன்ன ஜில்லாவில் இவ்வளவு போஸ்டாபீசுகள் (ஹெட் ஆபீசு, சப்ஆபீசு, பிராஞ்சாபீசுகள் என்றும்) இன்னின்ன பிராஞ்சாபீசுகளில் இன்னின்ன கிராம ங்கள் என்றும் விசிதமாய் விளக்கக்கூடிய போஸ் டாபீசிலுள்ள புஸ்தகத்தைப் பார்த்து இந்த மனிதனு டைய பத்திரிகை எந்த போஸ்டாபீசைச்சேர்ந்ததோ அந்த போஸ்டாபீசைக்கண்டுபிடித்து எவ்விதம் அனு ப்பிவிடுகிறார்களோ அவ்விதமே மறித்த தன் பிதா

எந்த இடத்தில் இருக்கிறார், என்ன ஜாதியில் பிறந்திருக்கிறார், என்ன ஸ்திதியில் இருந்து வருகிறார், என்ற விஷயத்தை பூலோகத்திலுள்ள மனிதனால் தெரிந்து கொள்ள முடியாததுபோனாலுங்கூட, இந்த பிதிருலோகத்திற்கதிபதியான மேற்சொன்ன மூன்று பிதிருக்களும் இந்த ஸகல விஷயங்களையும் வேத ரஹஸ்யத்தை நோக்கி எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள ஸர்வக்ஞசக்தியுடையவர்கள். ஆகையால்தான், வஸு, ருத்திரன், ஆதித்தன் என்ற மூன்று பிதிருக்கள் மூலமாக தன் பிதாவை உத்தேசித்து அன்னம், தக்ஷிணை முதலானவைகளை பிதா மறித்த தினத்தில் ஸகலரும் கொடுத்து வருகிறார்கள். இவ்விதமான பெரிதான உபகாரத்திற்காக ஏற்பட்ட லோகம் இந்த பிதிருலோகம் என்பது. இந்த பிதிருலோகத்திலுள்ள நித்தியபிதிருக்களுக்கு ஏற்பட்ட ஆனந்தம் தேவகந்தர்வர்களுடைய ஆனந்தத்தைப்போல் நூறுமடங்கு சேர்ந்துள்ளது. பிதிரு லோகத்திற்கு மேலான லோகம் ஸ்வர்க்க லோகம். அதில் ஆஜானஜாள் என்ற பெயருடன் கூடிய தேவாள், கர்மதேவாள், தேவாள், இந்திரன், பிருகஸ்பதி என்று ஐந்துவகை. இவ்வைந்துவகையில், ஆஜானஜதேவாள் என்பதாவது: ஆஜானம் என்றால் ஸ்வர்க்கலோகம். அதில், முதல் பூலோகத்தில் மனுஷர்களாக ஜனித்திருந்து, ஸ்மிருதியில் சொல்லப்பட்ட ஸந்தியாவந்தனம், ஔபாஸனம், வைச்வதேவம் முதலிய கர்மாக்களை நன்றாக அனுஷ்டானம்

செய்து அதின் பிராபவத்தால் தேவர்களாக ஜனித்தவர்கள், ஆஜானஜதேவாள் என்று சொல்லப்படும். கர்மதேவாள் என்பதாவது; அந்த ஸ்வர்க்க லோகத்திலேயே, முன்பு பூலோகத்தில் மனுஷர்களாக ஜனித்திருந்து சுருதி என்ற வேதத்தில் சொல்லப்பட்ட அக்னிஹோத்ரம், தர்ச பூர்ணமாஸ இஷ்டி, சாதுர்மாஸ்யம், முதலான கர்மாக்களை சரியாக அநுஷ்டானம் செய்து, அதின் பிராபவத்தால் தேவர்களாக ஜனித்தவர்கள். தேவாள் என்பதாவது முப்பத்து மூன்று பேர்கள். அதாவது பதினொரு ருத்திரர்கள், பன்னிரண்டு ஆதித்தர்கள், எட்டு வஸுக்கள், அசுவனி தேவதைகள் இரண்டு பேர்கள், இம்முப்பத்து மூன்று பேர்களும் சிருஷ்டியின் ஆதிகாலத்திலேயே ஹிரண்யகர்ப்பனால் லோகத்தின் உபகாரத்தின் பொருட்டு மனதால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். இம்முப்பத்து மூன்று பேர்களில் பன்னிரண்டு ஆதித்தர்கள் என்றவர்கள் பூலோகத்தில் புண்ணிய கர்மாக்களையே செய்து வருகிற ஜனங்களுடைய க்ஷேமத்தை அவரவர்களின் புண்ணியகர்மாவுக்குத்தகுந்தபடி கொடுக்கவல்லவர்கள். அதாவது பூலோகத்திலுள்ள மனுஷியர்களின் புண்ணிய கர்மாவைப்பற்றி தீர்மானிக்கும் சுவர்க்க லோகத்திலுள்ள ஸபையின் நியாயாதிபதிகள். பதினொரு ருத்திரர்கள் என்றவர்கள் பிராணிகளின் பாபகர்மாக்களைப்பற்றி தீர்மானிக்கும் ஸபையில் நியாயாதிபதிகள். எட்டு வஸுக்கள் என்றவர்கள் உபா

சனு மார்க்கத்தில் அதாவது பக்தி மார்க்கத்தில் இருந்து வரும் ஜனங்களுடைய பக்தியின் தாரதம்மியத்தை விசாரிக்கும் ஸபையின் அதிபதிகள். இரண்டு அசுவனீ தேவதைகள் பூலோகத்தில் ஸம்ஸாரத்தில் வைராக்கியத்தையடைந்து நிவர்த்தி மார்க்கத்தில் இருந்து வரும் பிராணிகளின் ஞானத்தின் தாரதம்மியத்தை விசாரிக்கும் ஸபையில் அத்யக்ஷர்கள். இந்திரன் என்பவர், இம்முப்பத்துமூன்று தேவர்களுக்கும் ஏற்பட்டதான காரியங்களை அவரவர்கள் தங்கள் தங்கள் காரியத்தை சரியாய்ச்செய்து வருகிறார்களாவென்று கவனிக்கும் மேலதிகாரி. அதாவது, இம்முப்பத்துமூன்று தேவர்களையும் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டதல்லவா? ஒவ்வொரு பிரிவிலுள்ள ஒவ்வொரு தேவதையும் அவரவர்க்கு ஏற்பட்டதான லோகத்தின் க்ஷேமத்தை சரியாய் நடத்தி வருகிறார்களாவென்று அவர்களைப் பரீக்ஷிக்க வல்லமையுள்ளவனாயிருப்பதோடுகூட அந்தந்த தேவதைகளை அந்தந்த காரியத்தில் நியமனமும் செய்யக்கூடியவன். பிருகஸ்பதி என்பவர் இந்திரனுக்குக்கூட ஹிதோபதேசத்தைச்செய்துவருகிற ஆசாரியன். ஸ்வர்க்கலோகத்திலுள்ள இவ்வைந்து விதமான பிரிவுகளில் முதல் பிரிவிலுள்ளவர்களான ஆஜானஜதேவாள் என்பவர்களுடைய ஆனந்தமானது மேற்சொன்ன நித்திய பிதிருக்களுடைய ஆனந்தத்தைக் காட்டிலும் நூறுமடங்கு அதிகமுள்ளது. இந்த ஆஜானஜதேவர்களுடைய ஆனந்தத்

தைக்காட்டிலும் காமதேவர்களுடைய ஆனந்தம் நூறு மடங்கு அதிகமுள்ளது. காமதேவர்களுடைய ஆனந்தத்தைக்காட்டிலும் தேவர்களுடைய ஆனந்தம் நூறு மடங்கு அதிகமுள்ளது. தேவர்களுடைய ஆனந்தத்தைக்காட்டிலும் இந்திரனுடைய ஆனந்தம் நூறு மடங்கு அதிகமுள்ளது. இந்திரனுடைய ஆனந்தத்தைக்காட்டிலும் பிருஹஸ்பதியினுடைய ஆனந்தம் நூறுமடங்கு அதிகமுள்ளது. இவ்விதம் சுவர்க்கலோகத்தில் ஏற்பட்ட சுகத்தின் தாரதம்மியம். இதற்கு மேலான லோகம் பிரம்மலோகமேயாம். இந்த பிரம்மலோகத்திற்கு அதிபதி பிரம்மாவென்று சொல்லப்படுகிறது. இவன்தான் நான்குமுகமுள்ளவன். ஒவ்வொரு முகத்திலிருந்தும் ஒவ்வொரு வேதத்தையும் லோகத்தில் பிரசுரிக்கச் செய்தவன். அவ்விதமான பிர்ம்மாவுக்கு 'விராட்' என்று வேதாந்தசாஸ்திரப்பிரகாரம் பெயர் ஏற்பட்டிருக்கிறது. இந்த விராட்டான பிரஹ்மாவினுடைய ஆனந்தம் பிருகஸ்பதியினுடைய ஆனந்தத்தைக்காட்டிலும் நூறுமடங்கு அதிகமுள்ளது. அந்த விராட்டான பிரஹ்மாவைத்தான் சிருஷ்டிகர்த்தாவென்று சொல்லப்படும். அந்த பிரஹ்மாவுக்கு மேலாக, எவ்விதம் கண்ணுடியில் ஒரு புருஷனுடைய பிரதிபிம்பம் தெரியுமோ அவ்விதமே, ஸத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற மூன்று குணத்தோடு கூடிய மாயையாகிற கண்ணுடியில் பிரதிபிம்பிக்கும் அளவற்ற ஆனந்த ரூபமான பிரஹ்மஸ்வரு

பத்தின் பிரதிபிம்பத்தை சூத்ர ஆத்மாவென்று சொல்லப்படும். வேதாந்திகள் இரண்ணியகர்ப்பனென்று சொல்வார்கள். இவ்விதம் மாயையில் வீசுகிற பிரம்ம பிரதிபிம்பரூபமான இரண்ணியகர்ப்பன் என்று பெயருடைய சகுணப்பிரம்மத்தின் ஆனந்தம் (விராட்) என்ற பிரம்மாவினுடைய ஆனந்தத்தைக்காட்டிலும் நூறு மடங்குள்ளது. இவ்விதம் மானுஷானந்தம் முதல் இரண்ணியகர்ப்பனுடைய ஆனந்தம் வரையில் பதினேரு விதமாக தாரதம்மியத்தை சாஸ்திரம் கூறுகிறது. இந்தப்பதினேரு விதமான ஆனந்தத்திலும் மேலான ஆனந்தம் இரண்ணியகர்ப்பனுடைய ஆனந்தமல்லவா? அவ்விதம் மேலான இரண்ணியகர்ப்பனுடைய ஆனந்தமும் அளவற்ற பிரஹ்மானந்தக்கடலினுடைய திவலையின் திவலையில் லேசம் என்று சாஸ்திரத்தால் கூறப்படுகிறது. இந்தப்பதினேரு விதமான ஆனந்தமும் அழிவுள்ள ஆனந்தம். பிரம்மரூபமான ஆனந்தம் ஒன்றே அளவற்றது, அழிவில்லாதது. உலகத்திலேயே எந்தெந்த பதார்த்தம் சுகத்தைக்கொடுக்கக்கூடியதென்று தோன்றுகிறதோ அந்தந்த பதார்த்தங்கள்தான் சுயமாகவே சுகத்தைக்கொடுக்கும் வல்லமையோடுகூடினவைகளல்ல. ஆனால் சுகரூபமான பிரம்மமானது எல்லாவற்றிலும் நிறைந்தவஸ்துவானபடியால் அதின் சம்பந்தத்தால் சுகத்தைக்கொடுக்கக்கூடிய வல்லமையுள்ளவைகள்போல அவிவேகிக்குத்தோன்றுகிறது. சுகம் என்ற வஸ்து பிரம்மம் ஒன்றே

தவிர மற்ற வஸ்துக்கள் ஆகாது. அதிருசியுள்ள கரும்பின் ரஸத்தை கீழான தகரப்பாத்திரத்தில் எடுத்து சாப்பிடுவதுபோல் சுகமாகிற பிரம்மம் என்ற ரஸத்தை புத்திரன், ஸ்திரீ, பணம், என்ற மூன்றுவிதமான நச்வரமான பதார்த்தங்கள் மூலமாக சாப்பிட யத்தனம் செய்கிறவன் அவிவேகியல்லவா? பிரம்மானந்த ரஸத்தை தானாகவே மற்றொரு பதார்த்தத்தின் அபேக்ஷையன்னியிலேயே சாப்பிட யத்தனம் செய்யவேண்டியதென்றதுதான் வேதாந்த சாஸ்திரத்தின் அந்தரங்கமான கொள்கை. சமுத்திரத்தில் அளவற்றதாயிருக்கும் ஜலத்தை ஒரு சிறிய பாத்திரத்தில் எடுத்தால், பாத்திரம் அளவுள்ளதானபடியால் அதிலுள்ள ஜலமும் அளவுள்ளதாகவும் ஏற்படுமல்லவா? அதுபோல் அளவற்றதான பிரம்மானந்தமாகிற கடலில் அளவுள்ள புத்திரன், பார்யை, பணம், என்பதாகிய சிறிய பாத்திரங்களால் எடுக்கப்படும் ஆனந்தமாகிற ஜலமும் அளவுள்ளதாக ஏற்பட்டுவிடுமல்லவா? தவிர இம்மூன்றுவித மான பாத்திரங்களின் தோஷத்தால் தோஷமுள்ளதாகவும் ஏற்படும். இதைக்காட்டிலும் பிரம்மானந்தக் கடலிலேயே ஆனந்தத்தையனுபவிப்பது மிகவும் உத்கிருஷ்டமல்லவா? ஆகையால் இவ்விதமான அளவற்ற பிரம்மானந்தத்தினுடைய லேசத்தில் லேசமென்று தேவதேவனான இரண்ணியகர்ப்பனுடைய ஆனந்தத்தைக்கூட சுருதியால் எப்பொழுது வர்ணிக்கப்படுகிறதோ அப்பொழுது இந்தப்பூலோகத்திலுள்ள மனுஷி

யர்களுக்கு சற்றேனும் ஆனந்தம் கிடையாதென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆகையால், இவ்விதமிருக்க புத்திரன், பணம், பார்வை, இவ்விதமான பதார்த்தங்களால் உண்டாகும் சுகத்திற்கு சமானமான சுகம் பிரம்மாத்மவனுபவத்தில் கிடைக்குமோவென்ற கேள்விக்கு சற்றேனுமிடமில்லையல்லவா? ஆகையால் பிரம்ம சுகமே பரமசுகம். ஆனாலும் பிரம்மசுகம் கிடைக்கும் வழி என்னவென்றால் அடியிற்கண்டவாறு.

பிரம்ம சுகமென்பது அமிருதக்கடல். இந்த அமிருதக்கடலானது, உப்புக்கடல், கரும்புரஸக்கடல், மத்யக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், இவ்விதம் ஆறுவிதமான கடலுக்கு அப்பாலுள்ளது? ஒரு கடலையே மனிதர்களால் தாண்டமுடியாமலிருக்கையில் ஆறுகடலையும் தாண்டிக்கொண்டு அமிர்தக்கடலை மனிதர்கள் கண்டுபிடிப்பது அரிதல்லவா? அவ்விதமே, புத்திரன், பார்வை, பணம், இம்மூன்று பதார்த்தங்களும் ஒரு சமுத்திரமாய் விளங்குகிறது. இவைகளைத்தாண்டுவதே அரிது. அவ்விதம் தாண்டினாலும், அப்பால் சரீரம் (அதாவது தன் தேகம்); அதைத்தாண்டுவது மிகவும் அரிது; அதைத்தாண்டினாலும், அப்பால் பிராணன்; அதற்கப்பால் மனது; அதற்கப்பால் புத்தி; அதற்கப்பால் ஒவ்வொரு பதார்த்தமாக பரிணமித்த மனோவிருத்தியில் பிரதிபிம்பிக்கும் ஆனந்தமாகிற ஆனந்தகோசம்; இவ்விதம் ஆறும், ஆறு

கடல்களைப்போல அளவற்றதான அபிமானமென்ற ஜலத்தால் நிறைந்தது.

அவ்விதமான ஆறுகடல்களைக்காட்டிலும் பிரஹ்மானந்தக்கடல் அப்பாலுள்ளது. ஆகையால் பிரம்மானந்தத்தை அடைவது அரிதுதான். ஆனாலும், எவ்விதம் மிகவும் திடமான தோணியை அடைந்தவன் ஆறு கடல்களையும் தாண்டிக்கொண்டு ஏழாவதான அமிர்தக்கடலையும் லகுவாய் அடைவனோ அவ்விதமே சத்குருவினுடைய உபதேசத்தால், புத்திராதிகள், அன்னகோசம், பிராணகோசம், மனோகோசம், விக்ஞானகோசம், ஆனந்தகோசம் என்ற ஆறுவிதமான அனாத்மவர்க்கங்களை மனதால் நினைக்காமல் இந்த ஆறுவிதமான அனாதமவர்க்கங்களும் எந்த பிரம்மம் என்ற வஸ்துவினிடத்தில் கல்பிதமோ அவ்விதமான பிரம்மாகாரமாகவே இந்த மனதை இடைவிடாமல் பரிணமிக்கும்படியாய்ச்செய்யக்கூடிய பாக்கியத்தையடைந்து, அவ்விதமான பிரம்மாகார மனோவிருத்தியாகிற தோணியைக்கைக்கொண்டால் இந்த ஆறுவிதமான அனாத்மவர்க்கங்களைத்தாண்டி ஆத்மரூபமான பிரம்மானந்தக்கடலை லகுவாய்க்கண்டு திவ்யசுகத்தையடைந்துவிடலாமென்பதில் யாதொரு ஸந்தேகமுமில்லை. தேகாதிகளில் அனாதியாயிருக்கும் அபிமானத்தை, தேகத்திற்கும் தனக்கும் யாதொருவிதமான ஸம்பந்தமும் ஏற்பட நியாயமில்லாதபடியால் அபிமா

னத்தை வைப்பதற்குக்காரணம் அஞ்ஞானமேதான் என்ற பாவத்தால் அபிமானத்தை ஒதுக்கித்தள்ளி விட்டு தேகத்தைக்காட்டிலும் தான் (ஆத்மா) வேறு பட்டவனுகிற பாவம் (எண்ணம்) எப்பொழுது ஏற்ப கிடுறதோ அப்பொழுதே பிரம்மானந்த ஆவிர்பாவம் ஏற்படுவது நிச்சயம். ஆத்மாவுக்கும் தேசத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று அடியிற்கண்ட வாறு விசாரம் செய்யவேண்டும். அதாவது

देहः।किं अन्नदातुस्वं निषेक्तुः मातुरेववा मातुःपितुः क्रेतुर्वा बलिनः अग्नेः शुनोऽपि वा

தே³ஹ꞉ கிம் அந்நதா³துஸ்ஸ்வம் நிஷேக்து꞉ மாது- ரேவவா மாது꞉பிது꞉ க்ரேதுர்வா ப³லிந꞉ அக்³நே꞉ ஶுநோऽபி வா |

देहः, தே³ஹ꞉, இந்த சரீரமானது ; स्वम्, ஸ்வம், தன்னைச்சேர்ந்ததா? अन्नदातुः, அந்நதா³து꞉, ராஜாவி னுடைய ; किं स्वम्, கிம் ஸ்வம், சொத்தா? निषेक्तुः, நிஷேக்து꞉, பிதாவினுடையதா? मातुः, மாது꞉, மாதாவினுடையதா? मातुःपितुः, மாது꞉பிது꞉, மாதாவைப்பெற்ற பாட்டனுருடையதா? क्रेतुः, க்ரே- து꞉, மாமனுருடையதா? अग्नेः, அக்³நே꞉, அக்கினியி னுடையதா? बलिनः, ப³லிந꞉, காக்கையினுடையதா? शुनोऽपि वा, ஶுநோऽபி வா, நாயினுடையதா?

அதாவது, இந்த தேஹம் என்ற சொத்தைப்பற்றி வேதாந்தமென்ற விவாதம் கோர்ட்டில் ஏற்பட்டு தீர்ப்பாயிருப்பது என்னவென்றால் அடியிற்கண்டவாறு:—

வேதாந்த சாஸ்திரமென்ற கோர்ட்டில் அதின் ஸித்தாந்த கர்த்தாவான ஸ்ரீசங்கராச்சாரியஸ்வாமிகளவர்களாகிய ஜட்ஜியின் முன்பாக இந்த தேகத்தைப்பற்றிய கேஸு நடந்து வந்தது. இந்த ஜீவன் இந்த தேகத்தை தான் அனுபவித்துவர அநேகவிதமான விரோதிகளின் தடையேற்படுவதால் அதைத்தீர்த்துக்கொள்ள இந்த தேகம் தன்னைச்சேர்ந்தது என்ற விஷயத்தையும், அதற்கு அத்தாக்ஷி அனாதிகாலமாய் தான் அனுபவித்து வருவதேதான் என்பதையும் நன்றாய் விளக்கி ஒரு பிராதுகாப்பி தயார்செய்து ஸகலத்தையும் அறிந்தவரான கர்மகாண்ட ஸித்தாந்தகர்த்தாவான ஜெயிமினி ஆசாரியாளாகிய வக்கீல் மூலமாக மேற்கண்ட கோர்ட்டில் கொடுக்கும்படிசெய்து, தான் அதில் வாதியாக இருந்துவந்தான். அவனுக்கு பிரதிவாதிகளாய் அந்த கேசை ஆக்ஷேபித்து ஜீவனுடைய அநுபவத்திற்கு விடக்கூடாதென்பதாய் பிரதிவாதம் செய்தவர்களில் முதல் பிரதிவாதி ராஜா. முதல் பிரதிவாதியினுடைய ஆக்ஷேபணையாவது:—நான் இந்த பூமண்டலத்திற்கு அதிபதியானபடியால் இந்த பூமண்டலத்திலுள்ள தானியங்கள் முதலான ஸகல சொத்துக்களும் என்னைச் சேர்ந்தது. ஆகையால் என்னுடைய அன்னத்தால்

ஜனித்து, என்னுடைய அன்னத்தாலேயே வளர்ந்து வருகிறதான இந்த தேகத்திற்கு யஜமானன் நானே. எனக்கே அதில் சர்வசுவாதந்தரியத்தை கோர்ட்டார் தயவுசெய்து ஏற்பாடு செய்யவேண்டும். வாதியான ஜீவனுக்கு ஒரு விதத்திலும் ஸம்பந்தமில்லை. அன்னத்தால் தான் இந்த தேகம் உண்டாகிறது. அதினால் தான் வளருகிறது என்ற விஷயத்தில் அடியிற்கண்ட ஸ்மிருதியே பிரமாணம்

अन्नात्संजायते देहः अन्नेनैव विवर्धते,

𑌅𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌸𑌂𑌜𑌾𑌯𑌤𑍇 𑌦𑍇𑌹𑌃 𑌅𑌨𑍍𑌨𑍇𑌨𑍈𑌵 𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇,

देहः, 𑌦𑍇𑌹𑌃, தேகமானது ; अन्नात्, 𑌅𑌨𑍍𑌨𑌾𑌤𑍍, அன்னத்தினாலே ; संजायते, 𑌸𑌂𑌜𑌾𑌯𑌤𑍇, உண்டாகிறது ; अन्नेनैव, 𑌅𑌨𑍍𑌨𑍇𑌨𑍈𑌵, அன்னத்தினாலேதான் ; विवर्धते, 𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇, விருத்தியடைகிறது.

ஆகையால், இந்த தேகம் அன்னத்தின் காரியம். அன்னத்திற்கோ ஸ்வாமி (யஜமானன்) நான் தான். ஆகையால், இவ்விதமான விஷயங்களை நன்றாய் விசாரித்து என்னுடைய அனுபவத்திற்கு இந்த தேகத்தை தீர்ப்பு செய்யவேணுமாய்க் கோர்ட்டார் முன்பாக வணக்கத்துடன் இந்த பிரதிவாதியால் பிரார்த்திக்கப்படுகிறது. இரண்டாவது பிரதிவாதி தகப்பன். அவனுடைய ஆக்ஷேபணையாவது: என்னுடைய வீரியத்தால்

இந்த தேகம் உண்டுபண்ணப்பட்டபடியாலும், அதில் கர்ப்பாதானம் என்ற சாஸ்திரத்தில் கூறிய சம்ஸ்காரத்தில் ஒன்றான கர்மாவே அத்தாக்ஷியானபடியாலும் அந்த கர்மாவைச்செய்தது நானே என்ற விஷயத்தில் இந்த வாதியின் தாயே முக்கியமான சாக்ஷியானபடியாலும், என் வசமே இந்த தேகம் ஏற்பட வேண்டியது ஆவசியகம். முதல் பிரதிவாதியான ராஜாவினுடைய ஆக்ஷேபணை சரியான ஆக்ஷேபணையல்ல. அன்னத்தால் தேகம் உண்டாகின்றதல்ல; அன்னத்தாலுண்டாகிற வீரியத்தால்தான் தேகம் உண்டாகின்றதென்பது அனுபவஸித்தம். அதற்கு பிரமாணம்.

पितृभुक्तान्नजात् वीर्यात् जातोऽन्नेनैव वर्धते ।

பித்ருபுக்தாந்நஜாத் வீர்யாத் ஜாதோऽந்நேநைவ வர்த்ததே ।

என்ற வாக்கியம் தான். வளர்வதற்கு அன்னம் முக்கியமான காரணமாயிருந்தாலும், தேகம் உண்டாவதற்குக்காரணம் வீரியம்தான். ஆகையால் கோர்ட்டார் தயவுசெய்து இது விஷயத்தை தெளிவாய் விசாரித்து என் வசத்தில் தேகத்தை விடும்படி செய்வதற்கு உத்தரவாகக்கோருகிறேன். மூன்றாவது பிரதிவாதியான தாயின் ஆக்ஷேபணையாவது: இந்த தேகத்தை நான் என்னுடைய குக்ஷியில் சுமார் பத்துமாத காலமாக தரித்துவிட்டுப் பின்பும் கொஞ்சநாள் பரியந்

தம் என் சம்ரக்ஷணையிலேயே இருந்து வந்த விஷயம் லோக பிரஸித்தம். ஆகையால் இந்த தேஹம் வாஸ்தவத்தில் விசாரிக்க என்னுடையதே. இவ்விதம் தாயின் ஆக்ஷேபணை. தாயைப்பெற்ற தகப்பனானவன், அதாவது, இந்த தேகத்திற்கு மாதாமகன் என்று சொல்லப்பட்டவன் நான்காவது பிரதிவாதி. அவனுடைய ஆக்ஷேபணையாவது: இந்த தேகத்தை குக்ஷியில் தரித்து உண்டுபண்ணின தாயின் தேகத்தை நான் உண்டுபண்ணினவனானபடியால், நான் உண்டுபண்ணின தேகத்தின் கிளையான தேகம் என் வசம் என்பதற்கு ஆக்ஷேபணை உண்டோ? ஆகையால் என்னுடைய ஸ்வாதீனத்தில் என் தேகத்தை தீர்ப்பு செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்விதம் நான்காவது பிரதிவாதியின் ஆக்ஷேபணை. ஐந்தாவது பிரதிவாதி, இந்த சரீரத்தை சுவீகாரம் செய்துகொண்டவன், அல்லது தான் தன்னுடைய சிலது திரவியத்தையும் பெண்ணையும் கொடுத்து இந்த சரீரத்தை தனக்கு சம்பந்தமுள்ளதாகச்செய்துகொண்ட மாமனார் என்றவராவது, இவ்விருவர்களும் இந்த சரீரம் தங்கள் தங்களால் இன்ன காலத்தில் திரவியமூலம் வாங்கப்பட்டபடியால் தங்கள் சொத்தென்பதே உண்மையென்பது இவர்களுடைய ஆக்ஷேபம். ஆறாவது பிரதிவாதி அக்னி. அவனுடைய ஆக்ஷேபணையாவது இந்த தேகத்தில் பிராணவாயு உள்ள பரியந்தம் என்னுடையது உன்னுடையது என்ற சுதந்தரம் பாராட்டிக்கொண்டு

வந்தாலும், பிராணவாயு விலகினவுடன் அதாவது கடைசிகாலத்தில் சுதந்தரம் பாராட்டிக்கொண்டிருந்தவர்களே என்னுடைய வசத்தில் விட்டுவிடுகிறார்கள் என்பது உலகத்தில் பிரஸித்தம். ஆகையால் ஒருவரும் தன்னுடையதென்று அபிமானம் வைக்கத்தகாத காலத்தில் நான் இந்த தேகத்திற்கு பரமபந்துவாக ஏற்பட்டுக் காப்பாற்றிவருகிறவனானபடியால் அதற்கு முன்காலத்திலும் என் சுவாதந்தரியத்தில் இருப்பது தான் நியாயத்திற்கு ஏற்றது. அவ்விதமே சமுகத்தில் தீர்ப்பாகவேணுமாய்க் கோருகிறேன். ஏழாவது பிரதிவாதிகள் காக்கைகளும், நாய்களும். அவைகளின் ஆக்ஷேபணையாவது, இந்த தேகம் தன் கிரகத்திலேயே அதிலும் தன்னைச் சேர்ந்தவர்களின் எதிரிலேயே மறிப்பதென்று நிச்சயமுண்டோ? அவ்விதம் நிச்சயமிருந்தால் கடைசிகாலத்தில் அக்கினியின் வசமாவது நிச்சயம். அவ்விதம் நிச்சயம் ஏற்படமுடியாதல்லவா? எங்கேயாவது தான் போனவிடத்தில் இந்த தேகத்திற்கு மரணமேற்படுவதாயிருந்தால் அந்த சமயத்தில் நாங்களே அதைக்காப்பாற்றி அதை புஜிக்கும்படி நேரிடுகிறதல்லவா? ஆகையால் என் வசமென்றே தீர்மானிக்கக் கோருகிறேன். இவ்விதம் ஏழுவிதமான பிரதிவாதிகள் வாதியான ஜீவனுடைய சொத்தல்ல இந்த சரீரம் என்றதில் அநேக யுக்திகளால் ஆக்ஷேபணை செய்து தன் தன் எதிர்வாதத்தால் தடுத்துவருகிறார்கள். இவர்களுக்கு ஞானகாண்டத்தை

பிரசுரம் செய்த பகவான் வியாஸாசாரியாள் என்ற மகானுபாவர் கோர்ட்டில் ஆஜராய் பிரதிவாதம் செய்தார். இவ்விதம் வாதியான ஜீவனுக்காக ஆஜராயிருக்கிற ஜெயிமினி ஆசாரியாளும் பிரதிவாதிகளுக்காக ஆஜராயிருந்த வியாஸாசாரியாரும் ஆகிய இவ்விருவரும் வாதிக்கவரும்பொழுது இரண்டுபேர்களுடைய வாதங்களிலும் யுக்திகள் உசிதமாகவே இருந்துவந்தன. அவரவர்களின் காரணம் சரியான காரணமாகவே இருக்கின்றன. இவ்விதமான கேசில் ஜட்ஜியான ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகளால் தீர்மானிக்கப்பட்டதாவது,

यदुद्दिश्य मिथो वादं कुर्वतोः युक्तयः समाः
तद्विभज्य तयोर्द्व्यादिति मन्वादि शासनम्
अविभज्य पदार्थश्चेत् किं जडश्चेतनोऽथवा
विचार्य तदभिःप्रायं चेतनो यदि लिख्यताम्
जडश्चेत् राजकीयः सः नात्रकार्या विचारणा

𑌯𑌦𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌮𑌿𑌥𑍋 𑌵𑌾𑌦𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍋𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑌯𑌃
𑌸𑌮𑌾𑌃
𑌤𑌦𑍍𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 𑌤𑌯𑍋𑌰𑍍𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑌿 𑌶𑌾𑌸𑌨𑌮𑍍
𑌅𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌚𑍇𑌤𑍍 𑌕𑌿𑌂 𑌜𑌡𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑍋
𑌽𑌥𑌵𑌾 ।
𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯 𑌤𑌦𑌭𑌿𑌃𑌪𑍍𑌰𑌾𑌯𑌂 𑌚𑍇𑌤𑌨𑍋 𑌯𑌦𑌿 𑌲𑌿𑌖𑍍𑌯-
𑌤𑌾𑌮𑍍 -

ஜடஶ்சேத் ராஜகீயஃ ஸஃ நாஶகாயஸ்ய விசா-
ரணா ॥

यत्, யத், யாதொரு வஸ்துவை; उद्दिश्य, உத்திஶ்ய, முன்னிட்டுக்கொண்டு; वादम्, வாதம், என்னுடையது, உன்னுடையது என்ற விவாதத்தை; कुर्वतः, குர்வதஃ, செய்துவருகிறதான வாதி பிரதிவாதிகளுடைய; युक्तयः, யுக்தயஃ, காரணங்கள்; समाः, ஸமாஃ, ஸமானமாகவேயிருக்கின்றனவோ; तत्, தத், அந்த சொத்தை; विभज्य, விபஜ்ய, இரண்டுபாகமாய்ச் செய்து; तयोः, தயோஃ, அந்த வாதி பிரதிவாதிகள் இரண்டு பேர்களுக்கும்; दद्यात्, தத்யாத், கொடுக்கவேண்டும்; इति, இதி, என்று; मन्वादिशासनम्, மந்வாதிஶாஸநம், மனு முதலான ஸ்மிருதி கர்த்தாக்களின் கட்டளை; अविभज्य पदार्थश्चेत, அவிபஜ்ய பதார்த்தஶ்சேத், அந்த சொத்தானது பிரிக்கக்கூடாத சொத்தாயிருந்ததேயானால்; सः, ஸஃ, அந்த பதார்த்தமானது; किं जडः, கிம் ஜடஃ, ஜடமா? अथवा चेतना, அதவா சேதநா, அல்லது சேதனமா? इति, இதி, என்று; विचार्य, விசார்ய, விசாரித்து; चेतना यदि, சேதநா யதி, சேதனமாயிருந்ததேயானால்; तदभिःप्रायम्, ததபிப்ராயம், அதினுடைய அபிப்பிராயத்தை; लिख्यताम्, லிக்யதாம், எழுதவேண்டும்; जडश्चेत्, ஜடஶ்சேத்,

ஜடமாயிருந்தால்; सः, ஸஃ, அந்த பதார்த்தமானது; राजकीयः, ராஜகீயஃ, ராஜாவைச் சேர்ந்தது; अत्र, அத்ர, இந்த விஷயத்தில்; विचारणा, விசாரணா, விசாரணையானது; न कार्या, ந கார்யா, செய்யக் கூடாது.

அதாவது, ஒரு சொத்தை உத்தேசித்து இரண்டு பேர்கள் தன்னுடையதென வாதம் செய்தார்களானல் அவ்விருவர்களுடைய காரணங்கள் சரிஸமானமாயிருந்தால் அவ்விருவர்களுக்கும் அந்த சொத்தை இரண்டுபாகமாய்ப் பிரித்துக் கொடுத்துவிடவேண்டும். பிரிக்கக்கூடாத சொத்தானல் அந்த சொத்து அறிவுள்ள சொத்தா? அல்லது அறிவில்லாத ஜடமான சொத்தாவென்பதை விசாரிக்கவேண்டும். அவ்விதம் விசாரித்து அறிவுள்ள சொத்தாயிருந்தால் அந்த சொத்தின் அபிப்பிராயப் பிரகாரமாகவே தீர்மானிக்க வேண்டும். அறிவில்லாத சொத்தாயிருந்தால் ராஜாங்கத்தில் சேர்த்துவிடவேண்டும் என்ற நியாயங்களைக் காரணமாய்க் காட்டி இந்த தேகம் என்ற சொத்தானது இப்பிரபஞ்சத்தை ஆண்டுவரும் சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம், என்ற மூன்று குணத்தோடு கூடின அவித்யை என்ற மகாராணியின் வசமாகவே தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் இவ்விதமான சாஸ்திரங்களின் அபிப்பிராயத்தை ஆராய்ந்து பார்க்க, இந்த தேகத்தில் சற்றேனும் தன்னுடைய

தென்று அபிமானம் வைக்க இடமுண்டோ? ராஜாங்கத்தின் சொத்தை தன்னுடையதென்று அனுபவிக்க முயற்சி செய்தால் அவனுக்கு சாஸ்திரப்படி தண்டனையல்லவா விதிக்கப்பட்டிருக்கிறது. 'அவித்யை' யென்ற மகாராணியைச் சேர்ந்த இந்த தேகமாகிற சொத்தை தன்னுடையதென்று பரிபாலனம் செய்ய முயற்சியை செய்கிறவன் தண்டிக்கத் தகுந்தவன் என்பதில் ஆக்ஷேபணையுண்டோ? ஆகையால் ராஜாவின் சொத்தை முன்னிட்டு, வாதியான ஜீவன் பிரதிவாதிகளான மேற்கண்ட ஏழுபேர்கள், இவர்கள் ஒருவருக்கொருவர் தன்னுடையது தன்னுடையது என்ற வாதங்களைச்செய்வது சட்டத்திற்கு மிகவும் விரோதமல்லவா? ராஜாவினுடைய சொத்தில் ஆசையை வைத்த வாதி ஒருவன், பிரதிவாதிகள் ஏழுபேர்கள், ஆகிய எட்டுப் பேர்களும்,

(राजकीयधनेच्छावान् सप्तजन्मसु रौरवम् ।
प्रयाति स बाहिष्कार्यः साधुभिः सत्सभांगणे ।।

𑌰𑌾𑌜𑌕𑍀𑌯 𑌧𑌨𑍇𑌚𑍍𑌛𑌾𑌵𑌾𑌨𑍍 𑌸𑌪𑍍𑌤𑌜𑌨𑍍𑌮𑌸𑍁 𑌰𑍌𑌰𑌵𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌸 𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 𑌸𑌾𑌧𑍁𑌭𑌿𑌃 𑌸𑌤𑍍𑌸𑌭𑌾𑌂𑌗𑌣𑍇 ॥

राजकीयधनेच्छावान्, 𑌰𑌾𑌜𑌕𑍀𑌯𑌧𑌨𑍇𑌚𑍍𑌛𑌾𑌵𑌾𑌨𑍍, அகாரணமாய் ராஜாவினுடைய சொத்தில் இச்சையுள்ளவன்;

सप्तजन्मसु, ஸப்தஜந்மஸு, ஏழு ஜன்மங்களில்; रौरवम्, ரௌரவம், ரௌரவம் என்ற நரகத்தை; प्रयाति, ப்ரயாதி, அடைகிறான்; सः, ஸ:, அவன்; साधुभिः, ஸாதுபி:, ஸாதுக்களால்; सत्समागम- ஸத்ஸ- மாகம, ஸாது ஸமாஜம் கூடும் இடத்தில் சேர்க் கவிடாமல்; बहिष्कार्यः, பஹிஷ்கார்ய:, தள்ளத்தகுந் தவன், அதாவது)

அகாரணமாய் ராஜசொத்தை யடையவேண்டு மென்று இச்சையை யடைந்தவன் கூட ஏழு ஜன்மாக்களில் நரகத்தை அடைகிறான். அவனிடத் தில் ஸாதுக்கள் பராமுகத்தையுடையவர்களாக இருக் கிறார்கள் என்ற அபிப்பிராயத்தைக் காட்டுகிற சட் டப்படி ஏழு ஜன்மா, மேற்கண்ட எட்டுப்பேர்களும், அகாரணமாய் ராஜசொத்தையடையவேண்டுமென்ற (பேராசை) பேராக்கிரஹத்தை அடைந்தகாரணத்தால் ரௌரவம் என்ற முதலாவதான காராக்கிரஹத்தில் வசிக்கத் தகுந்தவர்களென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விதமான விஷயங்களைச் சற்று ஆராய்ந்து பார்த் தால் தேகத்தின்மீது வைக்கும் அபிமானத்தால் உண் டாகும் பலனை நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். இவ் விதம் தேகாதிகளை துச்சமென்று பாவித்து அந்த தேகாதிகளில் மனதிற்கு பிரவிருத்தியை ஒரு சமயத் திலும் கொடுக்காமல், இந்த தேகாதிகள் எந்த ஆனந் தரூபமான பிரஹ்மத்தினிடத்தில் கல்பிதமோ, அந்த

ஆனந்தரூபமான பிரம்மத்தினிடத்தில் மனதைப் பிரவிர்த்திக்கச் செய்து, ஆனந்தரூபமான பிரம்மாகாரமாகவே பரிணமிக்கிறதான பிரஹ்மாநுசந்தானமாகிற தோணியைக் கைக்கொண்டால் புத்திரன், பார்யை, பணம், என்ற முதல் கடல், அன்னகோசமென்ற இரண்டாவது கடல், பிராணகோசமென்ற மூன்றாவது கடல், மனோகோசம் என்ற நான்காவது கடல், விக்ஞானகோசமென்ற ஐந்தாவது கடல், ஆனந்தகோசமென்ற ஆறாவது கடல், இந்த ஆறுவிதமான கடலையும் லகுவாய்த் தாண்டி அளவற்ற பிரஹ்மானந்தக் கடலை அடைந்துவிடலாமென்பது நிச்சயம். இவ்விதம் அளவற்ற பிரஹ்மானந்தக்கடலிலேயே எப்பொழுதும் வசித்துவரும் சுபாவமுள்ள ஜீவனை பலாத்காரமாக இந்த ஆறுவிதமான கடலுக்கப்பால் இழுத்துக் கொண்டுவந்து பிரமத்தை (மயக்கத்தை) யடையும்படி செய்கிற துஷ்டன் மனதல்லவா ?

(मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयो:

മന ഏവ മനുഷ്യാണാം കാരണം ബന്ധമോ-
ക്ഷയോഃ

बन्धमोक्षयो:, ബന്ധമോക്ഷയോഃ, பந்தமோக்ஷங்களின் कारणं, കാരണം, காரணம் ; मन एव, മന ഏവ, மனதுதான்.

அதாவது, மனது ஒன்றுதான் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணம் என்ற சாஸ்திரப்படி) இவ்

விதம் ஜீவனுக்கேற்பட்ட ஆபத்திற்குக் காரணம் மன திதான். அந்த மனதிற்குத்தான் மறுபடியும் ஆறு கடலுக்கப்பாலுள்ள அளவற்ற பிரம்மானந்தக் கட லுக்குப் போக வழியும் தெரியும். மனதைக் கைவிட் டால் ஜீவன் சுவயமாக தன்னுடைய பிரம்மானந்தக் கடலைப் போய்ச்சேர சக்தியில்லாதவன் என்பது நிச் சயம். ஆகையால் மனதைக்கைவிடாமல் அதை நயந் துகொண்டு ஸன்மார்க்கத்தில் திருப்பி அதினுடைய தயவால் தன்னுடைய பிரம்மானந்தக் கடலைப் போய்ச் சேர்ந்து தனது பிர்ம்மானந்தகடலை அடைந்தவுடன் அந்த மனதை உபேக்ஷித்தால் மறுபடியும் பிரம் மானந்தக் கடலினின்றும் வெளியில் இழுத்துக் கொண்டுவந்துவிடுவேனோவென்ற பயத்தால் அந்த பிரஹ்மானந்தக் கடலிலேயே மனதை முழுகும்படி செய்து அந்தக் கடலிலேயே மனோநாசம் வரும்படியும் செய்யவேண்டும்; இவ்விதம், எவன் யாதொரு பிரம் மத்தினிடத்தில் மனதை ஐக்கியப்படுத்தி தானே அந்த பிரம்மம், அந்த பிரம்மமே தான் என்றவனுப வத்தின் பரமகாஷ்டையை அதாவது எல்லையடைந் தவனோ, அவன் எந்த ஜாதியில் எந்த குலத்தில் பிறந் தவனும் இருந்தாலும் அந்த ஆனந்தரூபமான பிரம்ம மேயன்றி, பிர்ஹ்மத்தையறிந்தவனென்று சொல்லத்த குந்தவனல்லன். அவன் சுவயம் பிரம்மமேயானபடி யால் இந்திராதிகளான தேவர்களால் கூட பூஜிக்கத் தகுந்த பாதகமலத்தோடு கூடினவன். ஆனந்தரூப

மான பிரம்மத்தினுடைய லேசத்தில் லேசத்தால் அல்லவா இந்திராதிதேவர்களும் ஆனந்தத்தோடு கூடியவர்களென்று சொல்லப்பட்டது. இந்திராதி தேவர்கள் ஆனந்தரூபமான பிரஹ்மத்திற்கு கீழ்படிந்தவர்களல்லவா? மேற்கண்டபடி இவ்விதம் பிரம்மாநுபவத்தையடைந்தவன் எவனோ அவனும் சுவயம் பிரம்மமானதால் அவனுக்கு இந்திராதிதேவர்கள் கீழ்படிந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. எப்பொழுது இந்திராதி தேவர்களாலேயே பூஜிக்கத்தகுந்தவனோ இவ்விதமான மகான் அப்பொழுது மனுஷர்களால் அர்ச்சிக்கத்தகுந்தவன் என்பதை சொல்லவும் வேண்டுமோ? ஆத்மசுரூபத்தை அறிந்தவனை அர்ச்சிப்பதாலல்லவா மனிதர்களுக்கு ஐசுவரிய முதலான சகல புருஷார்த்தங்களும் சித்திக்கிறதென்று சுருதிகளாலும் கூறப்படுகிறது.

स्नातं तेन समस्ततीर्थसलिले दत्ता च सर्वावनिः
यज्ञानां च कृतं सहस्रं अखिला देवाश्च संपूजिताः ।
संसाराच्च समुद्धृताः स्वपितरः त्रैलोक्यपूज्योऽप्यसौ
यस्य ब्रह्मविचारणे क्षणमपि स्थैर्यं मनः प्राप्नुयात् ॥

സ്നാതം തേന സമസ്തതീർഥസലിലേ ദത്താ ച സ-
ർവാവനിഃ

യജ്ഞാനാം ച കൃതം സഹസ്രമഖിലാ ദേവാശ്ച
സംപൂജിതാഃ ।

𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌤𑍍 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑌰𑌃 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋-
𑌕𑍍𑌯𑌪𑍂𑌜𑍍𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑌸𑍌
𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌚𑌾𑌰𑌣𑍇 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂
𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥

यस्य, 𑌯𑌸𑍍𑌯, எவனுடைய; मनः, 𑌮𑌨𑌃, மனதானது; क्षणमपि, 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿, ஒரு நிமிஷமாவது; ब्रह्मविचारणे, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌚𑌾𑌰𑌣𑍇, பிரஹ்மத்தை விசாரிப்பதில்; स्थैर्यं, 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂, ஸ்திரமாயிருப்பதை; प्राप्नुयात्, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍, அடைகிறதோ; तेन, 𑌤𑍇𑌨, அவனாலே; समस्ततीर्थसलिले, 𑌸𑌮𑌸𑍍𑌤𑌤𑍀𑌰𑍍𑌥𑌸𑌲𑌿𑌲𑍇, இந்த உலகத்திலுள்ள சகலமான புண்யதீர்த்தங்களிலும்; स्नातं, 𑌸𑍍𑌨𑌾𑌤𑌂, ஸ்நானம் பண்ணப்பட்டது. सर्वा, 𑌸𑌰𑍍𑌵𑌾, ஸமஸ்தமான; अवनिः, 𑌅𑌵𑌨𑌿𑌃, பூமியும்; दत्ता च, 𑌦𑌤𑍍𑌤𑌾 𑌚, ஸத்பாத்திரத்தில் தானம் செய்யப்பட்டது; यज्ञानाम्, 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌮𑍍, அசுவமேதயாகங்களுடைய; सहस्रम्, 𑌸𑌹𑌸𑍍𑌰𑌮𑍍, ஆயிரமும்; कृतम्, 𑌕𑍃𑌤𑌮𑍍, செய்யப்பட்டது; अखिलाः, 𑌅𑌖𑌿𑌲𑌾𑌃, சமஸ்தமான; देवाश्च, 𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌚, தேவர்களும்; संपूजिताः, 𑌸𑌂𑌪𑍂𑌜𑌿𑌤𑌾𑌃, நன்றாய் பூஜிக்கப்பட்டார்கள்; स्वपितरश्च, 𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑌰𑌶𑍍𑌚, தன் குலத்திலுள்ள பிதிருக்களும்; संसारात्, 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌤𑍍, ஸம்ஸாரமாகிற கடலினின்றும்; समुद्धृताः, 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌃, நன்றாய் கரையேற்றிவிடப்பட்டார்கள்; असौ, 𑌅𑌸𑍌, இவனும்; त्रैलोक्यपू-

ஜ்ய:, த்ரைலோக்யபூஜ்ய:, மூன்று லோகத்திலுள்ள ஜனங்களால் பூஜிக்கத்தகுந்தவனாக; भवति:, ஹவதி, ஆகிறான்.

அதாவது ஒரு நிமிஷம் பிரம்மத்தை விசாரிப்பதில் மனதை லயப்படுத்துகிறவனுக்கு சகல புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலுண்டாகும் பலமும், சகல பூமண்டலம் தனது வசத்திலிருந்து அதை சத்பாத்திரத்தில் தானம் பண்ணுவதாலுண்டாகும் பலமும், ஆயிரம் அசுவமேதயாகத்தைச் செய்வதாலுண்டாகும் பலமும், சகலமான தேவதைகளையும் ஒரே சமயத்தில் பூஜிப்பதாலுண்டாகும் பலமும், தன் வம்சத்திலுள்ள பிதிருக்களை சம்சாரமாகிற சமுத்திரத்தினின்றும் கறைபேற்றிவிடுவதாலுண்டாகும் பலமும் மூன்று லோகத்திலுள்ள ஜனங்களால் தான் பூஜிக்கத்தகுந்தவனாக ஆகிறான் என்ற பெருமையும் ஏற்படுகிறதென்பது சாஸ்திரத்தால் தெரியவருகிறது அல்லவா? ஒரு நிமிஷம் பிரம்மவிசாரத்தைச் செய்தவனுக்கு இவ்விதம் பலமிருந்தால், அளவற்ற ஆனந்த ஸ்வரூபமான பிரம்மத்தினிடத்தில் மனதை லயப்படுத்தி தான் பிரம்மமாகவே விளங்கும் பரமானுபவத்தை யடைந்த மகானுபாவனுடைய பெருமையை சொல்லிமுடியுமோ? அந்த மகானுபாவன் பிரம்மமேதான். அவன் லோகபூஜ்ஜியன். லோககுரு. எனக்கு பரமகுரு என்றது என் புத்தி. அது நிச்சயம் தான். அதில்

யாதொரு சந்தேகமில்லை. அஹோ பாக்கியம். என்று இவ்விதம் ஸ்ரீ சங்கரகுருவானவர் தன்னுடைய வேதாந்த சித்தாந்தமான சுவானுபவத்தை பிரகாசப்படுத்த, சண்டாளவேஷதாரியான பரமசிவனும், சண்டாளவேஷத்தை மறைத்துக்கொண்டு சாக்ஷாத் பரமசிவனுடைய வடிவாக விருஷபாரூடராய் விளங்கிவந்தார். அந்த சமயத்திலேயே பரமசிவன் சண்டாளவேஷதாரியாய் இருந்துவரும் காலத்தில் தொடர்ந்து வந்த நான்கு நாய்களும் நான்கு வேதங்களாய் விளங்கிவந்தன. சங்கரகுருவும், "அஹோ! பரமசிவனால் இவ்விதம் வஞ்சிக்கப்பட்டேனல்லவா? என்று மிகவும் வருத்தத்தையடைந்து, ஆனாலும், யோகிகள் எந்த ஸ்வரூபத்தைக்காண சமாதியில் இன்னும் இருந்துவருகிறார்களோ அவ்விதமான பரமசிவனுடைய சாக்ஷாத்காரத்தையடையும்படி நேரிட்ட என் பாக்கியத்திற்கு ஈடான பாக்கியம் உண்டோ? நானே தன்னியன். நானே கிருதார்த்தன் என்று மனம் மகிழ்ந்து எதிரில் ஆவிர்ப்பவித்துவந்த பரமசிவனை பிரதக்ஷணம் செய்து நமஸ்காரம் பண்ணி அஞ்சலிபந்தத்துடன் கூட ஆனந்த பாஷ்பத்தை பிரவஹிக்கும்படி செய்துகொண்டு விநயத்துடன் நின்று வந்தார். பரமசிவனும். சங்கரா! உன் திவ்யானுபவத்தைப் பரீக்ஷிக்க நான் சண்டாளவேஷதாரியாய் வந்தேன். நீ சர்வக்ஞன். என்னுடைய பிரஸாதத்திற்கு நீயே அந்தரங்கமான பாத்திரம். உன் குரு

வான கோவிந்தபகவத்பாதரால் ஆக்ஞாபிக்கப்பட்ட பிரகாரம் சர்வக்ஞனான வியாஸாசாரியாரால் உண்டுபண்ணப்பட்ட பிரம்மசூத்திரமாகிற உதயகிரியில் நின்றும் உன் பாஷியமாகிற சூரியனை உதிக்கும்படி செய்து லோகத்திலுள்ள அஞ்ஞானமாகிற இருட்டை அதின் நின்றும் விலக்கி சகல ஜீவகோடிகளை கிருதார்த்தர்களாகச் செய்வதில் நீயே வல்லவன். பிரம்மசூத்திரத்தில் வியாசர் எவ்வித அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறாரோ, அவ்வபிப்பிராயம் உன் ஹிருதயத்தில்தான் விளங்கும் என்று சொல்லிவிட்டு நான்கு வேதங்களுடன் பரமசிவன் அந்தர்தானத்தையடைந்தார். ஸ்ரீ சங்கரகுருவும் இவ்விதம் பரமாச்சரியத்தைக் கண்டு பரம சந்தோஷத்துடன் சிஷ்யகோடிகளோடுகூட கங்கைவந்து சேர்ந்து, மாத்தியான் ஹிகஸ்நானம், அந்தகாலத்தில் செய்யவேண்டிய அநுஷ்டானங்களையும் செய்துவிட்டு மறுபடியும் சில தினங்கள் காசி க்ஷேத்திரத்திலே வசித்து, அங்கேயும் ஜனங்களின் சங்கத்தால் எற்படும் பாதையைப் பார்த்து பாஷியம் செய்வதற்கு எகாந்தமான ஸ்தலம் வேண்டுமென்ற எண்ணத்துடன் பிரம்மசூத்திரத்தைச் செய்த மகானுபாவனான வியாசருடைய ஆச்ரமம் எந்த இடத்திலேயோ அந்தப் புண்ணியமான பதிரிகாச்ரமத்தை சிஷ்யகோடிகளுடன் அடைந்தார்.